ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| |
|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1 |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2 |
| ☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் |

மாலை 5 | சென்னை, சுக்கில வருஷ ஆடிமீ 6உ (21—7—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 11

கொக்கோகம்! கொக்கோகம்!

என்று குதூகலத்துடன் கூவிக்கொண்டிருப்போர்க்கும்,
இன்பரச நூல் தேவை தேவையென்று
ஏக்கமுற்றெழுதிக்கொண்டிருப்போர்க்கும் ஆவலைத் தீர்த்து
ஆனந்தத்தை ஊட்டும் அதியற்புத நூல்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

அந்நூல் எது?

## இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(மூன்றாம் பதிப்பு)




அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் 400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூபா 2.

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

உலகத்தில் ஆண்மக்களும், பெண்மக்களும் ஒரே விதமான அன்புடையவர்களாய் ஒருவர்மீதொருவர் உண்மைக்காதல் கொண்டு, ஒருவரை யொருவர் மணந்து கூடிக் களிப்புற்று, நற்சந்ததிகளைப் பெற்று, இல்லற நீதிகளை வழுவாமற் செய்து வாழ்ந்து வருவதே இன்ப வாழ்க்கையாம்; இத்தகைய வாழ்வை அடைதற்குரிய மார்க்கங்களை உணர்த்து கொள்வதற் கேதுவாக நம் முன்னோர்கள் கொக்கோகம் முதலிய மதன நூல்களையும், வேறு பல அகப்பொருள் நூல்களையும் தமிழிலும், வடமொழியிலும் செய்துவைத்திருக்கின்றனர். அன்னிய நாட்டார்களும், அராபி, இந்துஸ்தானி, கன்னடம், தெலுங்கு, நாகரம், மராட்டி, இங்கிலீஷ், பிரெஞ்சு முதலிய பற்பல பாஷைகளிலும் இத்தகைய இன்பரச நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கின்றனர். எனினும் நம் தமிழ் நாட்டிலுள்ளவர்களிற் பெரும்பான்மையோர் அந்நூல்களைக் கிரமப்படி கற்றுக் கொள்ளாததால் இன்ப வாழ்க்கையின் இரகசியங்களைத் தெரிந்துகொள்ளாதவர்களாய்க் கலவியின்பத்தை இழந்து கவலைகொண்டு துன்புறுகின்றனர்; மணஞ்செய்தும் மகிழ்ச்சியின்றி வருந்துகின்றனர்; மனைவி யிருந்தும் மைந்தரைப் பெறுமல் வாடுகின்றனர்; புருஷனிருந்தும் புத்திரரைப் பெறுமல் புலம்புகின்றனர்; பணமிருந்தும் குணமில்லாமல் பரிதபிக்கின்றனர்.

ஆதலின், இப்போர்ப்பட்டவர்கள் இக்குறைகளினின்றும் நீங்கி காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்ப மார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ் நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின்கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மனக்கிரமங்களை அநுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவர்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம். விலை ரூ. 2.

(5) விலாசம்:— கருணாநிதி டிப்போ, 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

சுக்கிலளூ 15-ம் வருட ஆரம்பம் ஆடி மீ 1வ

# ஆனந்தபோதினி

64 பக்கங்களுடனும், முகப்பு ஆப்டோன் படங்களுடனும், லயன் பிளாக்குகளுடனும் வெளிவரும்

## ஓர் முதல்தர மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

**இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது.**


இதில் நமது தேசாசார இலௌகீக வைதீக விஷயங்களும், மாதர், சிறுவர், சிறுமியர்களுக்குத் தக்க நற்போதனைகளும் தேசாபிவிருத்திக்கு அவசியமான பல விஷயங்களும் பிரசுரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டாரின் பூரண அன்பைப் பெற்றிருக்கும் இச்சஞ்சிகை ஒவ்வொருவரும் அவசியம் வாசித்தற்குரியது.

**மாதிரிகாபி இனாம்.** வருட சந்தா தபாற்கூலி யுட்பட உள்நாட்டிற்கு ரூ. 1 0 0 வெளிநாட்டிற்கு ரூ. 1 4 0

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

எங்கள் வ்சேஷ க்ளைந்த் விலை வ்ட்டை.

**இனாம்! இனாம்!!**



பூனையில் இரிடியம் உள்ள 14 காரட் தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம். எங்கள் ரோல்டு கோல்டு "கோர்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமான [illegible]

உடனே எழுதுங்கள்.
ஜினைட் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு,
(4 எப்) மதராஸ்.

## முன்னேற்றம்

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.

இதன் ஆசிரியர்-வே. சி. நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, சிலிகிரோட், சிங்கப்பூர்

## ப கு த் த றி வு


கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாட்டுக்கு ரூ. 0 12 0.

விலாசம்:— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

ரூ. 2—14—0 ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் வெறும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் பக்ஷிகள் முதலிய சித்திர வேலைகள் வெகு அழகாகச் செயலாம். விலை 1-க்கு ரூ. 2—14—0.

கனடிடன் வாட்சு பிபின்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-டி.) ஜார்ஜ் டவுன், மதராஸ்.

தங்க மெடல்கள் பெற்ற

**மலையாள நாட்டுத்துணிகள்**

இரணியல் நேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து, துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் நெசவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O,
Travancore.

## கு ம ர ன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0

## ரேப்பிபவுடர்

காப்பியை விடச் சிறந்தது

இஷ்டப்படி அநுபவிக்க



தினம்

# இன்பம்

அளவிலடங்காத அன்பு

சுகம்! சுகம்!! சுகம்!!!

½ சேர் டின் 3-க்கு ரூ. 1-8-0
டஜன் ½-க்கு ரூ. 2-8-0

முன்பணம் அனுப்பியவர்களுக்கு வி. பி. சார்ஜ் இனாம்.

S. V. ராஜப்பா,
ரேப்பிபவுடர் பாக்டரி, பழனி.

# சுயமரியாதைச் சங்கம் ஏன் வந்தது?

(கைவல்யம்)

பொதுத் தம்மைப் பரிசுத்தம், சித்தசுத்தி, அன்பு என்னும் குணங்கள் நிறைந்த பெரியவர்களைக் குற்றம் சொல்லவோ அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டதும், சொல்லப்பட்டதுமான உண்மைகளை அழிக்கவோ சுயமரியாதைச் சங்கம் வந்ததல்ல. சுயமரியாதைச் சங்கம் யாதொன்றையும் புதிதாக உங்களுக்கு உபதேசிக்க வந்ததுமன்று வித்தியாசமில்லாமல் நியாயத்தோடு அன்பு நிறைந்த பெரியவர்கள் சொன்னதை விட்டு, உண்மை மறைந்து அந்த இடமெல்லாம் கொடுமையும் வித்தியாசமும் நிறைந்து அதனால் சமூகம் சலித்துக் கிடப்பதைச் சொல்லவந்திருக்கிறது.

சுயமரியாதைச் சங்கம் ஏழைகள் விஷயத்திலும், ஞானமில்லாதவர் விஷயத்திலும் நம் பெரியவர்களுக்கிருந்த ஆச்சரியமான அனுதாபத்தையும், அதைக் காட்டும் நேர்வழியான சாஸ்திரங்களையும் மறைத்து அவற்றிற்குப் பலபேதம் கற்பித்து பலரைத் தாழ்வானவர்களென்று ஏடெழுதி அதை நிலைநிறுத்தினவர்களையே பெரியவர்களென்று சொல்லிப் பாமரர்களை ஏமாற்றித் தமக்கனுகூலமாகத் தங்கள் காரியங்களுக்கு ஒரு சிலர் அடிமை வாழ்க்கையை ஏற்படுத்தி விட்டார்கள் என்பதை சமூகத்திடம் சொல்ல வந்திருக்கிறது.

சகல சக்திகளும் ஒரு மூல சக்தியின் விகாரங்களே என்று சொல்லும் எல்லாச் சமய தத்துவங்களிலும் அழிவில்லா நித்திய வஸ்துவாய் உள்ளவர் எவரோ, எப்பொழுதும் மாறிக்கொண்டேயிருக்கும் உலகத்திற்கு நிரந்தர ஆதாரமாக வுள்ளவர் எவரோ, சகல ஆத்மாக்களும் எந்த ஒரே பரமாத்மாவின் பிரதிபிம்பங்களோ, எதையறிந்தவுடன் எல்லாம் பூர்த்தி யடைந்து விடுகிறதோ அதுவே கடவுளென்று சொல்லுகிறவர்களுக்கும் அவர்கள் தத்துவ சாஸ்திரங்களுக்கும் துணைபுரியவே வந்திருக்கிறது.

அந்தக் கடவுள் திருஞானசம்பந்தர் சொல்லியிருப்பதுபோல முப்புரி நூலணிந்த பார்ப்பன ஜாதியுடையவென்றும், உயர்ந்த ஜாதியென்று சொல்லிக்கொள்ளும் சைவனுக்கோ வைணவனுக்கோ பிரமாவின் முகத்திலிருந்து வந்த பார்ப்பானுக்கோ சிவபெருமானின் ஐந்து முகங்களுள் நடுமுகத்திலிருந்து பிறந்த ஆதிசைவனுக்கோ கடவுள் ஒன்று விட்டதாயாதியல்லவென்றும், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் கடவுளிருக்குமிடமென்று கருதப்படும் கோவில்களில் வந்தப் பாத்தியதையைக் கொண்டு போகிறார்களோ அதுபோல தாழ்ந்தஜாதிக்காரர்களென்று கருதப்படுகிறவர்களுக்கும் கடவுளிருக்குமிடங்களில் அதே பாத்தியதை கொண்டாட உரிமை உண்டென்றும், அது எதையும் தனதாகக்கொள்ளும் கடவுளுக்கும் சத்தியத்தையுடைய சமயத்திற்கும் நியாய மென்னும் ராஜநீதிக்கும் பக்தர்களின் ஜீவகாருண்யத்திற்கும் அன்பென்னும் பொதுச்சொல்லுக்கும் சமாசமென்னும் தேசியத்திற்கும் ஒத்ததென்று சொல்லவே வந்திருக்கிறது.

மேல் ஜாதியார் என்று சொல்லப்பட்டவர்களின் காலின்கீழ் அகப்பட்டு நசுங்கும் ஏழைகளுக்கு அவர்களின் உண்மை நிலை இன்னதென்று சொல்லியும்பலமுள்ளவருக்கும் பலவீனர்களுக்கும் மேலோருக்கும் கீழோருக்கும் எல்லோருக்கும் பொதுவில் ஒரே பரம்பொருள் சாட்சியாய் விளங்கி நற்பதவியும் உயர் நிலையும் அடைவதற்கு எல்லாருக்கும் அதிகார முண்டென்று அது வெளிப்படுத்துகிற சங்கதியை ஒவ்வொருவரும் அதாவது ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் பிறப்பு, பலம், பலக்குறைவுஎன்றவேற்றுமையின்றித்தெரிந்து கொள்ளும்படியாகச் சொல்லவுமே சுயமரியாதைச் சங்கம் வந்திருக்கிறது.

வாலிபர்களே! எழுந்திருங்கள்! கண்விழித்துக் கொள்ளுங்கள்! தீர் பலத்தை புண்டாக்கும் எந்த நம்பிக்கையையும் விட்டு விடுங்கள் என்றும் மோகத்தை உண்டாக்கி உங்களை அடிமைப்படுத்தும் எந்த சாஸ்திரமும் கடவுளால் சொல்லப்படவில்லையென்றும், உங்கள் பகுத்தறிவால் தீர்மானம் செய்து உங்கள்பொறுமைகளைக் காட்டிஉங்களுக்குள் இருக்கும் ஈசுவரசொரூபத்தின் வேலைகளைச் செய்யுங்கள் என்றும் சொல்ல வந்திருக்கிறது.

துன்பமும் அஞ்ஞானமும் ஞானக்குறைவும் எவ்வெவ்விடங்களில் இருந்தபோதிலும் அவற்றிற்குக் காரணமென்னமென்று விசாரித்து வேற்றுமை பாராட்டுவதாலேயே எல்லாத் துன்பமும் விளைகிறதென்று தெரிந்து எல்லா மொன்றெனும் ஸம திருஷ்டியால் அத்துன்பம் நீங்கி நன்மை உண்டாகிறதென்றும், தத்துவ சாஸ்திரங்களையும் அதற்கு இப்பொழுது உதவி புரிந்துவரும் விஞ்ஞான சாஸ்திரங்களையும் எடுத்துக்காட்டி விஸ்தாரமான நமது தேசத்திலுள்ள தாழ்ந்த ஜாதிக்காரர்களென்னப் பட்டவர்களுக்குள் உள்ள இளைஞர்களின் ஆண்மைகளை சமயப் பேரால் நசுக்கி அன்னிய தேசங்களில்போய்மடிவதையும் தடுத்து, மற்ற மதங்களில் போய்ச் சேர்ந்து நமக்கே விரோதிகளாய் வந்து நம்மைப் பயமுறுத்தும் மார்க்கத்திற்கு விடாமல், அவர்களும் மனிதர்கள்தான் என்பதை உயர்ந்த ஜாதி ஆசார சமய வாதிகளுக்கு நீங்கள் செய்வது தெய்வ விதிக்கு விரோதமென்று எடுத்துக் காட்டவே வந்திருக்கிறது.

சமய ஒழுக்கமென்பது உள்ளன்புடன் எம்பெருமானது திருவடிகளிலே செய்யப்படும் நிர்மலமான பக்தியேயன்றி வெறும் வெளிச் சடங்குகளல்லவென்றும், ஒருவன் மனமொழி மெய்களில் பரிசுத்தனாயிருந்தாலன்றி அவன் கோயிலுக்குப் போய் கும்பாபிஷேகம் செய்து காணிக்கை கப்பம் செலுத்தி அவனைத்தொடாதே இவனுடன்சாப்பிடாதே திரை மறைவிற்குள்ளிருந்து சாப்பிடு என்னும் விவேக மற்ற தன்மைகளால் ஒரு பலனுமில்லை என்றும் சொல்ல வந்திருக்கிறது.

அந்தரங்க உபாசனையும் அகத்தூய்மையுமே உண்மையானவை; இந்த உபாசனைக்கு சித்த சுத்தியும் பரோபகாரமுமே சாரமென்றும், வறியோரிடத்திலும் மெலிந்தோரிடத்திலும் நோயால் வருந்துவோரிடத்திலும் எவன் கடவுளைப் பார்க்கிறானோ அவனே உண்மையான ஆஸ்திகனென்றும் சொல்ல வந்திருக்கிறது.

உலக போகங்களை விட்டு தன்னலம் கருதாது பிறருக்கு உழைப்பவனே பிராமணனென்று சாஸ்திரங்கள் சொல்லுகையில் அப்படியில்லாமல் உலக போகங்களை யெல்லாம் அனுபவித்துக் கொண்டு மற்றவர்களின்முன்னேற்றத்தை தந்திரத்தால் தடுத்து வக்கீல் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொண்டு வருணாச்சிரம மகாநாடு கூட்டும் பார்ப்பனர்களே! நீங்கள் எந்த விதத்தால் பிராமணர்கள்? என்று கேட்கவும் வந்திருக்கிறது.

பிரமதேவனால் வேதமென்ற வாக்கானது பிராமணர்களுக்கு அளிக்கப்பட்டது; இவர்கள் பேராசையினால் அந்த வேதத்தை அறியக்கூடாத நிலைமை அடைந்து வேதத்தில் கூறிய தருமத்தை யெல்லாம் மறந்து வேதங்களை இங்கிலீஷ் படிப்பாலும் விரதங்களை வெங்காய சாம்பாராலும் நியாயங்களை வக்கீல் வாதத்தாலும் நாசமடையச் செய்து எந்த பிராமணன் பிராமணப் பிறவியானது ஒழுக்கங்களுக்கும் தருமத்திற்கும் ஞானத்திற்கும் சிறந்ததாகப் படைக்கப் பட்டதென்று தெரிந்துகொள்ளவில்லையோ அவர்கள் கீழானவர்களாகிறார்களென்றும், அவர்கள் அறிவும் விசேட அறிவும் நாசமடைந்தவர்களாய் தம்மிஷ்டம் போன்ற ஆசாரமும் செய்கையுமுள்ளவர்களாகி பிசாசர்களும் ராக்ஷதர்களும் மகாபாவிகளும் பிரேதர்களுமாய்ப் புலவிதமான மிலேச்ச ஜாதிகளுமாகி விடுகிறார்கள் என்றும் சொல்லியிருக்கும் வேதஸ்மிருதி இதிகாச புராணங்களின் வாக்கியங்களை எடுத்துக் காட்டவே வந்திருக்கிறது.

ஜாதக கருமம் முதலிய ஸம்ஸ்காரங்களைப் பெற்றவனும், பரிசுத்தனும், வேதாத்யயனஞ்செய்பவனும் ஆறு கருமங்களில் நிலைபெற்றவனும், பரிசுத்தியிலும் தருமம் ஆசாரத்திலும் நன்றாக இருப்பவனும், அதிதிகளுக்கிட்ட மிச்சத்தைப் புசிப்பவனும், சத்தியத்தைப் பெரிதாகக் கொண்டவனுமாய் சத்தியமும், தானமும், துரோக மின்மையும்; குரூர மின்மையும், பொறுமையும், தயையும், தவமும், எவனிடம் காணப்படுகின்றதோ அவனே பிராமணனென்று இருடிகள் சொல்லியிருக்கும் சாஸ்திர வாக்கியங்களை எடுத்துக் காட்டவே வந்திருக்கிறது.

வேதத்தில் நம்பிக்கை வைத்து எல்லாப் பிராணிகளுக்கும் மித்திரனாக இருக்கும் வழியில் செல்லுகிறவனாயிருந்து இந்த உலகில் ஆசைப்படக்கூடியப் பொருளைத் தன்னிஷ்டப் புத்தியால் இந்திரியங்களை வென்றவனாகவிருந்து இவ்வுலகம் சொர்க்கவுலகம் ஆகிய இரண்டிலும் அசைவில்லாத பதத்தையடையவேண்டி ஜெயிக்க முடியாத பதத்தை ஜெயிக்க விருப்பமுள்ளவனாய் எப்பொழுதும் தவமும் இந்திரியங்களின் அடக்கமு முள்ளவனாய் ஆசைக்குக் காரணமானவைகளில் பற்றில்லாதவனாய் தியானத்திலிருந்து மனதைப் பிராணனில் அடக்கி பிராணனை பிரமத்தில் அடக்கி வேறொன்றையும் சிந்தியாமல் மோக்ஷத்தையே சிந்திக்கும் பிராமணனே பிராமணன்; அப்படியல்லாமல் பிராமணனென்று தன்னைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பாரெல்லாம் சாஸ்திரத்திற்குவிரோதிகள்என்றும்,மற்றவர்களை ஏமாற்றித் தன் உயர்விற்கும் காலக்ஷேபத்திற்கும் வேஷம் போட்டுத்திரியும் பார்ப்பாரென்றும் சொல்லவே வந்திருக்கிறது.

மேற்சொன்ன யோக்கியதையில்லாமல் ஜாதியால் பிராமணனென்று வரும் பைடிலவிரதமுடைய வேதியன், பகவிருத்தியுடைய பாப தேவலகன் இவர்களுக்குத் தானம் கொடுத்தவர்கள் இவன் தக்கவன் இவன் தகாதவன் என்று உணராத குற்றத்தால் தான் செய்த தான தருமங்களைக் கெடுத்து தன் செல்வத்தையும் போக்கி தன் குடும்பத்தையும் அழித்து தானும் நரகத்திற்குப் போகிறான் என்னும் ஸ்மிருதிகளின் வாக்கியங்களை எடுத்துக்காட்டவும் வந்திருக்கிறது.

"எவ்வெவ்விடங்களில் நீதிகுன்றி அநீதி தலை எடுக்கின்றதோ அவ்வவ்விடங்களில் தருமத்தை நிலை நிறுத்தும்பொருட்டு நான் தோன்றுகிறேன்" என்று "பரம்பொருள்" சொன்ன வார்த்தையை நீங்கள் நம்புவதானால் அந்த வார்த்தைகளே சுயம

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்.

## ராமாயணம் - ஆரணியகாண்டம்

(கட்டுரை—8)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கம் 57 முதல 60 முடிய)

இராமன் மாரீசனாகிய மானைக் கொன்றுவிட்டு வேறொரு மானைக் கொன்று அதன் புலாலை எடுத்துக் கொண்டு வரும்போது ஒரு நரி ஊளையிட்டது. அதைக் கேட்டு இராமன் திடுக்கிட்டுப் பயந்தான். "கரன் முதலியோரை நான் கொன்றது முதல் அரக்கர் எனக்குக் கேடு சூழச் சமயம் பார்த்திருக்கின்றனர். சீதைக்கு என்ன நேர்ந்ததோ?" என்று அவன் எண்ணினான். அவன் தன் முன் கவலையுடன் வந்த இலக்குவனைக் கண்டு கவலை கொண்டு சினம் பொங்க, 'அடே! சீதையைத் தனியே விட்டு வந்தனையே! அவளுக்கு என்ன நேர்ந்ததோ? நான் மிகவும் சிரமப்பட்டு மாரீசனைக் கொன்றேன். அவன் உங்களை ஏமாற்றி விட்டான். சீதையில்லாமல் நான் உயிர் வாழமாட்டேன். சீதை இறந்து, அவளைப் பிரிந்த துக்கத்தால் நானும் இறந்து நீ தனியே அயோத்திக்குப் போகும்போதாவது கைகேசி மகிழ்ச்சியடைவாளா? என் தாய் துன்பமடைவாளோ, என் செய்வேன்? ஐயோ! கானைச் சேர்ந்தவர்கள் இதற்குள் சீதையைக் கொன்று தின்றிருப்பார்கள்!" என்று புலம்பிக் கொண்டு தம்பியுடன் குடிசையை அடைந்தான். அவன் குடிசையுட் சென்று பார்த்ததும் தன் மனைவியைக் காணவில்லை. அவன் வெளியே வந்து அடக்க முடியாத துக்கத்தால் "நீ இருக்கின்றாயென்றல்லவோ வந்தேன். நீ ஏன் அவளைத் தனியே விட்டு வந்தாய்?" என்றனன். இலக்குவன், "நான் எவ்வளவோ தேர்தல் கூறியும் அவள் என்னை நோக்கி 'நீ என்னைக் கைப்பற்ற நினைத்து நீயும் பரதனும் ஒன்றுகூடி இராமனைக் கொல்ல உடன்வந்தாய் போலும்' என்று பலவாறு இகழ்ந்தாள். அதனாலே பொறுக்க முடியாமல் வந்தேன்" என்றனன். இராமன் சீதையைப் பிரிந்ததால் புத்தி கலங்கி "எப்படியிருந்தாலும் நீ அவளை விட்டு வந்தது முற்றிலும் பிசகு. அறிவுள்ளவன் ஒரு பெண் சொன்ன சொல்லைப் பொருட்படுத்துவானா? என் கட்டளையை நீ மீறினாய். நீ வேறு எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்றியிருக்கவேண்டும். மாரீசன் நான் விளையாட்டாக எய்த அம்பால் மடிந்தான்" என்றனன்.

குடிசையில் மான் தோல் முதலிய பொருள்கள் சிதறிக் கிடந்தன. இராமன், "ஐயோ! என் மனைவியை யாரோ கொன்றுவிட்டான்" என்று அங்கிருந்த மரங்களையும் மிருகங்களையும் உயிருள்ளவைகளைப் போல வினவிப் புலம்பினான். இராமன் அடிக்கடி கதறிக்கொண்டு காடுகளில் நெடுக ஓடினான்; காணாது மறுபடியும் தேடினான். மறுபடியும் அவன், "நான் என்ன செய்யப் போகிறேன்" என்று கதறினான். இலக்குவன் அவன் படும்பாடு கண்டு பொறுக்காமல், "அண்ணா! கவலைப்பட வேண்டாம். சீதை காடுகளில் அலைவதில் விருப்பமுடையவள். அவள் எங்காவது வேடிக்கையாக அலைந்து கொண்டிருப்பாள். அவள் குளத்தில் ஆற்றில் நீராடியிருப்பாள். இல்லையானால் நாம் அவளைத் தேடிப் பிடிக்கட்டுமென்று எங்காவது ஒளிந்து கொண்டிருப்பாள். ஆதலின் இன்னும் தேடுவோம்" என்றனன். அதனால் இராமன் மனம் தேறி தம்பியுடன் தேடத்தொடங்கினான். தம்பி கூறியபடியே அவள் போகக்கூடிய இடங்களிலெல்லாம் அவன் தேடினான். அவன் அவளை அங்கெல்லாம் காணாமல் கதறினான். இலக்குவன் "சீதையைத் தூக்கிச் சென்றவனைக் கண்டு கொன்று மீட்பீர் எனத் தேற்றினான். இதனால் அவன் தெளியாமல் மூர்ச்சையடைந்து பெருமூச்சு விட்டு நெடுநேரம் கழித்துத் தெளிந்து பழையபடியும் அலறிக்கண்ணீர் வடித்தான். தம்பி பலவாறு தேற்றியும் அவன் புலம்பினான்.

இராமன், "ஐயோ! சீதே! நீ இக்கதியடைந்தது கைகேசியின் எண்ணப்படி ஆயிற்று. நான் உயிரை விட்டு விடுகிறேன். தம்பி! நீ அயோத்திக்குப் போய் பரதனை அரசாள நான் சொன்னதாகச் சொல்" என்று புலம்பி அழுது அலைந்தனன். இராமன் மறுபடியும் பெருமூச்சு விட்டு அழுது, "நான் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பயனாலேயே இவ்வாறு வருந்துகின்றேன். இக்காட்டில் நானும் சீதையும் அளவற்ற சுகத்தை அனுபவித்திருந்தோமே. நான் சீதையிடத்தில் வைத்திருந்த அன்பைப் போல உலகத்தில் ஒருவனும் ஒரு பெண்ணிடத்தில் வைத்திருக்கமாட்டானென்றும், ரதிகேளிகளில் நான் மகா நிபுணனென்றும் கர்வமடைந்திருந்தேன். முன்பு அயோத்தியில் இருக்கும்போது என் பெற்றோர்களுடன் வாழ்ந்தபடியால் கூச்சமில்லாமல் மனம் போனபடி என்னுடன் அனுபவிக்க முடியவில்லை. காட்டிற்கு வந்தபின் எவருடைய நிர்ப்பந்தமுமில்லை. எங்கள் மனம் போனபடியெல்லாம் அனுபவித்தோம். எந்த அரக்கர்கள் அவள் கழுத்தைக் கடித்துக் குடித்தார்களோ? கண்ணுக்கு மிகவும் இனிப்பை விளைப்பதும் மிக்க மேலானதுமாகிய செஞ்சந்தனத்திற்கே எப்பொழுதும் தகுந்தவைகளும் உருண்டு அழகாயிருப்பவைகளுமாகிய என் பிராண நாயகியின் முலைகள் இப்பொழுது அரக்கரால் உண்ண அறுக்கையில் இரத்தத்தால் நனைந்திருக்கும் அவளுடைய அழகை நினைக்க நினைக்க கவலை அதிகமாகிறதே. அடே சூரியனே! அடே காற்றே! என் மனைவியை எடுத்துப் போனது யார்?" என்று உணர்ச்சியற்றுப் புலம்பினான். இலக்குவன் தேற்றியும் அவன் புலம்பலை விடவில்லை.

இலக்குவன் இராமன் ஆணையால் ஆற்றின் கரையில் போய்த்தேடினான். இராமனும் தேடினான் காணவில்லை சில மான்கள் தெற்கே ஓடி வழி காட்டின. அதனால் இலக்குவன் "தெற்கேதான் சீதையைத் தூக்கிப் போயிருக்க வேண்டுமென்றான்" இராமனும் அதை ஒப்புக்கொண்டு தெற்கே நோக்கிப் போகையில் பூக்கள் உதிர்ந்து கிடந்தன; அதனாலும் இராமன் தெற்குத் திசையில் தான் சென்றிருக்க வேண்டுமென்று துணிந்து புலம்பிக்கொண்டு அங்கிருந்த மலையை நோக்கி, "நீ சீதையை எனக்குக் காட்டாயாயின் உன்னைப் பொடியாக்குவேன்" என்றான் பின் அவன் "தம்பி! இந்த கோதாவரி ஆற்றையும் உண்மையைக் கூறாவிட்டால் வற்றவைப்பேன்" என்றனன். சற்று தூரத்தில் இராவணனுடைய அடிச்சுவடுகளையும் அவனால் பற்றப்பட்டபோது ஓடித் தத்தளித்த சீதையினுடைய அடிச்சுவடுகளையும் முறிந்த வில்லையும் அழிந்த தேரையும் இராமன் கண்டான்; இரத்தத் துளிகளும் காணப்பட்டன. அதனால் இராமன் அஞ்சி, "ஐயோ! சீதையை அரக்கர் கடித்துத் தின்று விட்டனர் போலும்! அவளுக்காக இரண்டு அரக்கர் இங்கே போரிட்டிருக்கின்றனர். இந்த வில், குடை, தேர் இவை யாருடையன? மாயங்கள் வல்ல கொடிய அரக்கர்களை யான் எனக்குப் பகையாக்கிக் கொண்டேன். சீதையை அவர்கள் தின்றேயிருப்பார்கள். அவளைத் தூக்கிப் போகும்போது ஒருவரும் தடுக்கவில்லையே? தேவர்கள் மனிதர்கள் யாவரையும் இதோ கொன்று அழித்து விடுகின்றேன். தம்பி! இப்போது தேவர்கள் சீதையை முகமலர்ச்சியுடன் கொண்டு வராவிடில் இந்த உலகம் முழுவதையும் அழித்து விடுவேன்," என்று கண்கள் சிவக்கக் கதறினான். இலக்குவன், "அண்ணா தாங்கள் இவ்வாறு சினப்பது கூடாது. ஒருவனுக்காக உலகைத் துன்புறுத்த நினைக்கலாமா? நாம் நல்வழிபற்றித் தேடுவோம். காணவில்லையென்றால் பின்னர் உமது மனம் போல் செய்யும்" என்றனன்.

இராமன் அழுவதையும் மகாமோகத்தோடிருப்பதையும் உணர்ச்சியற்றவனைப்போல இருப்பதையும் இலக்குவன் கண்டு, "அண்ணா! இன்ப துன்பங்கள் யாருக்கும் இயல்பே. ஆதலின் தாங்கள் வருந்துவது அழகன்று. சீதையை எவன் தூக்கிப் போனானென்ன? அல்லது அவள் செத்தால் என்ன? வீரராகிய தாம் கவலைப்படாதிரும். திருடனைக் கண்டு கண்டிக்கவேண்டும்" என்றனன். இராமன் இதையொப்புக்கொண்டான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இராமன் ஒரு நரி ஊளையிட்டதைக்கேட்டு நடுக்கமடைந்தானாம்! தெய்வத்தின் தோற்றமாகிய இவ் இராமனின் வீரம் பாராட்டத்தக்கதே! "பெண் மகளுக்கும் இவ்வாண் மகனுக்கும் வேறுபாடு யாது? இவனும் ஒரு வீரனோ? எதற்கும் அஞ்சா நெஞ்சமுடையவனன்றோ வீரன்? அதனைத் தீய சகுனமென்று கண்டு இராமன் உடனே சீதைக்கு என்ன கேடு நேர்ந்ததோ என்று எண்ணுகின்றான். இலக்குவனைக் கண்டு அவனை மிகவும் கடிந்து பேசி சீதையைத் தனியே விட்டு வந்தது தவறு எனக் கண்டிக்கிறான்.

இராமன் கைகேசியைப் பற்றி இரண்டிடங்களில் "இப்போதாவது கைகேசி எண்ணம் ஈடேறி மகிழ்வாள்" என்று கூறுகிறான், இத்தீயவனாகிய இராமனுக்கு கைகேசியிடம் கொண்ட பகைமை எவ்வாறு நீங்கும்? இந்த இடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காருடைய குறிப்பு கவனிக்கத்தக்கது. அது பின்வருமாறு:—

(ஆரணிய காண்டம், சருக்கம் 58-பக்கம் 152 பார்க்க)

"இராமன் கைகேசியைப்பற்றி கொண்டிருந்த இரகசியமான அபிப்பிராயம் இப்பொழுது வெளிப்படுகிறது. தான் காட்டில் மடிந்தால் பரதன் சுகப்படுவானென்றே வனத்திற்கு அனுப்பினாள் என்பது இராமனுடைய கருத்து. ஆனால் இதற்கு முன் எல்லாம் தெய்வச் செயலென்றும் அவளிடத்தில் குற்றமில்லையென்றும் பரதனையும் இலட்சுமணனையும் கண்டித்ததற்கும் இதற்கும் ஒத்திருக்கவில்லை. அப்படிவேண்டுமென்றே அவள் செய்திருந்தாலும், பொறுமையில் பூமிதேவிக்குச் சமமென்று வர்ணிக்கப்படும் இராமன் அவளை மன்னிக்காமல் அற்ப மனிதனைப்போல குரூரமாகச் சொல்லிக் காட்டுவது அழகல்ல" இதுவே மேதை ஐயங்காருடைய குறிப்பு. நாம் முன்பல இடங்களில் குறித்தபடி இம்மொழிபெயர்ப்பாளர் பெரும்பாலும் சரியாக மொழிபெயர்த்திருப்பதோடு தமது அபிப்பிராயங்களையும் அங்கங்கே குறித்திருப்பது பாராட்டத்தக்கது. ஐயங்காராகிய இவர் இராமனுடைய இழிந்த குணங்களையும் அற்பத்தனங்களையும் கண்டு பொறுக்கமாட்டாமல் இவ்விடத்தில், "இராமன் அற்ப

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# ‘சித்தாந்தத்திற்கு’ம் சுயமரியாதை தெரியுமா?

## தன் மதிப்புப் பெற்றால்தான் தன்னாட்டு மதிப்புப் பெறலாம்

—0—

(எஸ். குருசாமி)

“சித்தாந்த” ஆசிரியரவர்களே! “சிலரை”ப் போல் தாங்களும் பிறரிடம் கூலி வாங்கிக்கொண்டு தூற்ற மாட்டீர்கள் என்ற உறுதியான எண்ணத்தால்தான் நாம் உங்களை அன்புடன் எதிரியாக வரவேற்கின்றோம். தமிழ்நாட்டில் தற்போது தோன்றியிருக்கும் பார்ப்பன வால்கள் செய்கின்ற அவ்வளவு இழிவான துறைகளில் இறங்கிவிட மாட்டீர்கள் என்றும், சட்ட ஞானம் நன்கு அறிந்த நிலையில் நியாயமாகவும் தொடர்ச்சியாகவும், நடுநிலைமை பிறழாமலும், பகுத்தறிவை உபயோகித்தும், ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நம்பிக்கை கொண்டு விடாப்பிடியாக் கொள்ளாமலும், தாங்கள் எழுதி வருவீர்கள் என்ற நம்பிக்கையால் தான் தங்களோடு தொடர்ச்சியாக சில விஷயங்களைப் பற்றிக் கலந்துகொள்ளலாம் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. தாங்கள் இரண்டு மூன்று மாதங்களாக, சுயமரியாதை இயக்கத்தைத் தாக்குவதற்குத் தங்களுடைய “சித்தாந்தப்” பத்திரிகையை உபயோகப்படுத்தி வருகிறீர்கள் என்பதையும் அறிகிறோம்.

சமீபத்தில் வெளியான ஏழாவது “சித்தாந்த” இதழில் தாங்கள் சுயமரியாதையைப் பற்றி எழுதியிருக்கும் தலையங்கத்தைப் பற்றியே இக்கட்டுரை எழுதப்படுகிறது. அத்தலையங்கத்தில் தாங்கள் குறித்துள்ள சில முக்கிய விஷயங்களைப்பற்றி மாத்திரம் இந்தச் சமயம் கவனிப்போம்.

தாங்கள் எழுதிய தலையங்கத்தில் முதலாவதாக “சுயமரியாதை என்றால் என்னவென்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும்” என்று எழுதியிருக்கிறீர்கள். சித்தாந்தியவர்களே! ஒரு வார்த்தையின் பொருளை ஆராய்வதும், அது எந்தப் பகுதியினடியாகப் பிறந்தது என்பதும், அதன் ஒலி எங்கிருந்து எழுகின்றது என்பதும், அவ்வார்த்தைக்கு நிகண்டு அகராதிகளில் என்ன அர்த்தம் சொல்லப்பட்டிருக்கின்றது என்பதும், அதை எங்கெங்கே யார் யார் எப்படி எப்படிப் பிரயோகம் செய்திருக்கிறார்களென்பதும், அம்மொழி சுத்தமான தாய்மொழியா அல்லது கலப்புரத்தம் ஓடியிருக்கிறதா என்பதும, அவ்வார்த்தை வேறு மொழிகளில் உண்டா? இல்லையா? என்பதும் அவ்வார்த்தையில் பிரணவ ஒலி இருக்கிறதா? இல்லையா? என்பதும் இலக்கணத்தின்படி அவ்வார்த்தை சரிதானா? பிழையா? என்பதும் ஆகிய இன்னோரன்ன பிற ஆராய்ச்சிகளெல்லாம் சைவசித்தாந்தியும், தனித்தமிழ் வீரரும் ஆகிய தங்களைப் போன்ற தமிழ்ப்பாவலர்களின் முக்கிய நோக்கம் என்பது தமிழ்நாடறிந்ததேயாம். “நமசிவய” என்ற ஐந்தெழுத்தில் உள்ள ஒவ்வொரு எழுத்தின் ஒலியும் அதன் சிறப்பும் அதன் அழகும், அதன் அன்பும், அதன் அருளும், பிறகு ஐந்தும் சேர்ந்து செய்கின்ற பிரம்மாண்டமான வேலையும் அம்மொழியின் தத்துவமும் பிரணவமான ஓங்காரத்தின் பெருமையும், மூலாதாரத்தினின்றும் அவ்வொலியானது கிளம்பி, வெளியே உச்சரிக்கப்படும் போது அது செய்கின்ற அபாரமான செயல்களும், பிறகு பிரணவமும் பஞ்சாக்கரமும் சேர்ந்து ஒலிக்க, ஒலிக்க மனிதனுக்குள் உண்டாகும் அபாரமான சக்தியும்,—இம்மாதிரியான ஏகாக்ஷரத் தத்துவங்கள் சொல்லுவதில் தாங்களும் தங்கள் இனத்தார்களும் வெகு காலமாக நிபுணர்கள் என்பதைத் தாங்களே எங்களுக்கு அடிக்கடி எடுத்துக்காட்டுவதென்றால், “பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தானோடு சொல்வதை”யொக்கும் என்பதைமாத்திரம் ஞாபக மூட்ட விரும்புகிறோம். சுயமரியாதை என்னும் வார்த்தையிலோ அதன் தத்துவத்திலோ, ஒரு இயக்கத்திற்கு இடும் பெயரிலோ உங்களவ்வளவு ஆராய்ச்சியும் இலக்கணப் பாண்டித்தியமும் எங்களுக்கு அவ்வளவு அவசியமாகத்தோன்றுவதில்லை. ஒரு இயக்கத்தின் கருத்துக்களும், அவைகள் மக்களது அறிவுவளர்ச்சிக்கு எவ்வளவு உதவியாயிருக்கும் என்பதும் தான் எங்களுடைய முக்கிய நோக்கமாகும். தாங்களும் தங்கள் இனத்தார்களும் அதிக பாண்டித்தியமும் ஆராய்ச்சியுமுடையவர்கள் என்பதில் எங்களுக்கு மிகுந்த பெருமைதான். என்றாலும், ஒரு விஷயத்தை “உண்டு” என்று சொல்பவன் மிக எளிதில் சொல்லிவிடலாம். அதை “இல்லை” யென்று நிரூபிக்கின்றவனே, அது தப்பு என்று நிரூபிக்கின்றவனே மிகவும் ஜாக்கிரதையாகக் கஷ்டப்பட்டுப் பல விஷயங்களை அறியவேண்டும். இதை அப்படியே நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ‘உண்டு” என்றும் “நம்பு” என்றும் சொல்லுகிற தங்களையும் தங்கள் இனத்தாரையும் விட அதிகமாக இல்லாவிட்டாலும், அவ்வளவு ஆராய்ச்சியாவது அவ்வளவு அநுபவமாவது, “இல்லை” யென்று நிரூபிக்கின்றவர்களுக்கும் இருக்கக் கூடும்; இருக்க வேண்டும் என்பது மாத்திரம் ,ங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் தோன்றுவதில்லையே! அது ஏன்? மிகக் கற்றுணர்ந்த புகழேந்திப் புலவருக்குக்கூட கோலி விளையாடும் சிறுவர்கள் தங்கள் ஊரிற்கு வெகு சமீபமாகத்தான் விளையாடிக்கொண்டிருக்க முடியும் என்று தோன்றாமல் போனது சகஜம் என்று படித்த கதையை உங்கள் ஞாபக சக்தி ஏன் சமயத்தில் உங்களுக்கு உதவி செய்யாமற்போகிறது? கோலி விளையாடின பையன்களுக்குத் தொல்காப்பியப்பொருளதிகாரம் தெரியாதே! பிரணவத்தின் தத்துவம்தெரியாதே! மணக்குடவர் உரையின் விசேஷம் தெரியாதே! இவையெல்லாம் தெரிந்த புகழேந்திக்கும் சமயத்தில் யோசனை சொல்ல வேண்டியதாகத் தானே வந்தது! மேதாவியான நியூட்டன் வாசற்கதவில் பூனைக்கு ஒரு துவாரமும் குட்டிக்கு ஒரு துவாரமும் செய்துவைத்தது அவசியமில்லையென்றும், பூனை நுழையும் துவாரத்திலேயே குட்டியும் நுழையும் என்று சொன்னது அவரது வேலைக்காரன் என்பதை அதற்குள் மறந்து விடுகிறீர்களே! ஆகவே, இனியாவது தங்களைப் போலவே பிறரையும் நினைத்துப் பேசியும் எழுதியும் வருவீர்களென நம்பி நமது விஷயத்தைத் தொடங்குவோம்.

நாம் மேலே சொன்னபடி ஒரு இயக்கத்திற்கு இட்டிருக்கும் பெயரின் அர்த்தத்தை வியாக்கியானப்படுத்தி அதற்கு இலக்கணம் கூற யோசனை சொல்லும் தங்கள் சட்ட ஞானமானது, அவ்வியக்கத்தின் மக்களுடைய முன்னேற்றத்திற்கும் மக்களது அறிவு வளர்ச்சிக்கும், அவர்களது ஒற்றுமைக்கும் சந்தோஷமான வாழ்க்கைக்கும் பயன்படுகிறதா? இல்லையா? என்று ஆராய்ந்து பார்க்க உபயோகப்படாமல் போகின்றதே, அது எதனால் என்றாவது யோசித்தீர்களா? வார்த்தைக்கு அர்த்தம் பார்ப்பதில் மிகவும் கீர்த்திவாய்ந்த “சைவர்களாகிய” நீங்களும் உங்கள் இனத்தாரும்முதலாவது உங்கள் “சைவம்” என்ற வார்த்தையே சரியாக உபயோகப்படுகிறதா என்பதை யோசிக்கவே நேரமில்லையே? சிவம் என்பதனடியாகப் பிறந்த சைவம் தாவர உணவிற்கு உபயோகப்படுத்தப்பட்டு, அதையே ஆதாரமாகக் கொண்டு “அமெரிக்காவிலும் சைவம்” என்று எழுதும் பத்திரிகைப் பண்டிதர்கள் தங்கள் கண்ணின் முன்னேயே இருக்கிறார்களே! திருநெல்வேலிச் “சைவர்களும்” இன்னும் அவர் போன்றாரும், தூத்துக்குடியிலும், மற்ற இடங்களிலும் “அசைவர்கள்” என்று சமபந்தி போஜனத்திற்கே மறுக்கப்பட்டுத் துரத்தப்பட்ட “சைவத்தூண்களை” நீங்கள் மறந்தாலும் நாங்கள் மறக்க முடியவில்லையே. “சைவம்” என்னும் பெயருக்கே ஆபத்தான அர்த்தத்தை வைத்துக் கொண்டு ஒரு மொழியின் அர்த்தத்திலும், அதன் இலக்கணத்திலும் தலையிட்டுப் பாண்டித்தியத்தைக் காண்பிப்பதைவிட மக்கள் முன்னேற்றத்திற்கான வழிகளைச் செய்வதே விசேஷம் என்று சொன்னால் நீங்களும் உங்கள் கூட்டத்தாரும் தெரிந்துகொள்ளாமலிருக்கிறீர்களே; அது எதனால்? இது நிற்க.

ஒருவன் கடவுள் இல்லை, கோயிலுக்குப்போகக்கூடாது” என்பதே சுயமரியாதை என்கிறான் என்றும், மற்றொருவன் “பார்ப்பனப் புரோகிதம் பார்ப்பன அர்ச்சகர் பூசை முதலிய பார்ப்பனீயத்தை ஒழித்தலே சுயமரியாதை என்கிறான்” என்றும், “வேறொருவன் எல்லா ஜாதிகளும் ஒன்றுவதே சுயமரியாதை எனகிறான்” என்றும், “சமயம், சடங்கு, சாதி முதலியவைகளில் ஏதாவது ஒன்றினைடைவற் புறத்துவதே சுயமரியாதை”யாயிருக்கிறது என்றும், இவைகளெல்லாம் “போலி வழக்கங்கள்” என்றும் எழுதியிருக்கிறீர்கள். ஆங்கிலச் சட்ட ஞானத் தனித் தமிழ்ப்புலவர்களே! எவைகளைப் போலி வழக்கங்கள் என்று சொல்லுகிறீர்கள்? மனிதனை அடிமைப்படுத்தவும், அவனது அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாகவும், மனித சமூக ஒற்றுமைக்கு விரோதமாகவும் இருக்கின்ற அல்லது சொல்லப்படுகின்ற கடவுளோ, கோவிலோ. பார்ப்பனீயமோ, புராணமோ, பழக்கமோ, வழக்கமோ கலையோ, காவியமோ எவைகளாயிருந்தாலும் அவைகளை ஒழிப்பதுதான் சுயமரியாதை என்று இப்போதல்ல, வெகு நாளாகத்தானே சொல்லிக் கொண்டு வருகிறோம். தாங்கள் இதில் புதிதாக ஒன்றையுங் கண்டுவிடவில்லையே! “கடவுள் கல்லில் இல்லை” யென்றும், “தீண்டலாவதேதடா?” என்றும், கோயிலாவதேதடா, குளங்களாவதேதடா?” என்றும் பாடிய சிவவாக்கியர் புஸ்தகமும், “பேர்கொண்ட பார்ப்பான் பிரான் தன்னை அர்ச்சிக்கில்.........” என்றும், “நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்றீயில்.........” என்றும் பாடிய திருமூலர் புத்தகமும், “கலை உரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப்போக” என்றும், “இயல் வேதாகமங்கள் புராணங்கள் இதிகாசம் இவை முதலா இந்திர சாலங் கடையா உரைப்பர்” என்றும் பாடிய ராமலிங்க சுவாமிகளின் அருட்பாப் புத்தகமும், நால்வகைச் சாதியிச் காட்டினில் நீர்நாட்டினீர்” என்ற கபிலர் அகவலும், “பொய்யும்வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம்” என்று அறையும் தொல்காப்பியபுத்தகமும், தங்கள் புத்தக அலமாரியில் தானே இருக்கின்றன. அவைகளின் பேரில் உங்கள் “சித்தாந்த”க் கோபத்தைக் காட்டுவதை விட்டு சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதைப்

"போலி வழக்கங்கள்" என்கிறீர்களே! தங்கள் கூட்டத்தாரால் எழுதப்பட்ட "சைவசித்தாந்தவரலாறு" என்னும் நூலிலும், "வேளாளர் நாகரீகம்" என்னும் நூலிலும், "ஜாதி வேற்றுமை" என்னும் நூலிலும் கூறியிருப்பதைவிட கொடுமையான வார்த்தைகளை பார்ப்பனர்களிடம் நாங்கள் உபயோகிப்பதில்லையே! ராமாயணத்தைப்பற்றி திருவாளர்கள்புரொபசர்சுந்தரம் பிள்ளையாலும், வி. பி. சுப்பிரமணிய முதலியாராலும், டி. பொன்னம்பலம்பிள்ளையாலும் சொல்லப்பட்டதை விட அதிகமாக நாங்கள் ஒன்றும்சொல்லிவிடவில்லையே! "போலி வழக்கங்கள்", என்றும், "அறிவிலிகள்"என்றும் எங்களுக்கு மாத்திரமில்லமல் எங்களுக்கு ஆதாரமாயிருந்த- இருக்கின்ற மேற் கூறியவர்களுக்கும் பட்டங்களைச் சூட்டிவிட்டு, தாங்கள் மாத்திரம் பெரிய அறிவாளி என்று சொல்வதென்றால் "கல்விச் செருக்கு" என்று உலகிலுள்ள பிறர் சொல்வார்களே என்றாவது யோசனை வேண்டாமா? அதுதான் போகட்டும் "போலி வழக்கங்கள்" போக, "உண்மை வழக்கங்கள்" எதில் இருக்கிறது? அது எதுவரையில் பயனளித்திருக்கிறது? மக்கள் எப்படிக் கையாளுகிறது? என்றாவது தாங்கள் சொல்லவேண்டாமா? அதுதான் போகட்டும். தமிழ் நடையில் தலைசிறந்து விளங்கும் தாங்கள், "ஆன்" விகுதி தாழ்மையைக்குறிக்குமென்பதும், "ஆர்" விகுதி மரியாதையைக் குறிக்குமென்பதும் இன்னும் தெரிந்துகொள்ளாமலா இருக்கிறீர்கள்? அப்படித் தெரிந்திருந்தால், "ஒருவன் சொல்லுகின்றான்" என்று பிரயோகிக்க தங்களைத் தூண்டியதுஎது? ஒருவேளை வேண்டுமென்றேஇழிவு படுத்துவதற்கெனப் பிரயோகித்திருந்தாலும் எங்களைப் போன்ற "அறிவிலிகள்" செயலல்லவா அது? தங்கள் சட்டஞானமும், தமிழ்ப் பாண்டித்தியமும், செந்தமிழ்ச் சஞ்சிகையின் ஆசிரியப் பதவியும் இத்தகைய வார்த்தைகளை உபயோகிப்பதிலிருந்து தங்கள் பேனாவைத் தடுக்க முடியாது போனது பற்றியும் வருந்தாமலிருக்க முடியவில்லை தாங்கள் "சுயமரியாதை" என்னும் பதத்தின் அர்த்தம் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த உலகத்திற்கு அதைப் புட்டுபுட்டு வைத்து விளக்கி விட்டமைக்குத் தங்களுக்கு வந்தனம் கூறுவதோடு, "அறிவிலிகளுள்" ஒருவனாகிய யான், "அறிவாளிகளுள்" ஒருவராகிய தங்களுடைய பிற கூற்றுக்களை ஆராயத் துணிகின்றேன்.

'சுயமரியாதைக்காரர்களும் பத்திராசிரியர்களும் "நாங்கள் படித்தவர்களல்ல. ஒழுக்கமுடையவர்களுமல்ல. எங்கள் பாலியத்தில் கெட்ட நடவடிக்கையுண்டு. ஆகையால், தான் பெண்களுக்குக் கற்பு வேண்டாம் என்று சொல்லுகிறோம்" என்பதாக எழுதியிருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை தான். நாங்கள் மூன்னும் பின்னும் சொல்லியிருப்பதையும் பேசியிருப்பதையும் விட்டு விட்டு எதோ ஒன்றிரண்டு வாக்கியங்களை மாத்திரம் எழுதி படிப்போர் மனதில் கெட்ட எண்ணம் உண்டாகும்படி வரைந்திருப்பது தான் முறையல்லவென்று சொல்லுகிறேன். நாங்கள் படித்தவர்களல்ல தான். உங்களைப் போல் சகல கலாவல்லவர்களென்று தற்பெருமை பேசிக் கொள்ளும் வழக்கமும் எங்களுக்குக் கிடையாது. படித்தவர்களாயிராமல் இருக்கும் இந்த நிலையிலேயே தாங்களும் தங்கள்கூட்டத்தார்களும் செய்துகொண்டு வந்த புராணப் பித்தலாட்டங்களும் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகளும் ஒன்றும் பயன்படாமல் தவிக்கின்றதைப் பார்த்தீர்களா? படிக்காத எங்களுடைய கூட்டத்திலுள்ள ஒருவராகிய திரு. கைவல்யசாமியார் எழுதி வந்த எண்ணிறந்த கட்டுரைகளுள், சட்டஞானம் பெற்ற தங்களைப்போன்றார்களாவது தமிழ்க் கடலைக் கரைகண்ட நிபுணர்களாவது ஒரு கேள்விக்கேனும் சமாதானம் கூறினீர்களில்லையே! சைவ சபைகளில் பிரசங்கமாரி பொழிகின்ற இயற்கையாராய்ச்சிப் பண்டிதர்களும் பத்திரிகாசிரியர்களும் "படித்தவர்களல்லாத" நாங்கள் முறையோடு கேட்ட ஒரு கேள்விக்கேனும் பதில் கூறாது தப்பி யோடி பிழைப்பதன் காரணமாவது தங்களுக்கு விளங்குகிறதா? படிக்காததாலும் பாலியத்திலுள்ள கெட்ட ஒழுக்கத்தாலும் ஒருவர் சொல்லுகின்ற விஷயத்திற்கு ஒருவித பங்கமும் எற்பட்டுவிடாது என்பது தங்களுக்கு இன்னும் தோன்றாமற் போனதும் விந்தையே. பாலியத்தில்கெட்ட ஒழுக்கத்திலேயே மூழ்கிக்கிடந்த அருணகிரி நாதர் சரித்திரத்தையும் அதனால் அவர் பாடிய திருப்புகழின் அர்த்தத்தையும் அதற்குள் தாங்கள் மறந்து விட்டீர்களே. அவருடைய பால்ய நடவடிக்கையானது வெறுக்கத்தக்கது என்று தங்கள் "ஒழுக்கம்" சொன்னாலும், அதனால் அவரது நூலை வெறுக்கக்கூடாது என்று தங்கள் பகுத்தறிவு சொல்லவில்லையா? தங்களுடைய படிப்பில் பாதிகூட இல்லாத சாக்ரட்டீஸ் என்பவர் தத்துவ சாஸ்திரத்திற்கே அடிப்படையாக இருந்தார் என்பதைத் தங்களுடைய சரித்திரப் படிப்பு சொல்லிக் கொடுத்திருக்குமே? தங்களுடைய சைவக் கொழுந்தாகிய ஞானசம்பந்தர் மதுரைச் சங்கத்தில் பயின்று இலக்கண இலக்கிய ஆராய்ச்சி தெரிந்தா "பட்டிகைத்தஅல்குலாள்" என்று தனது தாயை வர்ணித்து "ஒழுக்க முறையோடு" பாடினார்? தங்களுடைய கடவுளாகிய பரமசிவன் தாருகாவனத்துப் பெண்களோடு செய்த லீலைகள் அடங்கிய புத்தகம் தங்கள் அலமாரியிலிருக்குமே! அவரது "ஒழுக்கம்" என்ன என்பதையும் தாங்கள் அறிவீர்களே! மகாவிஷ்ணு கிருஷ்ணவதாரத்தில் செய்த "ஒழுக்க"மான லீலைகளுக்குத் தங்கள் "சித்தாந்தம்" என்ன சொல்கிறது? இது நிற்க.

"பெண்களுக்குக் கற்பு வேண்டாம்" என்று சொல்வதாக எழுதியிருக்கிறீர்கள். ஆம். எந்தக்கற்பை வேண்டாமென்று சொல்லுகிறோம்? தாங்களும் தங்கள் இனத்தார்களும் சொல்லுகின்ற கற்பு வேண்டவே வேண்டாம் என்றுதான் இன்னும் சொல்லுகின்றோம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய நான்கும் உடையதுதான் கற்பு என்றால், அத்தகைய கற்பு உங்களது பெண் தெய்வமாகிய சரஸ்வதிக்கே இருக்கட்டும் என்றுதான் சொல்லுகின்றோம். அச்சம் இருப்பதால் தான் தங்களுடைய தமிழ்ச் சரஸ்வதி, ஆங்கிலச் சரஸ்வதியுடன் போட்டி போட முடியாமல் தவிக்கின்றாள். மடமை இருப்பதால்தான் தங்கள் சரஸ்வதி இமயமலைக்கு இப்புறமே உலகம் என்று நினைத்திருந்தாள். நாணம் இருப்பதால்தான், தமிழ் மக்கள் இருக்கும் இடம் தவிர வேறு இடங்களுக்குப் போகவெட்கப்படுகிறாள். பயிர்ப்பு இருப்பதால்தான் பிறமொழியினர்களைவெறுக்கின்றாள். கற்புஎன்பதற்கு தாங்களும் தங்கள் இனத்தார்களும் செய்யும் வியாக்கியானம் என்னவோ, அத்தகைய கற்பு நம் நாட்டுப் பெண்களுக்கு வேண்டாம் என்றுதான் சொல்கின்றோம். "பெய்யெனப் பெய்யும் மழை" என்று கற்புக்கு அடையாளம்சொல்லியிருப்பதுபோல் அவ்வாறு செய்ய முடியாத பெண்மக்களை கற்பு இல்லாதவர்கள் என்றல்லவா கொள்ளவேண்டும்? சந்நியாசி வேடம்பூண்ட ஒருவனுக்கு (அவன் கடவுளாயினும் சரி) புருஷன் சொன்னதற்காக ஒரு பெண் தன்னுடைய கூந்தலை அரிந்து கொடுக்க வேண்டுமென்றும் சொல்லுகின்ற கற்பு வேண்டவே வேண்டாம். மனித சமூகத்தில் ஒரு இனத்தாருக்கு, அதாவது ஆண்களுக்கு மாத்திரம் இல்லாமல் மற்றொருவருக்கு வற்புறுத்தப்பட்டிருக்கின்றகற்புதான்வேண்டாமென்கிறோம் புருஷனை இழந்தால் மனைவி உடன்கட்டை ஏற வேண்டுமென்றுதான் இருந்ததேயொழிய, மனைவி இறந்தால் புருஷன் உடன்கட்டை ஏற வேண்டுமென்ற கட்டாயம் இல்லாத அத்தகையகற்புவேண்டாம் புருஷனை இழந்தபெண்ணை மாத்திரம் அவளது அழகைக் குறைத்து ஒதுக்கிவைத்து, அடிமையாக்கி, துன்பத்திலாழ்த்தி, மனைவியிழந்த புருஷனை சும்மா விட்டிருக்கும் கற்பு வேண்டாமென்கின்றோம். பழைய சோற்றுக்கு விசிறியெடுத்துக் கொடுக்காவிட்டால் கற்பு இல்லையென்றால் அந்தக் கற்பு வேண்டாமென்கிறோம். கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும்போது நடுவிலேயே விட்டுவிட்டுவந்தாலும் கயிறும் வாளியும் அப்படியே நிற்கவேண்டுமென்கின்ற அந்தக் கற்பு வேண்டாமென்கின்றோம். "பேதமை என்பது மாதர்க்கணிகலம்" என்பதே கற்பாயிருக்குமானால் அத்தகைய கற்பு நம் பெண்மணிகளுக்குத் தேவையில்லையென்கின்றோம் பட்டப் பகலில் புருஷன் சொன்னான் "சொற்றிறம்பாமல்" விளக்கேற்றிவருவதுகற்பாயிருப்பதால் அந்தக்கற்பையும்வேண்டாமென்கின்றோம்.

தாய் தகப்பன்மார்கள் வியாபாரத்தின் பொருட்டோ, ஜாதி என்பதன் பெயரினாலோ பேரம் பேசி ஒன்றுக்கொன்று இணையாத தம்பதிகளைச் சேர்த்து வைத்தாலும், பெண் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு "தன் தலைவிதி" என்று இருப்பதே கற்பு என்றால், அத்தகைய கற்பையும் வேண்டாம் என்கின்றோம். கடவுள் பெண்களை அடுப்பங் கரைக்காகவே படைத்தார் என்கின்ற கற்பு வேண்டாமென்று தான் சொல்லுகின்றோம். ஆகவே மேற்சொன்ன விஷயங்களால், நாங்கள் வேண்டாமென்று சொல்லுகின்ற கற்பு தங்களுக்கும் தங்கள் இனத்தாருக்கும் விரோதமாயிருக்கலாமே யொழிய, பெண்கள் சமூகத்தில் 1000க்கு ஒருவருக்குக்கூட விரோதமாயிருக்காதென்பதையும் அறிவோம். இனி மேலே செல்லுவோம்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்" என்றும், "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்றும் மேற்கோள் காட்டியிருக்கிறீர்கள். அதுவும் முற்றிலும் உண்மைதான். தங்களது மேற்கோளின்படியே மேற்சொன்ன குறளுக்கு உரையாசிரியர் சொல்லும் அர்த்தத்தையாவது கவனித்தீர்களா? "அறநூல் சொல்லிய வற்றுள் இக்காலத்திற்கு ஏலாதன ஒழிந்து சொல்லாதனவற்றுள் ஏற்பன கொண்டு வருதலான் அவையும் மடங்க உலகத்தோடொட்டவென்றார்" என்று குறிப்பிட்டிருப்பதின் நோக்கம் என்னவென்றாவது கவனித்தீர்களா? இது ஒரு புறமிருக்க. உலகம் என்பது இமயமலைக்குத் தெற்கேயே அடங்கிவிட்டது என்று தங்களுடைய தமிழ்ப் படிப்பு கற்பித்திருந்தாலும், இமயமலைக்கு அப்பாலும் வேறு தேசங்கள் இருக்கின்றனவென்றும், அவைகளிலும் மக்கள் வாழ்கின்றார்கள் என்றும், அம்மக்களும் நமது இந்துக்களைவிட எத்தனையோ மடங்கு அதிக ஜனத்தொகையுடையவர்கள் என்றும் தங்கள் ஆங்கிலக் கல்லூரியின் பூகோளப்படிப்பும் சட்டஞானப் படிப்பும் கூறியிருக்கவேண்டுமே! இலக்கணத்தமிழின் பத்திரிகைக்கு ஆசிரியர் என்றால் உலகஞானத்திற்கு அடிப்படையாயுள்ள தங்களது சட்டஞானமானது உலகம் என்பதற்குள்ளசரியான அர்த்தத்தைக் கற்பிக்காமற் போனதும் விந்தையே. பூகோளம் முழுதும் தெரிவதற்கு அநுகூலமில்லாத நமது முன்னோர்கள் இமயமலையின் உச்சிக்குப்போக முடியாததால் கங்கை நதி எங்கே உற்பத்தி

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

ரோஜா முத்தையா

# சென்னை ஆதிதிராவிடர் சுயமரியாதை மகாநாடு

## நீண்ட ஊர்வலம்—பெரிய கூட்டம்

சென்னை ஆதிதிராவிட மகா ஜனங்களின் சுயமரியாதை மகாநாடு சென்னை நேப்பியர் பார்க்கில் (தில்லை வனத்தில்) வெகு விமரிசையாய் நடந்தேறியது. திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியாரும், குருசாமி, அய்யாமுத்து ஆகியவர்களும் சனிக்கிழமை 13ந் தேதி மாலை 5-மணிக்கு மோட்டார் வாகனத்தில் பாண்டு வாத்தியங்களுடன் சிந்தாதிரிப்பேட்டை வழியாக ஆண்களும் பெண்களுமாக சுமார் ஆயிரம் பேர் சூழ்ந்து ஆதிதிராவிடர் தெருக்கள் முழுவதும் சுற்றி நேப்பியர் பார்க்குக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழி நெடுக அழகிய தோரணங்களும் வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. முக்கிய வீதிகளில் நிறுத்தி பூமாலைகள் இடப்பட்டன. ஊர்வலம் நேப்பியர் பார்க்கை அடைந்ததும் அங்கு அலங்கரிக்கப்பட்ட மண்டபத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார்கள். கூட்டத்திற்கு ஏராளமான ஆதிதிராவிடரும், மற்றும் அநேகரும் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாட்டுக்கு திரு.கே.சி. பாலசுந்தரம் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததும் திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, கண்ணப்பர், தண்டபாணி ஆகியவர்களுக்கு வரவேற்பு பாட்டுகள் பாடப்பட்டன. பிறகு திரு. ராமசாமியாரைப் பேசும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதும் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து பேசினர். இரண்டு நாள் கூட்டத்திலும் அவர் பேசியதன் சாரமாவது:-

சகோதரர்களே! ஆதிதிராவிட சமூகத்தின் பேரால் சுயமரியாதை மகாநாடு கூட்டப்பட்டிருப்பதைக் கண்டு நான் மிகுதியும் மகிழ்ச்சியடைகின்றேன். சிலர் சுயமரியாதை என்கின்ற பெயர் தங்களுக்குப் பிடிக்க வில்லை என்றும், ஆனால் அதன் கொள்கைகள் எல்லாம் சரியென்றும் மிக்க அவசியமானதென்றும் சொல்லுகின்றார்கள். அதற்குக்காரணம் என்னவென்றால் அந்த பெயரிலிருந்து தங்களுக்குச் சுயமரியாதை இல்லை என்று அருத்தம் ஏற்படுகின்றதாம். இதற்கு நான் சொன்ன பதில் என்னவென்றால் நமக்குச் சுயமரியாதைஇருக்கின்றதா இல்லையா? என்பது வேறு விஷயம் என்றும், சுயமரியாதை சங்கம்என்று பெயரிடுவதாலேயே அதில் சேர்ந்தவர்கள் சுயமரியாதை தற்றவர்கள் என்கின்ற அருத்தமாகாதென்றும்? அப்படியானால் இப்போது பலர் சன்மார்க்க சங்கம் என்பதாக பல சங்கங்கள் ஏற்படுத்துகின்றார்களே அச்சங்கங்களில் அங்கத்தினர்களாயிருப்பவர்களுக்குச் சன்மார்க்கமில்லை யென்பது பொருளா என்றும், அச்சங்கம் ஏற்படுத்துபவர்கள் துன்மார்க்கர்களா என்றும்தான் பதில் கேட்டேன். தவிர உண்மையிலேயே நமக்குச் சுயமரியாதை உணர்ச்சி இருக்கின்றதா என்பதையும் சற்று யோசித்துப் பாருங்கள். முதலாவது உங்களைப் பற்றியே பேசுகின்றேன்.

நீங்கள் சமூகத்தில் மனிதர்களால் கீழ் மக்களாய் கருதப்பட்டுதீண்டத்தகாதவர்களாய் ஒதுக்கப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்குக் கோயிலில்பிரவேசிக்க உரிமையில்லை.

அநேக தெருக்களில் நடக்கவும் உரிமை இல்லை. அநேக குளங்களில் குட்டைகளில் ஏரி, ஆறு, வாய்க்கால், படித்துறைகளில் தண்ணீர் மொள்ளவோ,குடிக்கவோ உரிமை இல்லை. சில பள்ளியில் சேர்ந்து படிக்க உரிமை இல்லை, சிற்சில இடங்களில் நீங்கள் மனிதர்களின் கிட்ட வரவோ, அவர்களின் கண்களில் தென்படவோ கூடாதவர்களாயிருக்கின்றீர்கள். இவை முதலிய கொடுமைகளை மனிதர்களின்கைபலத்தால் என்று மாத்திரம் அல்லாமல், கடவுள், மதம், சட்டம்,பழக்கம்,வழக்கம் என்பவைகளின் பேரால் அனுபவித்து வருகின்றீர்கள். இந்நிலையில் உள்ள நீங்கள் சுயமரியாதையுடன் வாழும் சமூகம் என்று சொல்லிக் கொள்ளக் கூடியவர்களாஎன்றுகேட்கின்றேன். உங்கள் நிலை இப்படி என்றால் எங்கள்நிலைமையைச் சற்று யோசித்துப் பாருங்கள்

மனித சமூகத்தில் நாங்களும் இழி மக்களாக அதாவது பிறவி அடிமையாகவும் மற்றொருவனுக்குத் தாசி மகனாகவும் இருக்கத்தக்கதான "சூத்திரர்"என்னும் பெயரால் அழைக்கப்பட்டு உங்களைப் போலவே நாங்களும் மற்றொரு கூட்டத்தாருக்குத் தீண்டப்படாதவர்களாகவும் சில பொதுஇடங்களுக்குப்போகக்கூடாதவர்களாகவும் சில படித்துறைகளில் தண்ணீர் மொள்ளக்கூடாதவர்களாகவும்சில பள்ளிக்கூடங்களில் படிக்கக் கூடாதவர்களாகவும், பொதுக் கோயிலிலும் சில இடங்களுக்கு போகக் கூடாதவர்களாகவும், பொதுஓட்டல் முதலியவைகளிலும் உள்ளே போய் சாப்பிட முடியாதவர்களாகவும் கருதப்பட்டும் அநுபவத்தில் தவ்விழிவுகளையும் கொடுமைகளையும் அனுபவித்தும்வருகின்றோம். நீங்கள் தீண்டாதவர்கள், தாழ்ந்த ஜாதியார், கடைக்குலத்தார் என்று சொல்லப்பட்டாலும் உங்களுக்கு ஒரு தகப்பன் உண்டுஎன்றுசொல்லிக்கொள்ள உரிமை உண்டு. நாங்கள்உங்களைவிட சற்று உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளலாமே தவிர நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற மதப்பிரகாரம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் குலதர்மங்களுக்கு எங்களுக்குத்தகப்பன் இருக்க நியாயமில்லாமல் தான் இருக்கின்றது. ஆனால்சிற்சிலஇடங்களில் இது அமுலிலில்லை என்று சொல்லலாமேயொழிய கொள்கையிலும்மத சட்ட ஆதாரத்திலும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. மலையாளத்தில் உயர்ந்த சாதிக்காரர்கள் என்பவர்களுக்கு இன்னமும் மற்றொரு வகுப்பார் உயர்ந்தார் என்பவரின் தாசி மகனாய், வைப்பாட்டி மகனாய் இருப்பதுதான் அடையாளமாக இருந்து வருகின்றது. ஆகவே எங்கள் சமூகமானது சுயமரியாதை உள்ள சமூகம் என்று சொல்லிக் கொள்ள முடியுமா என்று கேட்கின்றனர்.

தவிரஇன்றைபதினம்நாம்எல்லோரும் எப்படி சமூகத்துறையில் இழிவுபடுத்தப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோமே அதற்கு நேர் விரோதமாய் நமதுநாட்டில்மற்றொரு வகுப்பு சமூகத்துறையில் தாங்கள் மிக்க உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொண்டு மேன்மையாகச் சந்தோஷத்துடன் சோகாமல் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அன்றியும் நாம் எப்படி இம்மாதிரியான கூட்டங்கள் கூட்டி நம்மீது சுமத்தப்பட்ட இழிவையும் கொடுமையையும் நீக்கிக் கொள்ள இம்மாதிரி மகாநாடுகளால் முயற்சி செய்து வருகின்றோமோ அதற்கு நேர் விரோதமாய் மற்றொரு வகுப்பார் இந்த நிலைமையை எப்போதும் நிலைத்து இருக்கும்படி செய்ய வர்ணாசிரம மகாநாடு, பிராமண தர்ம மகாநாடு, ஆரிய தர்ம மகாநாடு முதலிய மகாநாடுகளின் பேரால் பலமானமுயற்சிகள் செய்து வருகின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல்நம்மீது மனதறிந்த பொய்க்கூற்றுகளைக் கற்பித்தும் அபாண்டமான பழிகளைச் சுமத்தியும் பாமரமக்களிடம் விஷமப்பிரசாரம் செய்து வருகின்றார்கள். நம்மவர்களிலேயே சிலரைக் கூலியாக அமர்த்தி எதிர்ப்பிரசாரமும் செய்து வருகின்றார்கள். இவைகளையெல்லாம் நாம் சிறிதும் லட்சியம்செய்யாமல் தைரியமாகவும் விடாமுயற்சியாகவும் இருந்து வேலை செய்தால்தான் நமக்குள் கொடுமையும் இழிவுகளும் நீங்குமே ஒழிய மற்றபடி சும்மா இருந்துகொண்டு நாம் எடுத்ததற்கு எல்லாம் கடவுள் செயல், அவனன்றி ஓரணுவும் அசையாது என்று சோம்பேறி ஞானம் பேசிக் கொண்டிருந்தால் ஒரு காரியமும் ஆகாது என்பதை ஞாபகத்தில் வையுங்கள். உதாரணமாக "எல்லாம் கடவுள் பார்த்துக்கொள்ளுவார், நாமாக ஏதாவது செய்தால் கடவுள் கோபித்துக் கொள்வார், பாபம் வந்துவிடும், நரகம் சம்பவிக்கும் என்று பேசிக் கொண்டிருக்கும் எந்த சாதுவும், தன்னை ஒரு சிறு எறும்பு கடித்தாலும் உடனே அந்த எறும்பை நசுக்கி விட்டு தான் வலிக்காக கஷ்டப்படுகின்றான். அதுபோலவே ஒரு தேள் கடித்து விட்டால் உடனே அதைக் கொன்று விட்டுத் தான் பிறகு அழ ஆரம்பிக்கின்றான். கடித்ததேள் கொல்லப்படவில்லையானால் கடிபட்டவனுக்கு வலி அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே அவைகளுக்குக்கஷ்டம்ஏற்படும்போது எவனும் கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு சும்மா இருப்பதாக நாம் கண்டதே இல்லை. மற்றொருவன் கஷ்டத்திற்கும் தன்னால் முடியாத காரியத்திற்கும் மற்றவர்களை ஏமாற்றுவதற்கும் தான் ஒருவன் கடவுளை இழுக்கின்றானே தவிர காரியத்தில் கடவுளுக்காக எவனும் விட்டுக் கொடுப்பதே இல்லை. நமது சுயமரியாதை இயக்கமேற்பட்டு 2, 3 வருடங்களேயானாலும் அதுசமது நாட்டில் ஒருவித உணர்ச்சியை உண்டாக்கி இருக்கின்றது, அநேக விஷயங்களில் கடுமையான எதிர்ப்புகள் மறைந்து விட்டன. சாமியையும் சாத்திரத்தையும் தொட்டதற்கெல்லாம் முட்டுக் கட்டையாகக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்போது அதை ஒருவிதத்தில் மறைத்துக் கொண்டு பழக்கம் வழக்கம் என்று சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். சாமி, மதம், சாத்திரம் என்கின்ற முட்டுக்கட்டைகளை இன்னமும் தைரியமாக உடைத் தெறியத் துணிந்து விட்டோமேயானால் பழக்க வழக்க முட்டுக்கட்டைகளை பஞ்சாய்ப் பறக்கச் செய்துவிடலாம்.

இம்மாதிரி பழக்க வழக்கம் ஏற்படுவதற்கு ஆதாரமாய் இருந்தவைகள் சாமியும் மதமுமேயாகும். ஆகையால் நீங்கள் செய்யவேண்டிய முதல் வேலை என்னவென்றால் உங்கள் முன்னேற்ற விஷயத்தில் சற்றாவது சாமி, மதம், சமயம் பட்டம் சாத்திரம் ஆகிய பூச்சாண்டிகளுக்குச் சற்றும் பயப்படக்கூடாது. சாமியும் மதமும் பொய் என்று சொன்னால்தான் சமத்துவம் கிடைக்கும் என்பதாகத்தோன்றினால்தைரியமாகசாமியும் மதமும்பொய், நாங்கள் அதை ஒப்புக்கொண்டு கீழ்ஜாதியாக இருக்கச் சம்மதிக்கமாட்டோம்என்று சொல்லுங்கள். உண்மையான சாமியும் மதமுமாயிருந்தால் நீங்களும் நானும்சொல்வதற்குப் பயந்துகொண்டு ஓடிவிடாது. ஒருசமயம் அப்படி ஓடிப்போகும் சாமியாலும் சமயத்தாலும் நமக்கு ஒரு காரியமுமே ஆகிவிடாது. நமக்குக் கடவுள் பேரிலும் சமயத்தின் பேரிலும் விரோதமோ போட்டியோ சிறிதும் கிடையாது. ஆனால் எந்தக்கடவுள் பேராலும் எந்த சமயத்தின் பேராலும் நீங்களும் நானும் தீண்டாதவர்களாகவும் காணப்படாதவர்களாகவும்தாசிமக்களாகவும் சொல்லப்படு

ன்றேமோ அந்தக்சமயத்தையும்கடவுளையும் ஒழித்தாக வேண்டும் என்கின்றேம். அதனுல் நரகமே கிடைப்பதானுலும் இப்பொழுதே சாவதானுலும் அக்கரையில்லை என்று சொல்லுகின்றேனே அல்லாமல் மற்றபடி கோயில்களிலுள்ள கடவுள்களை எடுத்தெறிந்து விட்டு அந்தஸ்தானத்தில் நான் இருந்து கொள்ளலாம் என்கின்ற எண்ணமல்ல.

கோயிலிலுள்ள சாமிகளுக்கு கடுகளவு சுயமரியாதை கூட கிடையாது என்பது எனக்குத் தெரியும். அது இரவும் பகலும் பூட்டிக்கிடக்கின்றது. பூசாரி சோறுபோட்டால்தான் உண்டு இல்லாவிட்டால் பட்டினிதான்.

ஈரோடு சாமிகள் 2 மாதம் பட்டினி கிடந்ததுகள். யார் என்ன செய்தாலும் ஏன் என்றுகூட கேட்காமல் வாயை மூடிக் கொண்டுதான் இருக்கவேண்டும். இந்த நிலையில் உள்ள சாமிப்பட்டம் எனக்கும்வேண்டாம். இன்னும் நம்முடைய எதிரிகளுக்கும் வேண்டாம் என்றுதான் சொல்லுவேன். ஆகையால் இம்மாதிரி கடவுள் பூச்சாண்டிகளுக்கு பயப்படாதீர்கள்.

தவிர இந்தமகாநாட்டில் ஒருதீர்மானம்கொண்டுவரப் போவதாக குறிப்பிட்டு என்னிடம் கொடுத்து அதன் மீது பேசும்படி தலைவர் கட்டளையிட்டு இருக்கின்றார். அதாவது:—

“ஆறரைக் கோடி மக்களடங்கிய எங்களுடைய பெரும் சமூகமானது இந்து மதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதன் நிமித்தம்தீண்டப்படாதவர்களாயிருப்பதாலும் அம்மதத்தில் சமத்துவ உரிமை இல்லாதிருப்பதாலும் இனி அடுத்து வருகின்ற சென்சஸ் கணக்கில் எங்களை இந்துக்கள் என்று பதியாமலிருக்கும்படிக்கும் சர்க்காரிலும் எங்களை இந்துக்கள் என்கின்ற பதிவிலிருந்து நீக்கிவிடும்படிக்கும் செய்யும்படி சர்க்காரையும் சபை அங்கத்தினர்களையும் இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது” என்றதீர்மானமாகும் இத்தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். நான் அநேக தடவைகளில் இதைப்பற்றி எழுதியும் பேசியும் இருக்கின்றேன். சமீபத்தில் கூட எந்த சமயத்தில் எந்தக் கூட்டத்தில் மக்களுக்கு சமத்துவம் அளிக்கப்படுகின்றதோ அந்தக் கூட்டத்தில்சமத்துவமளிக்கக்கூடாத மக்களை கொண்டுபோய்சேர்க்க முயற்சி செய்யப்போகின்றேன் என்று எழுதிஇருந்தேன். சமத்துவம்வேண்டுமென்கின்ற மனிதனுக்குச் சமத்துவம் உள்ளமதம் எல்லாம் சம்மதமாகும். சமத்துவமில்லாத மதம் எல்லாம் ஆணவமதமாகும். ஆதலால் இந்தக்கொடுமையான இந்துமதத்திலிருந்து பிரிந்து கொள்ளுகிறவர்களை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். முதலாவது இந்து மதம் என்பதாகவே ஒரு தனி மதம் இல்லவே இல்லை. சிலரின்சுயநலத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக ஆதாரமில்லாமல் போலியாய் வாயளவில் சொல்லிக் கொள்ளப்படுவதே தவிர மதம் சமயம் என்கின்ற முறைப்படி இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை. இதை வெளியில் எடுத்துச்சொன்னுல் நம்மைமதத்துவேஷிதேசத்துரோகிநாஸ்திகன் என்று கூப்பிடச்செய்ய கூலி கொடுத்து பிரசாரம் செய்விக்கின்றார்கள். நம்மைக்கொன்றுவிடுவதாய்ப் பயமுறுத்திக் கடிதம் எழுதுகின்றார்கள். அப்படி அவர்கள் செய்வதிலோ, கொன்றுவிடுதிலோ அதிசயம்ஒன்றும் இல்லை. இது ஒருகூட்டத்தாரின்பரம்பரைத் தொழிலேயாகும். இம்மாதிரி வெகுபேரை கொன்றும்இருக்கின்றார்கள். இதனுல் நமக்கு ஒன்றும் மூழ்கிப்போய்விடாது. நான்செத்துப்போவதால் அவர்களுடைய ஆதிசேஷனுக்குகூட பாரம் குறைபப்போவதில்லை. நாம் மனப்பூர்வமாகதேசத்தினுடையவும், எல்லா சமூகத்திலடையவும், நன்மையை உத்தேசித்தே இவ்வியக்கம தோற்றியுள்ளோமாகையால் அதற்காக உயிர் விடநேருவதை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன், இன்னும் என்னைப்போல அநேகர் இவ்வியக்கத்திற்கு உயிர்விடக்காத்திருக்கின்றார்கள் என்றே நம்புகிறேன். அந்நம்பிக்கை இல்லாவிட்டால் நான் இவ்வளவு தீவிரமாக இருக்கமாட்டேன்.

சுயமரியாதை இயக்கம் ஜனங்களுக்குச் செய்த கெடுதி என்ன என்று யாராவது சொல்ல முடியுமா? மனிதனை மனிதன் இழிவுபடுத்துவதும் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் ஒழிய வேண்டுமென்பது நாஸ்திகமும் தேசத் துரோகமுமானுல் அந்த ஆஸ்திகமும் தேசமும் எதற்காக உலகத்தில் இருக்கவேண்டும். சாதிவித்தியாசம் இல்லாத அந்நிய ஆட்சியில் நாம் இருக்கும் போதே நமது சமத்துவத்திற்கு விரோதமாய் நம்மில் ஒரு கூட்டம் வருணுசிரம பிரசாரம் செய்து நமது சமத்துவத்தைக்கெடுக்கும்போது சாதி வித்தியாசம் உள்ளவர்களின ஆட்சி வந்துவிட்டால் நம் கதி என்னுவது? “பசுவை வண்டியில் கட்டினுல் பாவம்; சூத்திரனையும் பஞ்சமனையும் வண்டியில் கட்டி ஓட்டு” என்று அல்லவா உத்தரவு போடுவார்கள், இவ்வித உத்தரவு இப்போது பன்றி, நாய், கழுதை, மலவண்டி போகும் வீதியில் நடக்கக்கூடாது என்பதற்கும், பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடாது என்பதற்கும், கிணற்றில் தண்ணீர் மொள்ளக்கூடாதுஎன்பதற்கும்,சாமியைக்கண்டு கும்பிடக்கூடாது என்பதற்கும்காலில்விழுந்து கும்பிட்டால்தான், காலைக் கழுவி தண்ணீரைக் குடித்தல்தான் மோட்சம் என்பதற்கும் மற்றும் இதுபோன்று இப்போது இருப்பவைகளுக்கும் சற்றும் கடினமானதென்று நான் நினைக்கவில்லை. மற்றபடி தேசாபிமானிகள் என்பவர்களுக்கு வெள்ளைக்காரர்கள் ஆட்சி நம் நாட்டை விட்டு நாளைக்குப்போய்விடட்டும்என்றுலும் எனக்கு இன்றே போய் விடுவது சம்மதம்தான். ஆனுல் அதற்கு பிறகு எங்கள் கதி என்ன? எங்களை என்ன செய்யப் போகின்றீர்கள்? எப்படி நடத்துவீர்கள் என்பதில்தான்நமக்கும் தேசபக்தர்களுக்கும் இருக்கும் அபிப்பிராய பேதமேயொழிய வேறில்லை. “முதலில்அவர்கள் வெளியில் போகட்டும், பிறகுபார்த்துக்கொள்ளுவோம்” என்றுல்அந்தக்காரியம் இனிநம்மிடம்பலிக்காது என்று சொல்லுகின்றேம். இதனுல் நாங்கள் தேசத்துரோகியாவதானுல் குஷாலாகச் சம்மதிக்கின்றேம்.

இப்போது நமது நாட்டில் எங்கு பார்த்தாலும் ஜனங்கள் வரவர இந்து மதம் என்பதையும், இந்து சமூகம் என்பதையும் விட்டு பிரிந்துபோகவே துணிவுகொண்டுவருகின்றார்கள்

சமீபத்தில் திருவாங்கூரில் கூடிய ஈழவ சமுதாய மகாநாட்டில் திரு. மாளவியா இந்துமதப்பெருமையைப் பற்றி பேசும்போது அச்சமுதாயத்தார் இந்து மதம் வேண்டாம், அது தொலையட்டும் என்று ஒரே அபிப்பிராயமாகச் சொல்லி விட்டார்கள். அம்மகா சங்கக் காரியதரிசி திரு. கோவிந்தன் பி. எ. பி. எல். மாஜி ஜில்லா ஜட்ஜ் இதோ இங்கு உட்கார்ந்திருக்கிறார் பாருங்கள். அவரை நான் கண்டவுடன் ஆச்சரியப்பட்டு தாங்கள் எங்கு வந்தீர்கள் என்று கேட்டதும் அவர் நானும் தீண்டப்படாதவன் தானே. ஆதலால் இந்தக் கூட்டத்திற்கு வந்தேன், என்னையும் ஆதி திராவிடரில்சேர்த்துக்கொள்ளுங்கள் என்றுசொன்னர். எனக்கு அதுகேட்டதும் கண்களில் தண்ணீர்வந்துவிட்டது. அவர் முன்சீப்பாகஇருந்து ஜில்லாஜட்ஜாகி நாணயமும் பரிசுத்தமும் உள்ள ஜில்லா ஜட்ஜு என்று பேர் பெற்று பென்ஷன் வாங்கினவர். இப்போது அவரும் அநேக தெருக்களில் நடக்கமுடியாது. பிறகு கோயிலைப்பற்றி கேட்கவே வேண்டியதில்லை. எனவே இவ்வளவு கொடுமையுள்ள ஒரு கட்டுப்பாட்டிலிருந்து விலகிக் கொள்ள நீங்கள் ஆசைப்படுவது மிகவும் நியாயமும் அவசியமுமாகும். ஆனுல் விடாமுயற்சியாய் வேலை செய்ய வேண்டும். இடைவிட்டால் மோசம் போய்விடும் என்று பொருள்பட பேசியதோடு மற்றும் கலியாணவயதைப் பற்றியும் பேசிவிட்டு ஊருக்குப்போகவேண்டி இருந்ததால் நேரே ரயிலுக்கு போய்விட்டார். திரு. கண்ணப்பர் முதலியவர்கள் பேச இருந்தும் மழை வந்து விட்டதால்கூட்டம்ஒத்திபோடப்பட்டது.

“ரஸ்மக்”
முகப்பருக்களுக்கு
ஆச்சரியமான மருந்து
டப்பி விலை 12 அணு.
விலாசம்:—
கேஷிலன் கம்பேனி,
வேலூர், (வட ஆர்காடு.)

# ஆஸ்திகத்தின் அடிப்படையே ஆபாசம்

—0—

## இவைதான் ஆதி சக்தியா?

(எம். எஸ். மணிஎழுதுவது)

உழைப்பாார் உணவை இளைப்பாறித் தின்கின்ற வன்னெஞ்சங் கொண்ட வைதிகர்களும், வால்பிடிக்கும்சோம்பேறி ஆஸ்திகர்களும்சுயநலம் பற்றி போலிப் புராணங்களையும் பொய்த் தெய்வங்களையும் உண்டு செய்து இந்நாட்டு மக்களை வேறுபட்டவர்களாகவும் மாறுபட்ட மனப்பான்மை கொண்டவர்களாகவும் சீர்கெடச்செய்தது ஆஸ்திகமே என்பதை தன்னுரிமைஇயக்கம்தமிழ் நாட்டில் புட்டுபுட்டு விளக்கவேஇவற்றிற்கெல்லாம் வயிற்றுப் பிழைப்பு ஆஸ்திகர்கள் ஒருவாறுஒப்புக்கொண்டார்களாயினும் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஆதிசக்தி என்பது ஒன்றிருக்கிறது அதனுலேயே இந்த உலகம் படைத்துக் காக்கப்பட்டுவருகிறது, அது கடவா இல்லை? என மூலை முடுக்குகளில் உளறி வருகின்றனர். ஆதலால் ஆதிசக்தியின் ஆபாசத்தையும் ஈண்டு கூறுவோம்.

உலகம் தோன்றுவதற்கு முன்னே நெற்றிக் கண்ணுடன் ஓர் பெண் தோன்றியதாம். அதனையே ஆதி சக்தி, பராசக்தி என்று கூறுவதுண்டு. பின்னர் அச்சக்தி பிர்மா, விஷ்ணு ருத்திரன் என்ற மூவர்களைப் பெற்றதாயும் தாம் பெற்ற அம்மூவர்களும் மிக்க அழகாயிருந்ததைக்கண்டு மோகித்து அவர்களையே மணம் செய்து புருஷ இச்சையை அனுபவித்து வந்ததாயும் பின்னர் சிவன் தாயும் மனைவியுமாகிய சக்தியைக் குறித்து தவம் செய்து அவள் நெற்றிக்கண்ணைப் பெற்றதாயும் பெற்றவுடன் சிவன் தனக்குக் கண்ணைக் கொடுத்த சக்தியையே சாம்பலாக எரித்துவிட்டதாயும் ஒரு புராணம் கூறுகிறது.

இனி மற்றொரு புராணத்திலோ தாரதலம் படைக்க சக்திதோன்றி சக்தியில் சிவம் தோன்றி சிவத்தில் நாதம் தோன்றி நாதத்தில் விந்து தோன்றி விந்துவில் விஷ்ணு தோன்றி விஷ்ணுவில் பிர்மா தோன்றி பிர்மாவில் உலகம், ஆகாயம், வாயு அப்பு பிரிதிவி, அக்கினி, மனிதர், மிருகம், பக்ஷி, தாவரவர்க்கம் முதலியவைகள் உண்டானதாக இயற்கைக்கும், பகுத்தறிவிற்கும் நேர்மையற்றதாய் பொருந்தாத ஒன்றிலிருந்து ஒன்று தோன்றியதாய்க் கூறுகிறது. இதன் ஆபாசத்தையும் அயோக்கியத்தனத்தையும்பற்றி ஆஸ்திகர்களை இனி நாம்கேட்கும்கேள்விகளுக்கு அவர்கள் பண்டிதத்திறமையால் பதில் கூறுவார்களா? அல்லது பதுங்குவார்களா என்பதை பார்ப்போம் சக்தி எப்பொழுது உண்டாயி

றது? எப்படி உண்டாயிற்று? யாரால் உண்டாயிற்று? அது ஏன் பெண் உருவமாக இருக்க வேண்டும்? அதற்கு ஏன் புருஷ இச்சை உண்டாயிற்று? தான் பெற்றவர்களுடன் சேருவதுதான் சக்தியின் முன்நியா? இது மிருகத்திலும் உயர்வா? தாழ்வா? உலகத்தைப் படைக்கத் தோன்றிய சக்திபடையாமற்போனதேன்? தன்னால் உண்டாக்கப்பட்ட சிவனால் கூறு சேரப்போவதை ஏன் உணர்ந்துகொள்ள முடியவில்லை? உணர்ந்திருந்தால் அதை ஏன் தடுக்க முடியவில்லை? தன் கண்ணை மற்றொருவனுக்குக் கொடுக்க முடியுமா? உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்க வந்த சக்தி தன்னால் படைக்கப்பட்ட சிவனால் முடிவில் அழிந்துபோனது தான் ஏன்? தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சக்தியில்லாத சக்தி உலகத்தை எப்படிக் காப்பாற்றும்? சர்வ வல்லமையுள்ள சக்தியின் இலட்சணம் இதுவா? இதன் தெய்வத் தன்மை இதுவா என்று அறிவற்ற ஆஸ்திகர்களை புராணப் பண்டிதர்களைக் கேட்டால் எடுக்கிறார்கள் ஓட்டம்! ஆனால் ஒடுகின்ற இவ்வீரர்கள் தங்கள் வீட்டில் ஓர் மூலையில் போய் ஐயோ! மதம் போச்சு அதனால் உலகமே பாழாய்ப் போச்சு! சாதியில்லை சமயமில்லை சாஸ்திரமில்லை சக்தியில்லை கடவுள் இல்லை ஒன்றுமில்லை என்று கூறுகிறார்களேயென ஒப்பாரிவைக்கின்றார்கள்.

இவர்களுக்கு யார் ஒன்றுமில்லை கடவுள் இல்லை என்று கூறியது? மனிதனின் மனப்போக்கின்படி கற்பனையாக எழுதிவைக்கப்பட்ட போலிப்புராணங்களை நம்பி அதில் கூறப்பட்டவைகளே கடவுள் அதிலுள்ள அண்டப்புளுகு ஆபாசங்களே அதன் அற்புதங்கள் என்று கூறுவதை நீங்கள் நம்ப வேண்டாமென்று கூறுகிறோமே தவிர உண்மைக் கடவுளையாவது உண்மைச் சக்தியையாவது உண்மைச் சமயத்தையாவது ஒருவரும் இங்கு குற்றம் கூறவரவில்லை. எங்களுக்குப்பட்டதைச் சொல்லுகிறோம். உங்கள் பகுத்தறிவு கொண்டு உண்மையை ஆராயுங்கள். பொருத்த முள்ளதை எடுத்துக்கொள்ளுங்கள். பொருத்தமற்றதாயிருந்தால் தாத்தள்ளுங்கள் இதுகாறும் சக்தியின் சரித்திரத்தைக் கூறினோம். இனி அதைப் பூசிக்கும் புல்லறிவாளர் கூற்றைக் கூறுவோம்.

செத்து சாம்பலாய்ப் போன சக்தியின் பெயரால் இல்லாத அதை இருக்கிறதாக எண்ணிக் கொண்டு அதுவும் பட்டினியுடன் இருப்பதாக எண்ணிக்கொண்டு சில ஆஸ்திகர்கள் பால்படி பொங்கல் முதலியவற்றோடு பூசிப்பார்கள். மற்றொரு பகுதிஆஸ்திர்கள் மதுமாமிசத்துடன் படைத்து மகிழ்வார்கள். இனி அதய ஆஸ்திகர்கள் மது மாமிசத்துடன் நிருவாண பூசை புரிவார்கள். இவ் வயோக்கிய பூசனைகளை நாம் விவரித்து எழுதுவதென்றால் வெட்கக்கேடும் ஆபாசமுமாகத் தான் முடியும்.

ஆகவே, நாம் முடிவாக கூறுவதென்னவென்றால் இவையா ஆதிசக்தி? இதுவா உலகத்தைப் படைத்தது? இவ்விதமாகவா பூசிக்கச்சொல்லிற்று? இவ்வாபாசத்தைக் கூறும் புராணமும் ஒன்றைப் புராணமா? இதை நம்பும் மனிதர்களும் மனிதர்களா? இந்த அனுமதிக்கும் மதமும் ஒரு மதமா? என்றே கேட்கிறோம். இவ்வாபாசங்களை ஒழிக்க நம் இயக்கம் உழைப்பதைக்கண்ட சுயநலத் தூர்த்த சிகாமணிகளாகிய ஆஸ்திகர்கள் ஐயோ எங்கள் பழங்காலத்துப் புனித இந்து மதம் போச்சே நாஸ்திகமாச்சே இவ்வாட்சி ஆண்மையுள்ள ஆட்சியா? அலறுகின்றார்கள். காரணம் என்ன? நாட்டில் தம் சோம்பேறிப் பிழைப்புக்கு இனி இடமில்லை. புராணப்பிரசங்கம் செய்து கூலிபெற இடமில்லை. ஒன்றரையணா புராணப் புத்தகத்தை ஒன்றரை ரூபாய்க்கு விற்க இடமில்லை ஆதி சக்தியின் யோக்கியதையும் ஆஸ்திகத்தின் அடிப்படையின் ஆபாசமும் வெளியாய்விட்டது தான் காரணமாகும்.

## சென்னை காங்கிரஸ் கமிட்டி

இந்த வருஷம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டங்கள் கூடுமிடங்களிலெல்லாம் தகராறு இல்லாமல் நடைபெறுவதாகக் காணவில்லை. வேதாரண்ய மகாநாட்டுத் தலைவர் தேர்தல் சூழ்ச்சிகள் தமிழ்நாடு பத்திரிகையில் இருந்து தெரிந்திருக்கலாம்.

சென்னை காங்கிரஸ் கமிட்டி கூட்டம் சென்னை மவுண்ட்ரோட் மகாஜன சபை மண்டபத்தில் திரு. சீனிவாசய்யங்கார் காலிகளைக் கொண்டு போய் வைத்துக்கொண்டு கூட்டங் கூடி யிருப்பதாய்த் தெரிகின்றது. அப்படி இருந்தும் அய்யங்காருக்கு விரோதமான கூட்டமே மெஜாரிட்டியாக வந்து கூடிவிட்டார்கள். திரு. சத்தியமூர்த்தி அக்கிராசனம் வகித்து தமக்கு வேண்டியவர்கள் போக மற்றவர்கள் ஓட்டுச் செய்யாமலிருக்கும்படியாக தந்திரமாய் இத்தனையாந் தேதிக்கு மேல் அங்கத்தினரானவர்கள் தவிர மற்றவர்கள் ஓட்டுக் கொடுக்கக் கூடாது என்று ரூலிங் கொடுத்துவிட்டாராம். அதன் பேரில் திரு. சத்தியமூர்த்தி திரு. கிருஷ்ணசாமி பாவலர் என்பவரை ஏவிவிட்டு கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை கன்னாபின்னா என்று வையச் சொன்னாராம். கூட்டம் தைரியமாய் எதற்கும் தயாராயிருந்து எதிர்க்கவே திரு. அய்யங்காரும், அவரது தாசர்களும், கூலிகளும் எழுந்து ஓடிப்போய் விட்டார்களாம். பிறகு மற்றவர்கள் இருந்து தேர்தலை நடத்தி இருக்கின்றார்கள். வழக்கம்போல் அய்யங்கார் கூட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிர்வாக சபையார் என்கின்ற முறையில் அந்தேர்தலை செல்லுபடி அற்றது என்று சொல்லப்போகின்றார்கள் என்பது உறுதி. எனவே காங்கிரஸ் என்பது திரு. சீனிவாசய்யங்காருக்கும் அவர்களின் தாசர்களுக்கும் கூலிகளுக்கும் மாத்திரம்தான் சொந்தமேயன்றி மற்றபடி பொது ஜனங்களுக்கு அதில் ஒன்றும் சம்பந்தம் இல்லை என்பதற்கு இனியும் என்ன சாட்சி வேண்டும்.

## கோவில் பிரவேசம்

வங்காளத்தைச் சேர்ந்த குல்னா காளி கோவிலுக்குள் தீண்டாதார் எனப்படுவோர் செல்ல வேண்டுமென்று சத்தியாக்கிரகம் செய்து வந்ததும், அதனால் சிலர் கைதியானதும் சென்ற வார பத்திரிகையில் தெரிந்திருக்கலாம். இப்போது இந்துக்கள் என்பவர்கள் எல்லோரும் தீண்டாதார் எனப்படுவோர் உள்பட தாராளமாய் கோயிலுக்குள் சென்று சாமிதரிசனம் செய்யலாம் என்பதாக மேல் ஜாதியார் என்பவர்கள் ஒப்புக்கொண்டு ராஜி ஏற்பட்டு கைதியாக்க பட்டவர்களையும் விடுதலை செய்துவிட்டார்கள்.

## ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் போர்டு கூட்டம்

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் 17-7-29 பகல் மூன்று மணிக்கு நிர்வாக சபை தேர்தலுக்காக ஹைஸ்கூல் போர்டு மெம்பர் பொது கூட்டம் ஒன்று கூடிற்று. திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் அக்கிராசனம் வகித்தார். அடியிற்கண்ட கனவான்கள் அடுத்த இரண்டு வருஷத்திற்கு நிர்வாக சபை அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

திருவாளர்கள் தலைவர் ராவ்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார்.

உபதலைவர்கள் ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர், கா. அ. ஷேக்தாவுத் சாயபு.

காரியதரிசி. மு. சிக்கய்யநாயக்கர்.

பொக்கிஷதார்: ஈ. வெ. ராமசாமி.

மெம்பர்கள்:—ஈ. வி. நஞ்சப்ப செட்டியார், எஸ். என் பழனிவேலப்ப கவுண்டர், எம். எஸ். முத்து காருப்ப செட்டியார், கே. பாலசுப்பராயலு நாயுடு, டி. எம். நரசிம்மாச்சாரியார், ஈ. எஸ். கணபதி அய்யர், டபிள்யூ டி. வெங்கிட்டரமண ராவ், ஈ. ஜீ. காளிதாஸ். ஏ. பழனியப்ப செட்டியார், ஈ. எஸ். அர்த்தநாரி ஆசாரி, எஸ். ஈ. ஜி. முகமது இப்ராகிம். கே காதர் சாயபு, பி. வி. கே. வெங்கிடாமண செட்டியார், த பச்சமுத்து செட்டியார் ஆகியவர்கள் ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு பள்ளிக்கூடத்தில் முதல் பாரம் வரையிலும் கிடைக்கக் கூடிய பெண்கள் உபாத்தியாயர்களை நியமிக்கவேண்டுமாயும். பெண்பிள்ளைகளையும் சம்பளமில்லாமல் தாராளமாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமாயும், சேர்த்துக்கொள்ளப்படும் பிள்ளைகளுக்குச் சர்க்காரில் சம்பளம் கொடுப்பார்கள் என்றும், அந்தப்படி செய்ய நிர்வாகக் கமிட்டியாருக்கு யோசனை சொல்ல வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

நிர்வாகக் கமிட்டிக்கே அதிகாரமிருப்பதாயும், அவர்கள் அந்தப்படி செய்வதில் போர்டுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் எடுத்துச்சொன்னார். நிர்வாக கமிட்டிக்கு செய்ய அதிகாரமிருந்தாலும் போர்டாருக்கு இஷ்டமிருப்பதை யாவது நிர்வாகக் கமிட்டிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னதும் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள் அந்தப்படி செய்வதாக தெரிவித்ததன் பேரில் தீர்மானத்தைப் பதிவு செய்யாமல்விடுவிடப்பட்டதென்று நமது நிருபர் தெரிவிக்கிறார்.

## வைதீகப் பார்ப்பனனுக்கும் உத்தியோகப் பார்ப்பனனுக்கும் சம்பாஷணை

(ஆஸ்திகன் எழுதுகிறார்)

ஐயர்:—என் காணும் சாஸ்திரிகளே! நீர் விதவாவிவாகம் செய்யக் கூடாது என்கிறீர். வயது வந்த பிறகு பெண்களுக்குக் கலியாணம் செய்யக் கூடாது என்கிறீர். கலப்பு விவாகம் செய்யக்கூடாது என்கிறீர். ஆனால், சீனு விதவையைக் கலியாணம் செய்துகொண்டானே அதை யறிந்தும் ஏன் அவன் வீட்டுக்குப் பிராமணார்த்தத்திற்கும் மற்ற வைதீகச் சடங்குகளுக்கும் போய் வருகிறீர். சாமா ஐயர் தன் பெண்ணுக்கு புத்தியறிந்த பின் கலியாணம் செய்தாரே அந்தக் கலியாணத்திற்கும் நீர்போய் வந்தீர். அனுமந்த ராவ் ராமா ஐயங்கார் மகளைக் கட்டிக் கொண்டாரே அங்கேயும் போய் தட்சணை, பிராமணார்த்தம் முதலியன பெற்று வந்தீர். ஆனால், நீர் பேசுவது எல்லாம் விதவா விவாகம் கூடாது, பெண்களுக்குப் புத்தியறிவதற்குமுன் கலியாணம் செய்யவேண்டும், கலப்பு விவாகம் கூடாது, இது சாஸ்திர சம்மதம் அன்று என்று வீண் புரளி செய்கிறீர். நீர் பேசுவதற்கும் நடந்துகொள்வதற்கும் விரோதமாயிருக்கிறதே?


சாஸ்திரி:— என்ன ஐயரவாள்! இது உமக்குத் தெரியவில்லையா? நீர் பிராமணராயிருந்தும் இந்தச் சூது அறியாமலிருப்பது வருத்தமாயிருக்கிறது. நான் பேசுவதற்கு உள் அர்த்தம் இருக்கிறது. இதை நீர் உணரவில்லை போலும்! விதவா விவாகம் கூடாது என்று சொன்னால் அது சூத்திரர்களைக் குறித்துச்சொன்

(தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டுச் சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு

"குடி அரசு" சந்தா பாக்கிகளை வசூலிக்கவும், புதுச் சந்தாதார்களைச் சேர்க்கவும், நமது ஏஜண்டு திரு. காளியப்பன் தற்சமயம் சிங்கப்பூர் முதலிய இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்துவருகிறார். நேயர்கள் அவரிடம் சந்தாத்தொகைசெலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேணுமாய்க் கோருகிறோம்.

மானேஜர்.



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவுசூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"


# குடி அரசு

சென்னை 1929 ஜுலை 21உ


## சம்மத வயது கமிட்டி

### மதமும் சீர்திருத்தமும்

இளங் குழந்தைகளின் கலியாணங்களைத் தடுப்பதற்காக நமது நாட்டில் வெகுகாலமாகவே முயற்சிகள் செய்யப்பட்டு வந்தாலும் அவை பயன்படாதிருக்க எதிர்முயற்சிகளும் செய்யப்பட்டு காலம் கடத்திவரும் விஷயம் தமிழ்மக்கள் அறிந்ததாகும். ஆனால் சமீபகாலத்தில் மற்ற மேல்நாடுகளின் முற்போக்கைப் பார்த்த சிலர் இப்போது இதுவிஷயமாய் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்ததன் பலனாகவும், தேக தத்துவ சாஸ்திரத்தின் முறைப்படியும், வைத்திய சாஸ்திர முறைப்படியும், குழந்தை மணங்களினுடையவும், குழந்தைச் சேர்க்கைகளினுடையவும் குற்றங்களை மக்கள் அறியத் தொடங்கியதன் பயனாகவும், பாமரமக்களுக்குச் சற்று கல்வியும் உலக அறிவும் எட்டுவதற்கு இடமேற்பட்டதன் பலனாகவும் குழந்தைகள் விவாகத்தைத் தடுக்க வேண்டுமென்கின்ற முயற்சியோடு குழந்தைகளின் சேர்க்கையையும் அதாவது சரியான பருவம் அடைவதற்குமுன் ஆண் பெண் சேர்க்கை கூடாது என்பதாகவும் கருத இடமேற்பட்டு அவற்றைத் தடுக்க சட்டங்கள் செய்யவும் முற்பட்டு சட்டசபைகளில் மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. நமது அரசாங்கத்தார் என்பவர்கள் நம் நாட்டைப் பொறுத்தவரை நமது நாட்டுப் பார்ப்பனர்களைப் போலவே சுயநலக்காரரும் பொறுப்பற்றவர்களுமாய் இருக்க வேண்டியவர்களாய் விட்டதால் அவர்கள் இவ்விஷயத்தில் மனிதத்தன்மையுடன் நடந்து சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்படி செய்யாமல் பொறுப்பற்றதன்மையில் இவ்விஷயங்களில் பொதுஜன அபிப்பிராயத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் போல வேடம்போட்டு இதற்காக ஒரு கமிட்டியை நியமித்து அக்கமிட்டியை பொதுஜனங்களை விசாரித்து அறிக்கை செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டார்கள். அக்கமிட்டியும் மாதக்கணக்காக பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பொதுஜனங்கள் என்பவர்களை விசாரணை செய்து ஏகோபித்து ஒரு முடிவுக்கு வந்து கலியாணம் செய்ய பெண்களுக்கு 14 வயதாக வேண்டுமென்றும், உடல் சேர்க்கை வைத்துக்கொள்ள கலியாணமான பெண்களுக்கு 15 வயதாக வேண்டுமென்றும், கலியாணமாகாத பெண்கள் விஷயத்தில் உடல் சேர்க்கைக்கு 18 வயதாக வேண்டுமென்றும் அறிக்கை செய்திருக்கின்றார்கள். இவ்வறிக்கையில் உடல்சேர்க்கைவிஷயமாய்ச் செய்திருக்கும் வயது கிரமமானது கலியாணமான பெண்ணுக்கு ஒருவிதமாகவும், கலியாணமாகாத பெண்ணுக்கு ஒருவிதமாகவும் குறிப்பிடப்பட்டிருப்பது சிறிது விவாதத்திற்கிடமானதாயிருந்தாலும், கலியாண வயது 14 என்று குறிப்பிட்டிருப்பதும் அவ்வளவு போதுமானதாக இல்லாததாய் இருந்தாலும் ஒரு அளவுக்கு நாம இந்த அறிக்கையை வரவேற்கின்றோம்.

முதலாவதாக, கலியாணமான பெண்ணுக்கும் ஆகாத பெண்ணுக்கும் உடல் சேர்க்கை விஷயத்தில் வித்தியாசம் கற்பிக்கப்படவேண்டிய அவசியமில்லை என்பதே நமது அபிப்பிராயம். ஆனால் பார்ப்பனர்கள் அந்தக் கமிட்டிமுன் சாட்சியம் கொடுத்ததில் அநேகர் தங்கள் சமூகப் பெண்கள் பக்குவமாய்விட்டால் பரிசுத்தமாய் இருக்க முடியாதென்றும், அவர்களுக்குக் கல்வி உணர்ச்சி சிறு வயதிலேயே ஏற்பட்டு விடுகின்றதென்றும், அவர்களைக் காவல் காக்க வேண்டிய பொறுப்பு தங்கள் தலையில் விழுந்துவிடுமென்றும், ஏதாவது சிறிதளவாவது பேர் கெட்டுவிட்டால் பிறகு அதன் வாழ்க்கை கஷ்டமாகி விடுமென்றும் சொல்லியிருப்பதால் அவர்களின் குறைகளைத்திருப்திசெய்ய வேண்டி கலியாணமாகாதபெண்களை 18 வயதுக்குமுன் யாராவது கூடினால் கூடின ஆண்களுக்குத் தண்டனை விதிப்பதற்காக இம்மாதிரி விதித்திருக்கின்றதாக நாம் கருதுகின்றோம். ஆனால் இம்மாதிரி நடவடிக்கைக்குக் கட்டுப்பட்ட பெண்களுக்குத் தண்டனை ஒன்றுமில்லை. தவிரவும் பெண்கள்மீது வேறு எவ்வித அபவாதமும் ஏற்படாமலிருக்கவும் இந்த விதி உபயோகப்படலாமென்று கருதியிருக்கக் கூடுமென்றும் நினைக்கின்றோம். தவிர 14-ல் கலியாணம் செய்துகொண்டு 15 வயதுவரையில் அதாவது ஒரு வருடம்வரை காத்திருக்க முடியுமா? என்றும், ஏன் கலியாண வயதையே 15 ஆக தீர்மானித்திருக்கக் கூடாதென்றும் சிலர் கேட்கலாம். ஏகோபித்த அபிப்பிராயமாக இந்த அறிக்கை இருக்க வேண்டுமென்பதை உத்தேசித்து ஒரு கட்சியார் இதில் ஒரு வருடம் விட்டுக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதாகக் கருதுகின்றோம். அதாவது கலியாண வயதை பிரவிடையாவதற்கு முன்னாகவே கலியாணம் செய்யத்தக்கதாய் இருக்கும்படி செய்ய மெஜாரிட்டிகள் விரும்பியிருப்பதாகத் தெரிய வருகின்றது. அம்மாதிரி செய்துவிடும்பட்சத்தில் சேர்க்கைவயது இன்னும் குறைந்தாலுங் குறையும். ஆனால் தங்கள் முக்கிய கொள்கைக்கு விரோதமில்லாமல் ஒரு ஏகோபித்த அறிக்கை அனுப்ப இடம் கிடைத்தால் தனிக் குறிப்பெழுத வேண்டிய அவசியம் வேண்டியதில்லை என்பதை உத்தேசித்தே மெஜாரிட்டியாரும் இதற்குச் சம்மதித்திருக்கின்றார்கள்போல் காணப்படுகின்றது. அதாவது நமக்கு முக்கியமானது கலியாண வயதேயொழிய சேர்க்கை வயதல்ல. ஏனெனில் 8 வயதிலும் 10 வயதிலும் கலியாணம் செய்துகொள்ள அனுமதித்துவிட்டு ஒருவருக்கொருவர் சேரக்கூடாது என்று சட்டம் செய்து ஒருவரையொருவர் சேராமல் காவல் பார்த்துக் கொண்டிருப்பது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்பதும், சாத்தியப்படாதது என்பதும், இயற்கைக்கு விரோதமென்பதுமே நமது அபிப்பிராயம். ஆதலால் நமக்குக் கலியாண வயதே பிரதானம் என்கிறோம். அதில் கமிட்டியார் 14-வயது என்று தீர்மானித்தது ஒரு சமயம் சிலர் போதாது என்று கருதினாலும் நாம் அதுவே போதுமென்று சொல்லுவோம். ஏனெனில், கலியாண வயது 10 என்றாலும், 13 என்றாலும் ஒன்றேதான் என்பதுபோல், 14-என்றாலும் 18-என்றாலும் ஒன்றுதான் என்பது நமதபிப்பிராயம். எனவே இங்குள்ள முக்கிய விஷயமென்னவென்றால், பெண்கள் பிரவிடையாகும் முன்புதான் கலியாணம் செய்யவேண்டும், இல்லாவிட்டால் மதத்திற்கு விரோதம், பாவம், நரகம் சம்பவிக்கும் என்கின்ற பூச்சாண்டிகள் கொல்லப்பட்டுவிட்டார்கள். ஆதலால் இந்தக் கமிட்டி அறிக்கையில் மதசம்பந்தமான நிர்ப்பந்தமும் கட்டுப்பாடும் ஒழிக்கப்பட்டிருப்பது பெருத்த அனுகூலமாகும். பக்குவமான பின் கலியாணம் செய்வதாயிருந்தால் பெண் விஷயத்தில் யாரும் அவசரப்பட்டுக்கொண்டு கலியாணம் செய்துவிடமாட்டார்கள். சௌகரியப்படி எதிர்பார்ப்பார்கள். பெண்களும் தாராளமாய்ப் படிக்கவும், உலகத்தைத் தெரிந்துகொள்ளவும் சந்தர்ப்பமேற்படும். பிறகு தகப்பன் சொன்ன புருஷனைத்தான் கட்டிக்கொள்ள வேண்டுமென்கின்ற நிர்ப்பந்தமுமிருக்காது. தனக்கும் புருஷனைத் தேர்ந்தெடுக்கத்தக்க யோக்கியதை உண்டாய்விடும். பிறகு நாள் போகப்போக சுயம்வரமும் காதல் மணமும் ஏற்பட இடமேற்பட்டுவிடும். எனவே 14-வயதுக்கு மேற்பட்டுத்தான் கலியாணம் செய்யப்பட வேண்டுமென்று செய்த அறிக்கையைப் பெண்கள் விஷயத்தில் கவலையுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் கவலையுள்ளவர்களும் வரவேற்பார்கள் என்றே எண்ணுகின்றோம். தவிரவும் இந்த ஒரு விஷயத்தில் மத நிர்ப்பந்தம் நீங்கினால் மற்ற விஷயங்களி

லும் மனித சமூகத்தின் இயற்கைக்கும் அறிவிற்கும் விரோதமான காரியங்களிலுமுள்ள மத நிர்ப்பந்தங்கள் விலகவும் சற்று அனுகூலமாயிருக்குமாதலால் அந்த அளவுக்கு நாம் இதை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றோம். உடன்கட்டை ஏறும் விஷயமும் நீக்கப்பட்டபோது அது மத கட்டுப்பாட்டிற்கு விரோதமென்று தான் சொல்லிக்கொள்ளப்பட்டதானாலும் தைரியமாய் சட்டம் செய்தபிறகு முன் புருஷனுடன் கட்டையில் வைத்து எரிக்கப்பட வேண்டிய பெண்கள் இப்போது புருஷன் இறந்த பிறகு மறு மணம் செய்து கொள்ள அருகதையுடையவர்களாகச் செய்துகொண்டும்வாழுகின்றார்கள். அதுபோலவேஇப்போது இந்தஅளவுக்குச்சட்டம் செய்துவிட்டால் நாளைக்கு உண்மையிலேயே 18 வயதுவரையில் கூட கல்யாணத்திற்கு காத்திருக்கும் நிலைமை தாராளமாய் ஏற்படும். அன்றியும் பெண்கள் பலர் தங்களுக்கு கலியாணமே வேண்டாம் என்றுகூட சொல்லிக்கொண்டு பெண் பிரமச்சாரிகளும், மடாதிபதிகளும், சந்நியாசிகளும், சுவாமிகளும் ஆகவும் கூடிய நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆகையால் இப்போது சீர்திருத்தக்காரர்கள் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் அறிக்கையைப் பற்றி குணதோஷம் பேசாமல் அவ்வறிக்கை அப்படியே இந்தியா சட்டசபையில் நிறைவேறும்படி செய்யவேண்டியதே முக்கிய கடமையாகும்.

இவ்வறிக்கை சர்க்கார் முறையில் வெளியாவதற்கு முன்பே பார்ப்பனர்கள் இவ்வறிக்கைக்கு விரோதமாய் மதத்தின் பேராலும், வருணாசிரம தர்மத்தின் பேராலும் எதிர் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். சாதாரணமாக இந்த அறிக்கையின் கருத்து வெளியான இந்த 20, 25 நாள்களுக்குள்ளாக தமிழ் நாட்டிலும், ஆந்திர நாட்டிலும் தினம் ஒன்று இரண்டு இடங்களில் கூட்டம் போடப்பட்டதாக ஏற்பாடு செய்து அவ்வறிக்கையைச் சர்க்கார் ஒப்புக்கொள்ளப்படாதென்றும், சட்டசபை பிரதிநிதிகள் ஓட்டு கொடுக்கப்படாது என்றும் தீர்மானங்கள் செய்ததாக பேர் செய்து தீர்மானங்களைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி வருகின்றார்கள்.

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் ஒவ்வொரு சீர்திருத்தத்தின் போதும் இப்படியே கூச்சல் போடுவது வழக்கமானதால் நாம் இவற்றிற்குப் பயப்படாமல் தெரியப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் எதிர்க் கூட்டங்கள் போட்டு அறிக்கையை ஆதரித்து தீர்மானங்கள் செய்து தீர்மானங்களை சர்க்காருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தகவல் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

தேவஸ்தான சட்டத்தின் போதும் இந்தப் பார்ப்பனர்கள் இப்மாதிரிதான் கூச்சல் போட்டார்கள். ஆனாலும் சட்டம் நிறைவேறி விட்டது. ஆனால் அந்தச் சட்டத்தினால் யாருக்கும் ஒருவித பலனும் இதுவரை ஏற்பட்டதாக சொல்வதற் கில்லாமலிருக்கின்றது. வீணாக கமிட்டிகளும் உத்தியோகங்களும் ஏற்பட்டது தான் மீதியே ஒழிய மற்றபடி வீணாய்ச் செலவாகும் பணம் ஒரு காசுகூட மீதியாவதற்கு இல்லாமலும், வேறுநல்ல வழியில் செலவிடுவதற்கு இல்லாமலும் இருப்பதுடன் முன் சாப்பிட்டவர்கள் சாப்பிட்டுக் கொண்டும், முன் கோயிலின் பேரால் இழிவுபடுத்தப் பட்டவர்களும் தாழ்ந்த சாதி ஆக்கப்பட்டவர்களும் அதே நிலையில் தான் இருந்து வருகின்றார்கள். ஓட்டு மூலமும் சட்டசபை மூலமும் நிர்வாகம் செய்யும் அரசாங்கம் நமது நிலைக்குச் சிறிதுகூட பொருத்தமற்றதென்றே சொல்லவேண்டி இருக்கின்றது. இதுசமயம் நமக்கு கமால் பாட்சாவுடையது போன்றஒரு வீரஎதேச்சை அரசாங்கமேவேண்டி இருக்கின்றது. ஏனெனில் மேல் பதவியிலும் முன்னிலையிலும் குறைவற்ற தன்மையிலும் இருக்கின்றவர்களே அநேகமாய் ஓட்டர்களாகவும், பிரதிநிதிகளாகவும் இருக்கின்றார்கள். இவர்களை ஆதாரமாகக் கொண்டே அரசாட்சி ஓட்டென்னும்தந்திரத்தாலும் பிரதிநிதித்துவம் என்னும் சூழ்ச்சியாலும் அரசாளப்பட்டு வருகின்றது. இங்கிலேயிலுள்ள ராஜ்யபாரத்தில் கஷ்டப்படுகின்ற-ஓட்டுரிமை இல்லாத மக்களுக்கு நன்மை கிடைப்பதென்றால் சிறிதும் எதிர்பார்க்கக் கூடியதல்ல என்றாலும், ஒரு பெரிய ஆற்றைக் கடப்பதுபோன்ற இந்த அறிக்கையை ஒருவாறு சட்டமாக்கிக் கொண்டால் பின்னால் வேலை செய்பவர்களுக்குச் சற்று அனுகூல மேற்படுமாதலால் ஆங்காங்குள்ள மக்களைத் தயவுசெய்து பொதுக்கூட்டம் கூட்டி விஷயங்களை விளக்கி அறிக்கையை ஆதரிப்பதாகத் தீர்மானங்களைச்செய்தனுப்பும்படியாக மறுபடியும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

# ஆதிதிராவிடர் சுயமரியாதை மகாநாடு

சென்னை நேபியர் பார்க்கில் (தில்லைவனத்தில்) ஆதிதிராவிட சுயமரியாதை மகாநாடு கூடிய விவரம் மற்ற பக்கத்தில் வெளியாயிருக்கின்றது. அதில் ஒரு முக்கிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். அதாவது:—

“ஆறரைக்கோடி மக்கள் அடங்கிய எங்களுடைய பெரும் சமூகமானது இந்து மதத்தில் சேர்க்கப்பட்டிருப்பதன் நிமித்தம் தீண்டப்படாதவர்களாயிருப்பதாலும், அம்மதத்தில் சமத்துவ உரிமை இல்லாதிருப்பதாலும் இனி அடுத்து வருகின்ற சென்சஸ் கணக்கில் எங்களை ‘இந்துக்கள்’ என்று பதியாமலிருக்கும்படியும், சர்க்கார் தஸ்தா வேஜுகளிலும் எங்களை இந்துக்கள் என்கின்ற பதவியிலிருந்து நீக்கி விடும்படிக்கும் செய்யும்படி சர்க்காரையும், சட்டசபை அங்கத்தினர்களையும் இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகின்றது”

என்பதாக தீர்மானித்திருக்கின்றது. திருவாங்கூர் ராஜ்யத்திலும் சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக மூதுகுளத்தூர் என்கின்ற இடத்தில் கூடிய ஒரு எஸ். என். டி. பி. யோகத்தில் அதாவது ஈழவ சமுதாய மகாநாட்டில் இதை அநுசரித்த ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதாவது “இந்து மதத்தில் மனித சுதந்தரம் இல்லாததால் இம்மதத்தை விட்டு வேறு மதத்திற்கு போய்விட வேண்டும்” என்பதாகும்.

இத்தீர்மானம் ஒன்று வரப்போவதாகத்தெரிந்து சில கிறிஸ்தவபாதிரிகளும், ஆரிய சமாஜிகளும், புத்தமத பிரமுகர்களும் அக்கூட்டத்திற்கு வந்திருந்து தங்கள் தங்கள் மதத்தின் பெருமையை எடுத்துச் சொன்னார்கள்.

திரு ஈ. வெ. ராமசாமியும் அம்மகா நாட்டிற்கு போயிருந்தார். அந்த சமயத்தில் திரு. ராமசாமி அத்தீர்மானத்தை ஆதரித்துப்பேசிய போது இதுசமயம்வேறுமதத்திற்குப் போக வேண்டியதில்லை என்றும், இனியும் சிறிது காலம் பார்க்கலாம் என்றும், அப்படி மதம்மாறுவதாயிருந்தால் மகமதியமதத்திற்குப்போவது நல்லதென்றும், ஏனெனில்மதத்தின் பேரால் மக்கள் இப்போதுமகம்மதிய மதத்தைக் கண்டால் தான் பயப்படுகின்றார்கள் என்றும், அதில் பெண்கள் விஷயம் தவிர மற்ற வழிகளில் உண்மையான சர்வ சுதந்திரமும் இருக்கின்றதென்றும், நமது நாட்டில் உள்ள கிறிஸ்தவ மதம் வரவர பார்ப்பன மதம்மாதிரியாகிவருகின்றதென்றும், அதிலும் ஜாதி உயர்வு பாராட்டப்படுகின்றதென்றும், ஆரிய சமாஜம் என்பது பார்ப்பன மதத்தின் வேறு ஒரு ரூபமே ஒழிய வேறில்லை என்றும், பௌத்தகொள்கைகள் இப்போதுள்ள மற்ற எல்லா மதங்களின் கொள்கைகளைவிட மேலானது என்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்றும், ஆனாலும் பார்ப்பன மதத்தையடக்கி நமது நாட்டிற்கு உண்மையான விடுதலை தேடிக் கொடுக்கவேண்டுமானால் இதுசமயம் மகம்மதிய மதத்தால்தான் முடியுமென்றும் பேசினார். பிறகு அவர் சொன்னபடியே இப்போதுமதம் மாறவேண்டியதில்லைஎன்று தீர்மானிக்கப்பட்டது. இப்போது ஆதிதிராவிட மகாநாட்டிலும் சரியாக அதேபோல் இல்லாவிட்டாலும், இந்து மதத்திலிருந்து விலகிக் கொள்ளுவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியானால் இனி மேல் அவர்கள் என்ன பெயரால் அழைக்கப்படுவது என்று சிலர் கேட்கலாம். ஒரு பெயராலும் அழைக்க வேண்டியதில்லை என்றும், அவசியமானால் இந்தியன் என்று அழைக்கலாம் என்றும் சொல்லுவோம். மேலும் சர்க்காரில் குறிக்க ஏதாவது ஒரு பெயர் வேண்டாமா என்றால் அதற்காக இப்போது இந்தியாவில் உள்ள 20 கோடி இந்துக்கள் என்பவர்களை எப்படி அரசியல் முறையில் மகம்மதியரல்லாதவர்கள் என்று அழைக்கப்படுகின்றதோ அதுபோல் 6½ கோடி தீண்டப்படாத மக்கள்என்பவர்களை இந்துக்களல்லாதவர்கள் என்று அழைக்கலாம் என்று சொல்லுவோம்.

பார்ப்பனரல்லாதவர்களும், மகமதியரல்லாதவர்களும் இருக்கும்போது இந்துக்களல்லாதவர்கள் என்று ஒரு கூட்டம் இருப்பதால் ஒன்றும் முழுகிப் போய்விடாதென்றும், அதனால் எவ்வித இழிவும் ஏற்பட்டு விடாதென்றும் சொல்லுவோம். அப்படி ஒரு இழிவு ஏற்படுவதாயிருந்தாலும் இந்துக்கள் என்கின்ற பெயரை வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் ஏற்பட்டிருக்கும் இழிவைவிட அதிகமான இழிவாய் விடாதென்பதே நமது அபிப்பிராயம். இந்து மதம் என்பதாக ஒரு மதமே இல்லாத நிலையில் அதன் பேரில் மக்கள் அழைக்கப்படுவதை மிகவும் அக்கிரமமான செய்கையாகும் அப்படியிருக்க அதன் பேரால் மனிதனின் உரிமைகளை மறுத்து கோயில் குளம், தெரு பள்ளிக்கூடம் முதலியவைகளின் உரிமைகளை மறுப்பது எல்லாவற்றையும் விட அக்கிரமும் அயோக்கியத்தனமுமாகும்.

சாதாரணமாக இந்துமதம் என்பதாக ஒரு மதம் இல்லை [illegible] பற்றி நாமே தனித்து [illegible] தாகவும், அதைப்பற்றியபடிப்பு சிறிதும் இல்லை என்றும், அதுவும் பார்ப்

பனர்கள்மீதுள்ள துவேஷத்தால் சொல்லுவதாகவும் சிலர் சொல்லுகின்றார்கள்.

ஆனால் இப்போது நமது நாட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர் என்றும், சமய ஆராய்ச்சியில் தேர்ந்தவர் என்றும் மிக்க நுண்ணிய அறிவுடையவ ரென்றும், பல்லோரால் மதிக்கப்படும் உயர்திருவாளர் திருநெல்வேலி கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்கள் சுமார் 7, 8 வருடங்களுக்குமுன் செந்தமிழ்ச் செல்வி என்னும் புத்தகத்தில் எழுதி இருப்பதை இங்கு அப்படியே எழுதுகின்றோம்.

"முதல் முதல் மக்கள் உள்ளத்தே பதிக்க வேண்டியது யாதெனில் இந்து மதம் என்ற ஒரு சமயம் உண்மையில் கிடையாது என்பதும் இந்து மதம் என்பது இந்திய நாட்டிலுள்ள மக்களின் சமயம் என்று கொள்ளப்படும் சிந்து நதிக்கரையில் உள்ளவர்களைக் குறிக்கும் ஹிந்து என்ற பாரசீகச் சொல்லை கிரேக்கர் "இந்து" என வழங்க அவர் வழக்கைப் பின்பற்றி மேலை தேசத்தார் யாவரும் இந்நாட்டிலுள்ளாரை இந்துக்கள் எனவும், இந்நாட்டை இந்தியா எனவும் வழங்கலாயினர். இந்து என்ற சொல் இப்பொருளில் ஆரியம், தமிழ் என பண்டைய இரு மொழி நூல்களிலும் கிடையாது.

இந்நாட்டிலே சமயங்களைப்பற்றி சிறிதும் அறியாதவர்கள் தங்கள் மதத்தை இந்து மதம் என்று கூறுவார்கள் ......... ஐரோப்பியம், அமெரிக்கம் ஆங்கிலம் என்ற சொற்கள் வாயிலாக அந்நாட்டு சொற்களும், நாகரிகங்களும் குறிக்கப்படுவதேயல்லாது சமயம் குறிக்கப்படாமைபோல இந்து என்ற சொல்லும் இமயம் முதல் குமரிவரையில் உள்ள மக்களின் நாகரிகத்தைக் குறிப்பதேயன்றி சமயத்தைக் குறிப்பதன்று. இக்கருத்தை சுவாமி விவேகாநந்தரும் தமது சொற்பொழிவு பலவற்றிலும் சுட்டி உள்ளார்......ஒரு சமயத்திற்குப்பெயர் அதன் கடவுளை வைத்தாதல், தலைமைஆசிரியரை வைத்தாதல் அருள் நூலை வைத்ததால் எழுதுவது முறை...... கிறித்துமதமும் மகம்மதிய மதமும் தங்கள் தலைவரது பெயரைத் தமக்குப் பெயராகக் கொண்டுள்ளன. அவ்வாறே புத்தமதமும் ஆருகதமுமாம். ஆனால், 'இந்து' என்ற சொல்லோ சமயக் கருத்து யாதொன்றையும் குறித்திலது."

இக்குறிப்பில் திரு. பிள்ளை அவர்கள் சுவாமி விவேகாநந்தரும் இதே அபிப்பிராயம் கொண்டதாகக் கூறி இருக்கின்றார். எனவே இப்படி ஒரு அர்த்தமே இல்லாத வார்த்தையின் பேரால் மதம் என்று ஒன்றைக் கற்பித்துக் கொண்டு சமயத்திற் கேற்றபடியெல்லாம் தங்கள் தங்கள் சுயநலத்திற் கேற்றபடியெல்லாம் கொள்கைகளைச் சொல்லிக்கொண்டு 20 கோடி மக்களையும், பல வளப்பமுள்ள ஒரு பெரிய தேசத்தையும் பாழாக்கி வருவதை இனியும் எத்தனை காலத்திற்கு மக்கள் பொறுத்துக்கொண்டிருப்பது என்பது விளங்கவில்லை.

இதைப்பற்றி மற்றொரு சமயம் டாக்டர் எஸ். சுப்பிரமணிய அய்யரான ஒரு பார்ப்பனர் அவர்களை "காமன்வீல்" என்ற பத்திரிகையில் எழுதி இருப்பதாவது:—

"இந்துக்களின் தற்கால நிலைமையைக் கவனித்துப் பார்த்தால் தாறுமாறாக சிதைந்து அலங்கோலப்பட்டு இடிந்து பாழாய்க் கிடக்கும் இந்து மதம் என்னும் பழைய கோட்டை அங்கே சிறிது இங்கே சிறிதாக எவ்வாறு ஒழுங்குபடுத்தி முட்டுக்கொடுத்து பழுது பார்த்தாலும் பயன்படாது. தயவு தாட்சண்ணியமின்றி வெட்டித்தள்ளி ஒதுக்கிவிட்டு ஆதி அடிப்படைகளின் மீது நமது தற்கால அவசியத்திற்கும், உபயோகத்திற்கும் ஏற்றதாகச் சாதாரணமான புதுக்கட்டிடம் ஒன்றுகட்டுவதே உத்தமம் என்று தோன்றுகின்றது" என்று எழுதி இருக்கின்றார்.

இன்னும் அநேக பெரியோர்களும் ஆராய்ச்சியாளர்களும் இதே அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். இச்சிலையில்குழந்தைமணத்தைத் தடுக்கவும் மக்கள் தெருவில் நடக்கவும், சாமிகளின் பேரால் கோயில்களில் நடக்கும் விபசாரித்தனத்தைத் தடுக்கவும், சிறு குழந்தைகளைப் படுக்கை அறையில் தள்ளுவதை ஒழிக்கவும் செய்யப்படும் முயற்சிகளை இம்மாதிரி ஒரு பொய் மதம் தடுப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் எந்த விதத்தில் மானமும் வீரமும் யோக்கியமும் உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்.

எனவே, ஆதிதிராவிட மக்கள் தங்களை எப்படி இந்துக்கள் என்கின்ற பதிப்பில் பதியக்கூடாது என்கின்றார்களோ அதுபோலவே நாமும் சொல்ல வேண்டியவர்களாயிருக்கின்றோம். ஏனெனில் இந்துக்கள் என்கின்ற பதிப்பில் நம்மை பதிந்து கொள்ள நாம் சம்மதிப்பதனால் நமக்கு ஆதிதிராவிடர்களை விட கீழான நிலையான "சூத்திரன்" என்கின்ற பதவி தான் கிடைக்கின்றது. அதை நீக்கிக் கொள்ள இதுவரை எந்தசீர்திருத்தக்காரரோசட்டசபை பிரதிநிதியோ, வேறு எந்த சமூகத்தலைவரோ இதுவரை முயற்சித்ததாகத் தெரியவில்லை. "ஆஸ்திகம் போச்சு", கடவுள் போச்சு", "மதம் போச்சு", "சமயம்போச்சு", "புராணம் போச்சு" "கலைபோச்சு" என்று கூப்பாடு போட்டு கூலிபெற நமது நாட்டில் ஆள்கள் மலிந்து கிடக்கின்றதேயல்லாமல் மானம் போச்சு, மனித உரிமைபோச்சு, மிருகத்திலும்கீழாச்சுஎன்றுசொல்லிமனிதத்தன்மைபெற யாரையும்காணோம். எனவே நாமும் ஆதிதிராவிட சகோதரர்கள் போலவே நம்மையும் இந்து என்னும் தலையில் இருந்து பிரித்து விடு என்று கேட்கும் நாள் சீக்கிரத்தில் வரும் என்றே கருதுகின்றோம்.

# இந்தியாவின் உண்மை நண்பர் யார்?

(அய்யர்முத்து)

"உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" என்பது நம் நாட்டுப் பழமொழி. ஒருவனிடமுள்ள கூடாவொழுக்கங்களை எடுத்துச்சொல்லித் திருத்த முயலுங்கால் வந்துவிடும் அவனுக்குக் கோபம்! ஆனால் அவனிடம் திருந்தி நிற்கும் நல்லொழுக்கங்களை மாத்திரம் ஒன்றைக் குப் பத்தாகப் பெருக்கி முகஸ்துதி செய்தால் வந்துவிடும் அவனுக்கு ஆனந்தம்! குற்றத்தைச் சுட்டிக்காட்டித் திருத்த முயல்பவன் மீது எரிந்து வீழ்ந்து "நீ எனது நண்பனல்ல, ஒழிப்போர்வென்" விரட்டுவதுமானி... இயற்கையாயும், குற்றங்களைக் கண்ட விடத்து அதை எடுத்துக் காட்டாமலும் அக்குற்றங்கள் ஒருவினை மேலெழுந்து பிரகாசிக்க வொட்டாமல் எவ்வளவு தடைகல்லாய் நிற்கின்றது என்பதை உணர்ந்தும் உணர்த்தாமலும், பேஷ் பேஷ் என்று தட்டிக்கொடுக்கும் மூட சிகாமணிகளே நண்பரென மதிக்கப்படுதல் காலத்தின் கோலமாயும் ஆயிற்று.

* * *

நமது நாடு விடுதலை யடைந்து பிற நாட்டினரைப் போல ஓங்கி வளரத் தடைகல்லாய் நிற்கும் சாதிமத வேறுபாடுகளைக் களைய முன்வரும் பெரியார் பலர் 'தேசத்துரோகி" யெனப் பெயர் சூட்டப்படுகிறார்கள். நமது நாட்டைக்கண்டு சென்ற பல உலக சஞ்சாரிகள் இந்நாட்டின் மேன்மைக்குப் பீடையாய் பற்றிக் கிடக்கும் பல தீய பழக்க வழக்கங்களை எடுத்துக்காட்டினதால் பலவாறு தூற்றப்பட்டனர். ஆனால். இந்திய நாடே! பொன்னாடே! ரிஷிகள் பிறந்தநாடே! கண்ணன் பிறந்த நாடே! ராமன் பிறந்த நாடே! தேனொழுகும் நாடே! பாலொழுகும் நாடே! என்று பலவாறு பாடித்திரிபவர்கள் இந்நாட்டின் உண்மை நண்பர்களென மதிக்கப்பட்டு, அவர்கள் போற்றிப் பாராட்டப்படுகின்றனர். இத்தகைய தேவலப் புத்தி என்றைய தினம் நம்மை விட்டகலுகிறதோ அன்றைய தினமே நமது நன்னாளாகும். நமது குற்றங்களைப் பிறர்கண்டு கடியும்போது, நாம் அவற்றை ஆண்மையோடு ஒப்புக் கொண்டு தைரியத்தோடு போராடி அவற்றை ஒழித்து நம்மை ஒழுங்கு படுத்த முயல வேண்டும். நமது குற்றங்களைய ஆசை கொண்டு சுட்டிக் காட்டுபவர்களையே நாம் நட்புடையோரென மதித்தல் வேண்டும். இதுபற்றியன்றோ மெய்யறிவோடு கூடிய மனிதப் புலவர் திருவள்ளுவரும்,

"நகுதற்பொருட்டன்று நட்டல்
மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற் பொருட்டு"

என்று இடித்துக் கூறியுள்ளார்.

*

திரு. சி. எப். ஆண்ட்ரூஸ் என்னும் பெரியாரை இந்திய ராஜீய உலகத்தில் அறியாதார் யாருமிலர். அவர் சாந்திநிகேத கவிஞரிடத்தும் சபர்மதி முனிவரிடத்தும் எவ்வளவு பற்றுடையாரென்றும்; நமது நாட்டு மக்களிடம் எவ்வளவு நட்புடையா ரென்றும் உலகமறியும். பச்சைக் குழந்தை போன்ற இளகிய நெஞ்சுடைய ஆண்ட்ரூஸ் தாழ்த்தப்பட்ட நம் மக்களைக் கண்டவுடன் உடல் கலிந்து, மனமுருகி, கண்ணீர்கலங்கி தாவியணைத்து மெய்யும் மனமும் ஒன்றாய்க் கலங்கி இரங்கும் காட்சியை இந்தியா கண்டுள்ளது தொழிலாளர் குறைகளைத் தமது குறையெனக் கொண்டு பல விடத்தும் ஓடியலைந்து போராடியதை நம் நாடறியும் வைக்கம் போராட்டத்தைக் காண மிக வேகத்துடன் ஓடியதைப் பாரறியும். வெளிநாடுகளில் நமது நாட்டவர் படும் துயரங்களைப் போக்க கப்பலேறிச் சென்று வெள்ளையதிகார வர்க்கத்தினரை வாதுக்கழைத்து வெற்றி விளைவித்ததைப் பலர் அறிவர். அவரைப் போற்றிப் பாராட்டு முகத்தான் 'தீனபந்து' என்ற பட்டமும் நாம் சூட்டியுள்ளோம்.

* * *

ஆனால் இவ்வளவு அரும் பெருங்குணத்தோடு கூடிய 'தீனபந்து' தமது அமெரிக்க நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்போது இந்திய நாட்டின் உண்மை நிலைகள் சிலவற்றை ஒப்புக் கொண்டனராம். உடனே வந்துவிட்டது அங்குள்ள நம்மவர்க்குச் சீற்றம்! தேசிய காங்கிரஸ் கிளையின் தலைவராகிய திரு. சஙீந்திரநாத் கோஸ் என்பவர் திரு. ஆண்டுரூஸ் அவர்களுக்குப் பல கேள்விகள் விடுத்து, "நீர் இந்தியாவின் உண்மை நண்பரா?" என்று பத்திரிகை மூலம் கடாவி விட்டார்.

* * *

மிஸ். மேயோ உண்மையாகவே இரக்கமுள்ளவர் என்று தீனபந்து சொல்லி விட்டாராம். இந்தியாவின் சாக்கடை நாற்றத்தையும், குப்பை கூளங்களையும், மத ஆபாசங்களையும், கோயில் ஆபாசங்களையும், விதவைகள் வேதனைகளையும், மக்கள் கல்வி யின்மையையும், பெண்கள் சாசுவத அடிமைத்தனத்தையும், மூடப்பழக்க வழக்கங்களை

யும், மருத்துவப் பயிற்சிக் குறைவையும், சுகாதாரக் கேடுகளையும், தொத்து வியாதிகளையும், சிசுமரணங்களையும், தலைவர்கள் என்போரின் வீரச் செயலுக்குதவாத வாய் வேதாந்தத்தையும், பார்ப்பனர்கள் சுயநலப்போலித்தனத்தையும், பஞ்சமர்களின் பார்க்க வொண்ணு படுதுயரங்களையும், பசுவின் உயிரைக் காத்தற்பொருட்டு மனிதர் உயிரைப் பறித்திடும் இந்து-முஸ்லிம் பிணக்குகளைப்பற்றியும், தொழில் ஊக்கமின்மைபற்றியும், படித்தவர் பாமரரை ஏய்த்திடும் திறத்தைப் பற்றியும், மற்றும் பல இந்நாட்டவரின் ஒற்றுமைக்கும் விடுதலைக்கும் தடை கல்லாய் நிற்பனவற்றை எடுத்தெழுதி புத்தக வடிவில் வெளியிட்டு விட்டதால் மிஸ்.மேயோ இந்தியாவின் பகைவராம்! அவரை இந்தியாவின்பால் அன்புடையாரென்று ஆண்டூரூஸ் கூறியது சந்தேகத்துக்கிடமானதாம்! என்னே விந்தை!

* *

கேவலம் மிருகசாதிகள் நடமாடும்படியான ராஜ பாட்டையிலே மானிட சாதியின் ஒரு பகுதியினர் நடமாட வொட்டாமல், அவர்கள் அவ்வுரிமை நாடியதன் பொருட்டு அவர்களைச் சிறையி லடைத்தும் அடித்தும், உதைத்தும், கத்தியால் குத்தியும், கண்ணில் சுண்ணும்பைப் பூசியும் ஒன்றரை வருடகாலம் பேயைப் போல் போராடிய வைக்கத்து வைதீகப் பார்ப்பனரின் மனப்பான்மையோடு கூடிய இரட்டைப் பிறப்பாளர்பலர் இந்தியாவில் இருக்கின்றனர் என்றும், இவர்கள் இந்திய நாட்டவரின் ஒற்றுமைக்கும் தேசீய உணர்ச்சிக்கும், உரிமைப் போராட்டத்திற்கும் தடை கல்லாய் நின்றுவரும் உண்மையை தீனபந்து ஒப்புக் கொண்டாராம். இதனால் இவர் இல்லாததை உண்டெனச் சொன்ன பொய்யராம்! என்னே! என்னே!!

* * *

மூன்றுவதாக, இந்தியத் தலைவர்கள் வெறும் வாயால் வாதிப்பவர்கள் என்றும், அவர்கள் தங்கள் வாதங்களைச் செயலில் நடத்திக்காட்ட சக்தியற்றவர்களென்றும் சொல்லி விட்டாராம். இது மிகவும் படுமோசமான குற்றம். இவ்வாதம் ஆங்கில வாட்சிக்கு ஆசி கூறுவது போன்றதாம! ஆண்டூரூஸ் கூறிய இம்மொழிகளைப்பொய்ப்படுத்த நாளையதினமே நமது தேசியத்தலைவர்கள் வெளிவருமாறு கூவியழைக்கின்றேன். சாதிகள் கூடாது, பேதங்கள் கூடாது, நாமெல்லோரும் சகோதரர்கள், ஒரு தாயின் மக்கள், இந்திய நாட்டினர் ஒற்றுமையுடன் கூடிப் போராடுவோம் என்றவரும், வைக்கத்து ஆசிரமத்தில் நுழைந்தவுடன் “ஹா! ஹா!! இங்கு தான் எனக்கு சுதந்தரக் காற்று வீசுகிறது. பறையனும் பார்ப்பனனும் ஒன்றாக உண்பதையும், உறங்குவதையும் பேதமின்றி இங்குதான் நான் காண்கின்றேன்” என்று “உளம் பூரித்து”ப் பேசிய மயிலைச் சீமான் நாளையதினமே தமதுஇல்லத்திலெனது தாழ்த்தப்பட்டசகோதரர்களைக் கூட்டிச்சென்று கட்டிப் புரளட்டும். அவர்களுடன் கொள்ளல் கொடுத்தலாதியவற்றைத் தாமதமின்றிச் செய்யட்டும். அடுத்த தேர்தலின் போது சேரியிலுள்ளவர்களைப்பெருமிதமாக அபேட்சகராகநிறுத்தட்டும். பள்ளர்பறையராகிய மந்திரிகளையுண்டாக்கட்டும். சமஸ்கிருதபாடசாலையில் சக்கிலியச் சோதரரைச் சேர்க்கட்டும். அடுத்த திருப்பதி மகந்துவைப் பறைச்சேரியினின்று கண்டுபிடித்துயர்த்திப் பார்க்கட்டும். டிசம்பர் 25ந்தேதியில் கூடப்போகும் காங்கிரசுக்கு ஜெயவேலுவைத் தலைவராய் அமர்த்தட்டும். தமது பூணூலைக் கழற்றி கைவிளக்குத் திரியாய் உபயோகப்படுத்தட்டும். அன்றே அவர் தமது தத்துவார்த்த வாதப் பிரசங்கப் பொழிவுகளைச் செயலில் நடத்திக்காட்டிய தீரராவார். அன்றே ஆண்டூரூஸ் தாம்பொய்யரென்று ஒப்புக்கொண்டுஇந்தியநாட்டினின்று விடைபெற்றுச் செல்லுவார்.

* * *

நான்காவதாக காந்தியின் சாத்வீக எதிர்ப்பை பாமர ஜனங்கள் கைக்கொண்டால் அது பலாத்காரமாக மாறிவிடுமென்றும், இந்திய நாட்டு மக்கள் கட்டுப்பாடான ஒழுங்கு அற்றவர்கள் என்றும், பண்டித நேருவின் சுயராஜ்யத் திட்டத்தில் இந்திய மன்னர்களின் உடன்படிக்கைகளுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்கப்படவில்லையாதலால் அதை உதைத்தெறியச் சில இந்திய மன்னர்கள் முனைந்து நிற்கின்றனரென்றும், இந்தியாவில் போல்சுவிக் பிரசாரம் சிறிதளவு நடைபெற்றுள தென்றும் சொல்லி விட்டாராம். இவைகள் பொய்யா மெய்யாவென்று நான் இப்போது வாதிக்கத் தயாராக இல்லை. இந்நாட்டு நிகழ்ச்சிகளும், சரித்திரமும் இவற்றிற்கு சான்று கூறட்டும். திரு ஆண்டூரூஸ் அவர்கள் இவைகளையெல்லாம் கூறியதால் அவர் ஆங்கில ஏகாதிபத்தியத்தின்நண்பரே அன்றி இந்தியாவின் நண்பர் அல்லவாம்! தீனபந்து என்ற பட்டமும், கௌரவமும் எதற்கென்றும் கேட்டுள்ளார். உள்ளதைக் கேட்டதும் உடம்பெரிச்சலோடு மறைத்து, உள்ளதைக் கூறியவரை இழித்துக் கூறிய திரு சலிந்திரநாத் கோஸ் என்ற காங்கிரஸ் தலைவர் இந்தியாவின் உண்மை நண்பரா? அல்லது நமது உண்மையான நிலைமையை எடுத்துக்காட்டி நமது கண்களை விழிக்கச் செய்யும் திரு. ஆண்டிரூஸ் இந்நாட்டின் உண்மை நண்பரா? இந்நாட்டின் உண்மை நிலையுணர்ந்தவர்கள், இந்தியாவின் உண்மை நண்பர் யார் என்று யோசித்து முடிவு கட்டுங்கள்.

வியாபாரத்திற்கழகு —
— விளம்பரம் செய்தல்

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

னதாக நீர் அறிய வேண்டும். ஆனால் அந்தக் கட்டுப்பாடு நமக்கு இல்லை என்றும் உணரவேண்டும். “சூத்திரர்” களுக்குள் விதவா விவாகம் ஏற்பட்டால் அவாள் சற்று முன்னேற்றம் அடைந்து விடுவாள். ஆகையால் அவாளுக்காக விதவா விவாகம் கூடாது என்கிறேன். ஆனால் பிராமணர்கள் நான் சொல்லுவதன் கருத்தை நன்றாய் அறிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தான் இந்து பத்திரிகையில் தினந்தோறும் கலியாணம் செய்துகொள்ள ஐயங்கார் விதவை வேண்டும், ஸ்மார்த்தப் பெண் விதவை வேண்டும், மாத்துவப்பெண் விதவை வேண்டும், வடகலை ஐயங்கார் பெண் வேண்டும் என்று விளம்பரம் வருகிறது. இது எதைத் தெரிவிக்கிறது என்றால் நமது பிராமண வகுப்பார் விதவா விவாகம் அதிகமாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறது. ஆனால் நாங்கள் விதவா விவாகம் சாஸ்திர சம்மதம் அன்று என்று கூக்குரலிடுவதனால் உண்மைக் கருத்தறியாத பிராமணரல்லாதார் விதவா விவாகம் செய்யத் தயங்குகிறார்கள் ஆகையால்தான் பார்ப்பனரல்லாதார் விதவைப் பெண்வேண்டும் என்றும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறதில்லை.

ஐயர்:— ஓ அப்படியா! ஆமாம்! பார்ப்பனரல்லாதார் முன்னுக்கு வந்துவிட்டால் நம் கதி அதோகதி தான்!

சாஸ்திரி:— இதை உத்தேசித்துத் தான் கலப்பு விவாகம் கூடாது என்கின்றோம். பிராமணரல்லாதாருக்குள் எத்தனையோ பிரிவுகளும் சாதிச் சண்டைகளும் இருக்கின்றன அவர்களுக்குள் கலப்பு விவாகம் ஏற்பட்டு விட்டால் ஒற்றுமையாய்விடுவார்கள். அவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு விட்டதோ நம்பாடுபெரும்பாடுதான். ஆனால் நம்மவாள் புத்திசாலியாயிற்றே. இவர்கள் உண்மையை உணர்ந்துகொண்டு ஐயங்கார் பெண்ணை ஐயரும், ஐயர் பெண்ணை ஸ்மார்த்தரும், வடகலை ஐயங்கார் பெண்ணைத் தென்கலை ஐயங்காரும் கலியாணம் செய்துகொண்டு வருகிறார்கள். அதுமட்டுமா? இப்போது நம்மவாள் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து வருகிறார்கள். உதாரணமாக சென்னையில் ஐயர் வீட்டில் ஐயங்கார் குடியிருக்கிறார் இது முற்காலத்தில் நடந்ததில்லை. இது ஒரு முன்னேற்றமல்லவா?

ஐயர்:— ஆமாம். ஆனால், பெண்கள் வயதறிவதற்கு முன் கலியாணம் செய்யவேண்டும் என்று சொகிறீர்களே! அந்த தந்திரம் பிராமணரல்லாதாரிடம் பலிக்கவில்லை. இந்த விஷயத்தில் நீங்கள் தோற்றுப்போய் விட்டீர்கள்!

சாஸ்திரி:— ஆம். அதற்கென்ன செய்வது. அவர்கள் ஆதிகாலத்திலிருந்தே அம்மாதிரி பழகிவிட்டார்கள். இந்த “சூத்திரர்”கள் எல்லோரும் பழைய வழக்கங்களில் குருட்டு நம்பிக்கையோடு பின்பற்றுகிறவர்கள். அதனால்தான், விதவா விவாகத்தையும், கலப்பு விவாகத்தையும் செய்துகொள்ள அவர்கள் இன்னும் தயங்குகிறார்கள்.

ஐயர்:— ஆனால் இப்போது பிராமணரல்லாதாரில் சுயமரியாதை சங்கத்தார் கிளம்பி யிருக்கிறார்களே! அவர்கள் கலப்பு விவாகம், விதவா விவாகம் முதலிய சீர்திருத்தங்கள் வேண்டுமென்கிறார்களே!

சாஸ்திரி:— சுயமரியாதைச் சங்கத்தார் செய்யும் வேலை தேச முன்னேற்ற வேலை தான். ஆனால் பிராமணரல்லாதார் விதவா விவாகம், கலப்பு விவாகம் முதலிய சீர்திருத்தங்களைச் செய்ய முற்பட்டு விட்டால் பிராமணர்களுக்குப் பிழைப்பே போய்விடும். ஆகையால் தான் நாங்கள் அதைத்தடுப்பதற்காகவேலை செய்கிறோம். பிராமணரல்லாதாருக்குச் சாஸ்திரம், வேதம், சமயம், கடவுள் என்கிற சொல்லைச் சொன்னாலே மூடத்தனமான ஒருவித நம்பிக்கை ஏற்பட்டுவிடும். ஆகையால் சுயமரியாதைச் சங்கத்தாரை நாஸ்திகர் என்று சொல்லி விடுவோமானால் பிராமணரல்லாதார் அதை உண்மை என்று நினைத்து அவர்கள் பேச்சைக் கேட்கமாட்டார்கள். இந்தப் பிரசாரம் செய்வதற்காகத்தான் ஆஸ்திக சங்கம் என்று ஒரு சங்கத்தை நிறுவியிருக்கிறோம்.

ஐயர்:— அப்படியா? நீங்கள் பிராமண சமூகத்தைக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவர அதிகப் பிரயாசை எடுத்துக் கொள்ளுகிறீர்கள்.

சாஸ்திரி:— பிராமணரல்லாதாருக்குள் ஒற்றுமையும், கலப்பு விவாகம், விதவா விவாகம் முதலியன ஏற்படுமானால் ஜாதிக் கட்டுப்பாடு ஒழிந்துவிடும். அவர்களுக்குள் சாதிக்கட்டுப்பாடு ஒழியுமானால் பிராமணர் ஹோட்டல்கள் அன்றைக்கே தொலைந்துவிடும். பிராமணரல்லாதாருக்குள் சாதி வித்தியாசம் இருப்பதனால்தான் இப்போது பிராமணர் ஓட்டல்களில் ஏராளமான வருவாய் கிடைக்கிறது. ஆகையால் நம்மவர் பிழைப்புக்காக “சூத்திரர்”களுக்குள் சாதி வித்தியாசம் அவசியம் இருந்து தீரவேண்டும். இவ்வித்தியாசத்தை நிலைக்கச் செய்ய நாம் உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருக்கவேண்டும். போய்வருகிறேன் ஐயர்வாள்.

மூன்று மாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்றுக்
கொள்ளலாம்.
(1916ஆம் ஸ்தாபிக்கப்பட்டது)
மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விவரத்திற்கு நேரில் எழுதவும்.
மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதராஸ்.

(6-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யாகிறது என்று கண்டு பிடிக்க முடியாமல் "கங்கைவார் சடைக்காரன் தான்" என்று சொன்னதால், தாங்கள் அந்த பூகோளத்தை நம்புகிறீர்களா? அல்லது ஆகாய விமானத்தின் மீது கொண்டு போய் கங்கை உற்பத்தியாகிற இடத்தைக் காட்டுகின்ற பூகோளத்தை நம்புகிறீர்களா? உலகம் என்பது இந்தியா மாத்திரமன்றி வேறுள்ள பாகங்களும் சேர்ந்தது என்று தாங்கள் உண்மையாய் அறிந்திருந்தீர்களானால் எங்கள் போன்ற "அறிவிலிகளுக்கு" ஆதாரமான மேற்கண்ட குறளை மேற்கோளாகக் காட்டியிருக்க மாட்டீர்கள். பிறகு, நிகண்டின் வாக்கியமான, "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்பதற்கு உயர்ந்தோர்என்றால் உயரத்திலல்ல, பருமனில்அல்ல, விபூதிப்பூச்சிலல்ல, உத்திராக்க மிகுதியில் அல்ல, திருமண் அகலத்தில் அல்ல, குடுமியின் எண்ணிக்கையில் அல்ல, செந்தமிழ் நடையில் அல்ல, இலக்கணத்தமிழில் அல்ல, தேவார பதிகத்தை ஒப்பிப்பதில் அல்ல, யாகங்கள் செய்வதில் அல்ல, பூணூலின்செழுப்பில் அல்லவென்பதெல்லாம் சட்டப்பள்ளியில் தேச சரித்திரங்கள் வரலாறு சொல்லிக் கொடுக்கும்போது கற்பிக்கப்பட்டிருப்பீர்களே! அப்படியிருக்க, 'உயர்ந்தோர் மாட்டு" என்றுதைரியமாய்எடுத்துக் காட்டுவதற்குத் தங்களைத் தூண்டியது எது என்பதுதான் விளங்கவில்லை.

பிறகு தாங்கள் "சுயமரியாதையை" இருகூறுபடுத்தி, "தன் சுயமரியாதை, தன்னாட்டுச் சுயமரியாதை எனவும், இவ்விரண்டில், தன்னாட்டுச் சுயமரியாதையே முக்கியமெனவும், அது கிடைத்தால் முன்னையது தானே கிடைக்குமெனவும் சுயமரியாதைக்காரர்கள் மிஸ் மேயோவிடம் கைக்கூலி பெற்றிருக்க வேண்டும், அல்லது, அவர்கள் மந்த புத்தியுடையவர்களாய் இருக்க வேண்டும்" எனவும் வரைந்திருக்கிறீர்கள் ஆசிரியரவர்களே! தன்னாட்டுச் சுயமரியாதையைவிட தன் சுயமரியாதையே முக்கியமென்பது எங்களுடைய வாதம். தன் மதிப்புப் பெற்றால்தான் தன்னாட்டு மதிப்பும் பெறலாம் என்பதே எங்கள்கருத்து. தன்னாட்டுச் சுயமரியாதை பெற்று விளங்கின காலத்தில் நமது நாடு இருந்த நிலைமை எங்களுக்குத் தெரியாமல்இல்லை. அப்போதுதான் பார்ப்பனச் சத்திரங்களும் பகற்கொள்ளை மடங்களும் கட்டப்பட்டனவென்பதையும்அறிவோம். தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில்தான் தீண்டாமை, பார்க்காமை, நெருங்காமை ஏற்பட்டதே ஒழிய ஆங்கிலேயர் வந்த பின்புஅல்ல. அந்தக்காலத்தில்தான் "சூத்திரர்" என்ற பட்டத்தை பகிரங்கமாக உபயோகித்தார்களே ஒழிய இப்போது உபயோகித்தால் அவர்களது தலைகளின் கதி என்னவாகும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான் மடாதிபதிகள் கோடிக்கணக்கான திரவியங்களைப் பெண் போகத்தில் செலவழித்தார்கள். தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான் பார்ப்பனக் குழந்தை இறந்ததற்காக தவம் செய்த பார்ப்பனரல்லாதாருடைய தலையை வெட்டினார்கள். தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான் "சற்சூத்திரர்" (நல்ல முட்டாள், நல்ல வேசி மகன்) என்று மானமின்றி சில "சைவர்கள்"தங்களை யழைத்துக் கொண்டார்கள் தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான் "கடவுளைப் பற்றி கவலைவேண்டாம்" என்று சொன்னதற்காக 8000 சமணர்களைக்கழுவிலேற்றிய கொடும் பாதகர்கள் வசித்தார்கள். தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான கோவிலுக்குள் நுழைந்த ஆதிதிராவிடரை தீயில் தள்ளிக்கொன்றார்கள் தன்னாட்டுச் சுயமரியாதை காலத்தில் தான் இரண்டு வர தடியர்கள் கூடிக் கொண்டு தான் காதலிப்பதாகச் சொன்ன ஒரு பெண்ணை அநாதரவான நிலையில் மானபங்கப்படுத்தினார்கள். தன்னாட்டுச்சுயமரியாதை காலத்தில் தான் ஒவ்வொரு அரசரும் 60,000 மனைவிகளை வைத்துக்கொண்டு ஏகபோக பயிர்ச்செலவுநடத்தினார்கள். ஆகவே, தன் சுயமரியாதை கிடைத்த பின்புதான் தன்னாட்டுச் சுயமரியாதையைப் பெற்றுக் காப்பாற்ற முடியும் என்பது விளங்குகிறதல்லவா? பிறகு, மிஸ் மேயோவிடம் கைக்கூலி பெற்று அவரது நூலைப் பரப்புகிறோம் என்று எழுதியிருக்கிறீர்கள் அதுபற்றி தங்கள் பேரில் குற்றம் சுமத்தப் பிரியமில்லை ஏனெனில், கைக்கூலிக்காகவே எதையும் செய்யலாம் என்ற கல்வி அந்த யோசனையைக் கொடுத்ததே தவிர தங்கள் தமிழ்க் கல்வி அவ்விதம் எழுதச் செய்திருக்காது என்பதை நன்கு உணர்வோம் பிறகு தாங்கள் சொல்லுகின்ற எங்களுடைய "மந்த புத்தி"க்கும் "மந்த உணர்ச்சிக்கும்" இனி தொடர்ச்சியாக வரும் கட்டுரைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இறுதியாக எங்களை "அறிவிலிகள்" என்றுகூறியிருக்கும் தங்களது "அறிவுமுதிர்ச்சிக்கு" தங்களைப்பாராட்டுவதோடு, பின்வரும் கட்டுரைகளிலும் இன்னும் சில உதாரணங்களைக் காட்டுவோம்.

கடைசியாக திருப்பாதிரிப்புலியூர் மகாநாட்டில்நிறைவேறிய தீர்மானங்களைவிசேடித்துஎழுதியிருக்கிறீர்கள். எப்படி "நந்தனுருக்கும் சைவத்தில் இடமிருப்பதி லிருந்தே தீண்டாமையை சைவர்கள் ஒப்புக்கொள்வதில்லை என்பது விளங்குகின்றது" என்று வாய் வீச்சு வீசி சைவம் பரப்பியிருக்கிறீர்களோ, அதுபோலவே திருப்பாதிரிப்புலியூர்த் தீர்மானங்களை ஏட்டில் எழுதி வைகையில் எதிர்த்துப் போகச் செய்து, அதற்கும் ஒரு புராணம் எழுதி வைத்துப் பூசை பண்ணுவதோடு தான் தங்களது "உண்மைச் சைவப் பிரசாரம்" முடியும் என்பதும் தெரியும். கடைசியாக, "உண்மைச்சுயமரியாதையை உண்மைச் சைவத்தோடு இணைத்து இன்புறுமாறு எல்லாம்வல்ல இறைவனை வழுத்தியிருக்கிறீர்கள் இங்கே தான் இன்னும் கொஞ்சம் அபிப்பிராயபேதமிருக்கிறது. தங்களது கேஸ்கள் ஜெயிப்பதற்கு தாங்கள் இரவு பகலாய்ப் படித்து, நடுநிசியிலெல்லாம் யோசனை செய்து, சிக்கலான விஷயங்களையெல்லாம் தெளிவு படுத்திக் கொண்டு, கோர்ட்டில் சண்டப் பிரசண்டமாய் எதிரி வக்கீலோடு தர்க்கம் செய்து, தங்களுக்கு வேண்டிய ஆதாரங்களை ஜட்ஜுக்குக் காட்டி நியாயம் கேட்கிறீர்களே யொழிய, கேஸ் கட்டுகளை வீட்டில் வைத்துப் படைத்து, கோர்ட்டில் ஜட்ஜ் எதிரில் வைத்துவிட்டு, "எல்லாம் வல்ல இறைவன் நியாயம் அருள வேண்டும்" என்று சொல்வதில்லையே! இங்கேதான் தாங்கள் முரண்படுவதோடு பிறமக்களையும் ஏமாற்றத்தில் ஆழ்த்துகிறீர்கள் என்பதைக் குறிப்பிடுகின்றேன். தங்களது பிற கூற்றுக்களைப் பின்னர் ஆராய்வோம்.


மோட்டார் சொந்தக்காரர்களுக்கும் டிரைவர்களுக்கும்
இன்றியமையாத

## "மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும்"

அதன்

## "அநுபோகப்பயிற்சி முறையும்"

[படங்களுடன்]

விலை ரூபாய் 1—8—0. (தபால் சார்ஜ் வேறு)

ஸிலோன், பினாங்கு, மலாக்கா முதலிய வெளி நாட்டு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை. மற்ற விவரங்களுக்கு நேரில்.

தென் இந்தியா மோட்டார் இன்ஜினீரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், மதராஸ்.



## பித்தன்

மக்கள் சமரசம், கிராமச் சீர்திருத்தம்,
சமூக முன்னேற்றம் முதலியவைகளுக்காகப்
பாடுபட்டுவரும்

### ஒரு மாதப் பத்திரிகை

மூடப்பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் ஒழித்து உண்மை மதத்தையும், தேச பக்தியையும், ஆராய்ச்சி அறிவையும், சகோதரத்துவத்தையும் நிறுவ முனைந்து நிற்பது.

பித்தனில் வெளிவரும் வேறு பல விஷயங்கள்: விஞ்ஞானம், கைத்தொழில், விவசாயம், சமூகச் சீர்திருத்தத்திற்கான சிறு கதைகள் முதலியன.

இளந்தமிழர்களால் தமிழில் நடத்தப்படும் முதற்பத்திரிகை இதுவே.

வருடசந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடுகளுக்கு ரூ. $1\frac{1}{4}$

மாதிரிப்பிரதிவேண்டுவோர் இரண்டு அணா ஸ்டாம்புஅனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர்,

வனமலர்ச் சங்கத்தார்,

49, பஜார் ரோட், மைலாப்பூர், சென்னை.

# தூத்துக் குடியில் சுயமரியாதை முழக்கம்

## திரு. கண்ணப்பரின் சொற்பெருக்கு

8-7-29-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை திரு. ஜே. எஸ். கண்ணப்பரவர்களும் திருவாளர்கள் பட்டுக்கோட்டை அழகர்சாமி, பொன்னம்பலனூர் முதலியவர்களும் தூத்துக்குடி வந்து சேர்ந்தனர், மறுநாள் மாலை 6-30 மணிக்கு வட்டக்கிணற்று மைதானத்தில் ஒரு சுயமரியாதைக் கூட்டம் கூட்டப்பட்டது. 5-மணிக்கே ஜனங்கள் கும்பல் கும்பலாகக்கூடி விட்டனர். சுமார் 6000 மக்களுக்கு மேல் கூடியிருந்தனர். சுயமரியாதைச் சங்க காரியதரிசி திரு. வைகுண்டம் அவர்கள் பிரேரேபிக்க சந்திரிகிரி அழகர்சாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். தலைவர் முன்னுரையாகச் சில வார்த்தைகள் பேசியபின் திரு. பொன்னம்பலனாரைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். இவர் பார்ப்பனர்கள் கடவுள் பேராலும் சாஸ்திரங்களின் பேராலும் செய்துவரும் சூழ்ச்சிகளையும் புரட்டுகளையும் விளக்கிக்காட்டி ஜாதி பேதம் மூடப்பழக்க வழக்கம் முதலியவற்றை ஒழித்துச் சுயமரியாதை உணர்வு பெறவேண்டும் என்று பேசி முடித்தார் பிறகு திரு. கண்ணப்பர் அவர்கள் எழுந்து செய்த சொற்பெருக்கின் சாரமாவது:—

அன்பார்ந்த சகோதரர்களே! சுயமரியாதையைப்பற்றி உங்களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்லும்பொழுது உங்களில் சிலருக்கு வருத்தம் ஏற்படலாம். உண்மையைச் சொல்லும்பொழுது ஒரு சிலருடைய வருத்தத்தை கவனிக்க முடியாது. எங்களை அத்தகையவர்கள் நாஸ்திகர்களென்றும் பாதகர்களென்றும் சொல்லுகின்றனர் அதற்கெல்லாம் நாங்கள் அஞ்சப்போவதில்லை. சுயமரியாதை என்றால் ஒருவன் இவ்வுலகின் கண் சுதந்தரத்துடன் அடிமைத்தனமின்றி, மானத்துடன் வாழ்தலேயாகும். மற்றைய தேயங்கள் எவ்வளவு முன்னுக்கு வருகின்றன பாருங்கள்! மூடப்பழக்க வழக்கங்கள் அவர்களுடைய தொழிலில் ஈடுபடவில்லையாகையால் சுதந்தரத்துடன் வாழ்கின்றனர். ஒரு பசுவைக்கொண்டுவந்து எவ்வளவு தீனிபோட்டுக் கட்டி வைத்திருந்தோமானாலும், அது காட்டிலிருந்தது போல் சுதந்தரத்துடன் இருக்கிறதா? வருத்தமடைகின்றதல்லவா? ஒரு கிளியைக் கூட்டிலடைத்து அதற்குவேண்டிய பழம் பால் கொடுத்துவந்த போதிலும் வெளியில் உள்ள சுதந்தரம் அதற்கு உண்டா? எப்பொழுது கட்டவிழ்ப்பானோ? கூண்டைத்திறக்க மாட்டானோவென்று பார்த்துக் கவலை கொண்டிருக்கின்றதல்லவா? கேவலம் பசுவும், கிளியும் அப்படிச்சுதந்தர ஆசை கொண்டிருக்க நாம் மட்டும் சுதந்தரமற்று, மானமிழந்து, மரியாதையற்று, அடிமைத்தனத்தில் வாழ முடியுமா? என்று உங்களைக் கேட்கிறேன். பெரிய பெரிய கூட்டங்கள் போட்டு சர்க்காரைப் பயமுறுத்திவிடவேண்டுமென்று நினைத்தபேர்வழிகள் தான் நாங்கள். இப்பொழுது சுயமரியாதை சுதந்தரம் வேண்டுமென்று சொல்ல வந்திருக்கின்றோம். சுயராஜ்யம் வேண்டாமென்று சொல்லவில்லை. வேண்டும்தான். ஆனால், எந்தவழியில் வேண்டும்? மற்றைய ராஜ்யங்களைப்போல் சித்த சுவாதீனத்துடன் வேண்டும்.

### கல்வி

மற்றதேசங்களெல்லாம் முன்னுக்கு வர நம்முடைய தேசம் நாளுக்கு நாள் பிற்போக்கடைந்து வருகின்றது. இதற்குக் காரணம் நம்மிடம் படிப்பில்லாமலிருந்ததே. ஏன் படிப்பில்லாமற் போய்விட்டது? இங்குள்ளவர்கள் மூட்டாள்களாவென்று பார்த்தால் மதமே இதற்குக் காரணமென்று தெரியவருகிறது. நாம் கடைப்பிடிக்கும் மதம் நம்மைப்படிக்கவிடக் கூடாத மதமாயிருந்தது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் பிராமணன் தவிர மற்றவர்கள் படிக்க முடியாது. இது சுயநலப்பிரியர்களாகிய ஒரு சிறுபான்மையரான முகத்திலிருந்து வந்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களின் சூழ்ச்சி. நாம் படித்தவர்களாகிவிட்டோமானால், அவர்களுடைய சூழ்ச்சியைக்கண்டுகொள்வோமல்லவா? அதனால் அவர்கள் பிழைப்பு கெட்டுப்போகுமல்லவா? அதற்கொரு சூழ்ச்சி அவர்கள் செய்திருக்கிறார்கள். வேதத்தைப் படிக்கிறவர்களுடைய நாக்கை அறுக்க வேண்டுமென்றும், கேட்டவர்களின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்ற வேண்டுமென்றும், அதை உணர்ந்தவர்களின் நெஞ்சைப்பிளக்க வேண்டுமென்றும் செய்திருந்தனர். இப்படி மதமே நமது படிப்புக்கு எதிரிடையாக இருக்குமானால், யார்படிக்க முன்னுக்கு வரப்போகின்றனர்? மக்களுக்கு க்ஷேமத்தையுண்டாக்கவே மதமுண்டாகியது. ஆனால் இம்மதம் எவ்வளவு க்ஷேமத்தை மக்களுக்குச் செய்கிறதென்று நீங்களே இதனால் கண்டுணருங்கள். புத்தர் பிரான் தோன்றி நமது நிலைமையைக் கண்டார். நாம் படிப்பில் எவ்வளவு பிற்போக்கடைந்திருக்கின்றோமென்றுணர்ந்தார். அதற்காக நாலண்டா சர்வகலாசாலையொன்றைக் கட்டி அதில் சகலஜாதி மக்களும் படிக்கலாமென்றார். மதத்தைப்படிக்க ஆரம்பித்தனர். இதைக் கண்ட பிராமணர்கள் வயிற்றெரிச்சல் கொண்டார்கள். புத்தரைப்பசப்பி இரண்டு பிராமணச் சிறுவர்களையும் அக்கலாசாலையில் சேர்த்தனர். தீயை வைத்தார்கள். அது எரிந்துசாம்பலாகி விட்டது! மற்றைய தேசத்தாருடைய பெருமையைபெற்றது இச்சர்வகலாசாலை. ஆகையால் நாம் பார்ப்பனர் சூழ்ச்சியில் சிக்கி இம்மதம் சொல்லுகிறது போல் படியாமலிருக்காமல் நமது கண்களை நாமே திறந்து உலகமெப்படியிருக்கிறதென்று படித்துக் கண்டுணருவோமாக.

காலட்சேபங்கள் ஆயிரக்கணக்காக ரூபாய் செலவு செய்து நாம் நடத்துகிறோம். பாலகாண்டத்தைப் பாடிகாசைப் பிடுங்குவார்கள். இவர்கள் இராமர் கலியாணத்தைச் சொல்லி காசு பிடுங்குவார் நம்மிடமிருந்து. ஆனால் உத்தர காண்டத்திற்கு வரமாட்டார்கள். அதில் அவர்களுக்குச் சம்பாதிக்கியமுமில்லை. கேட்கிற நமக்கும் கோபத்தை உண்டாக்கும். ஒரு பிராம்மணன் தன் குழந்தை ஒன்று ராமனுடைய காலத்தில் இறந்துவிட்டதாம். உடனே இப்பிராம்மணர்கள் ஓடிவந்து இவனிடம் உன்னுடைய ராஜ்யம் கெட்டுவிட்டது. பிராமணக் குழந்தை உன் தகப்பன் காலத்தில் இறந்தது கிடையாது. உன்னுடையகாலத்தில் இறந்துவிட்டது. இதற்குக் காரணம் யாதென்று கண்டுபிடி என்றனர். உடனே ஒரு "சூத்திரன்" காட்டில் யாகம் செய்கிறான். அவனைக் கொன்றுவிட்டால் சரியாகுமென்றனராம். இவர்போய் யாகம்செய்யும் கடவுளைத் தியானிக்கும் "சூத்திரனை"க் கொன்றவுடன் இவ்விறந்த குழந்தை உயிர் பெற்றதாம். தாழ்ந்த ஜாதியான் தவம் செய்யக்கூடாதென்பதை இது கற்பிக்கிறதல்லவா? உள்ள இதைச் சொல்ல வந்தால் நாம் நாஸ்திகர்களாம். பாதகர்களாம். யார்பாதகர்கள்? மக்களை நாளுக்கு நாள் மூடப்பழக்க வழக்கங்களால் கொன்றுவரும் அவர்களா? அல்லது நாங்களாவென்று கேட்கிறேன். நமக்குப் படிப்பு இருக்குமானால் இதையெல்லாம் கண்டுணர்ந்து கொள்ளுவோமாகையால் நம்மைப் படிக்கக் கூடாதென்று வைத்திருந்தனர் இக்கொழுத்த பிராமணர்கள்.


### மூடப்பழக்க வழக்கம்

நாம் மாமிசம் உண்டால் கேவலம், கட்குடித்தால் குடியர்களென்று அவர்கள் சொல்லுகின்றனர். அவர்கள் மட்டும் மதத்தின் பெயரால் மாமிசம் சாப்பிடலாம்; கள்குடிக்கலாம். அவர்கள் மாமிசம் சாப்பிட ஆசித்துவிட்டால் யாகங்கள் பல செய்ய ஆரம்பித்து விடுகின்றனர். ஆட்டைக் கொன்று நாம் தின்பதற்கும் அவர்கள் தின்பதற்கும் பல வித்தியாசங்களுண்டு. யாகங்களின் பெயரால் பீஜத்தைக் கசக்கி ஆட்டைக் கொன்று தின்கின்றனர். கோமேதயாகத்தில் பசுவைக் கொன்று சாப்பிடுகின்றனர். அவர்கள் செய்தால் மதம். மகமதியர் பசுவைக் கொன்றால் கொடுமை, பாவம். அஸ்வமேத யாகத்தால் இவர்கள் குதிரையைக் கொன்று சாப்பிடுகின்றனர். இதுவும் போதாதென்று உலகத்தில் நல்ல ருசிகரமான கறியைக் கொண்டுள்ள மனிதர்களையும் இவர்கள் நரமேத யாகத்தின் பெயரால் கொன்று தின்கின்றனர். இது தான் போகுதென்றால் அவர்கள் சுகமனுபவிக்க ஒரு யாகம் செய்கின்றனர். இதற்கு பௌண்டரீக யாகமென்று சொல்லப்படுகிறது. இது மழை பெய்வதற்காக இந்திரனுக்குச் செய்யப்படும் யாகமாம். இதன் கொடுமை மிகவும் கேவலம். ஒரு கொழுத்த பிராமண பிரமச்சாரி ஓர் விதவை கன்னிகையை பலர் முன்னிலையில் சேர்வதே இந்த யாகம். நளவெண்பாவில் சனி வருகின்ற காலத்து இவர்கள் (பிராமணர்கள்) மதுவருந்திக் கொண்டிருந்தார்களாம். இதைக் கண்டதும் சனி வருத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச்சூழ்ச்சிகளை எல்லாம் தொலைத்து முதன் முதல் நாம் படிக்கவேண்டும். பெண் கல்வியும் விருத்திக்குக் கொண்டு வரவேண்டும். நம்முடைய நிலைமையைச் சொல்லி நாம் படிக்கவேண்டும், முன்னுக்கு வரவேண்டு மென்று சொன்னால் நாங்கள் பாதகர்களாம்.

"சூத்திரன்" என்பது ராவ்பஹதூர் பட்டமல்ல. பிளாக்டவுன் என்னும் பெயர் கொண்ட பாகம் எப்படி ஜார்ஜ் டவுன் என்று பெயர் கொண்டதோ அதேபோல் நாம் நமக்கு இருக்கும் "சூத்திரன்" என்னும் பெயரை மாற்றப் பிரயாசைப் படவேண்டும். ஒரு முறை விண்ணப்பித்துக் கொண்டதால் ஒருடவுனின் பெயர் மாற்றப்பட்டது அந்நிய தேசத்தாரால். ஆனால், இவர்கள் நமக்கு இருக்கும் பெயரை மாற்ற மாட்டார்கள். இதற்குக் காரணம் நாம்தான். உன்னை நீயே இழக்கிக் கொள்ளுகிறாய். உன்னைத் தாழ்ந்தவனென்று நினைத்துக் கொண்டு அவனைச்சாமி சாமி என்று ஏன் அழைக்கிறாய். இது நம்மிடமுள்ள ஒரு பெரும் குறை. "அடே சூத்திரா" வென்றால் நீ ஏன் அவனைத் திரும்பிப் பார்க்கிறாய். அவன் உன்னைக் கீழாக மதிக்கும்பொழுது நீமட்டும் அவனை ஏன் உயர்வாகக் கருதுகிறாய்? "சூத்திர"னுக்கு ஒரு சட்டம், பிராமணனுக்கு வேறு சட்டம் ஹிந்துலாவிலிருக்கிறது. ஒரு பார்ப்பான் நம் பெண்களில் ஒருத்தியை வைத்திருந்து குழந்தை பிறந்து விட்டாலும் அவனைத் துரத்தி விட்டால் அவளுக்கோ அக்குழந்தைக்கோ அவனுடைய சொத்தில் மேல் நடவடிக்கைகள் எடுக்க உரிமை கிடையாது. ஆனால் நம்முடைய ஒருவன் ஒரு பாப்பாத்தியை வைத்திருந்து குழந்தை பிறந்தால் அவர்களுக்கு இவனுடைய சொத்தின் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள சட்ட

மூண்டு. இச்சட்டமிருப்பதால் எத்தனையோ ஜமீன்கள் மூலனுக்கு வர பயப்படுகின்றனர். மூலனுக்கு வந்தால் ஒரு பார்ப்பனரியை வைத்திருந்தான் இவன் என்று பலபொய் சாட்சிகளைக் கொண்டு ரூபித்து பணம் பறித்து அவனைத் தலை எடுக்க விடாமல் செய்கின்றனர் இப் பார்ப்பனர்கள். எத்தனையோ நாட்டுக்கோட்டை செட்டியார் கெட்டு விட்டனர். திருவாங்கூர் சமஸ்தானத்தில் இவர்களுடைய சாஸ்திரம் தலைவிரித்தாடுகிறது. இக்காலத்திலும் அவன் எவ்வளவு கொலை செய்தாலும் தூக்குத் தண்டனை கிடையாது. காரணம் மனுதர்ம சாஸ்திரம். இதைச் சொல்லவந்தால் நாங்கள் நாத்திகர்கள் பாதகர்கள் என்று சொல்லுகின்றனர். இவர்களுடைய வால் பிடித்துத் திரியும் சகாக்களும், நாய், நரி, பன்றி முதலியவைகள் இவர்களிருக்கும் இடத்தில் செல்லலாம். ஆனால், ஆறறிவு படைத்த மனிதன் செல்லக்கூடாது. போய்விட்டால் மதம் போச்சுதென்கின்றனர். மதம் என்றால் என்ன? கொழுப்பு. இவர்களுடைய கொழுப்பு போய் விட்டால் யாருக்குச் சேதம். (கைதட்டுதலும், சிரிப்பும்) கோயில் மாட்டுக்கும் சாதாரண மாட்டிற்கும் வித்தியாசமிருக்கிறதல்லவா? அதேபோல் அவர்கள் கோயிலை வைத்து, மதத்தை வைத்து, வேதத்தை வைத்து, மதத்து, கொழுத்துப் போயிருக்கின்றனர். (கைதட்டுதலும், கொல்லென்ற சிரிப்பும்) திருநெல்வேலியில் சந்தியாசி கிராமத்தில் நடந்ததை, நீங்கள் அறிவீர்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தென் ஆப்பிரிக்காவில் அப்படிக்கொடுமை செய்கின்றனர், இந்தியர்களை நடக்கவிடமாட்டேனென்கின்றனர் என்று சொல்லுகிறார் திரு. சத்தியமூர்த்தி. அப்படி அது அந்தப் பிரதேசத்தில் நடக்கிறது. உன்னுடைய தேசத்தில் "சூத்திரனை" நடக்க விடமாட்டேனென்கிறாயே, இது அக்கிரமமல்லவா என்றால் இது மதம் சாஸ்திரமென்கின்றார். இது இவருடையமத (கொழுப்பு)மல்லவா (சேவலம், சேவலம்) இதைச்சொன்னால் நாம் பாதகர்களாம்; நாத்திகர்களாம். இது எவ்வாறு பொருந்தும். ஆதிதிராவிட சகோதரர்களைக்கோவிலுக்குள் விடுங்கள். அவர்களும் நம் சகோதரர்களல்லவா வென்றால் உடனே கோபம் வந்து விடுகிறது மூக்குவரையில் சைவர்களுக்கு. இவர்களுக்கு 2வது இடம் கிடைத்திருப்பதால் இப்படிச் செய்கின்றனர் போலும் ஜப்பான் 100 வருடங்களுக்கு முன்னால் முன்னேற்ற மடையாமல் நம்மிடமுள்ள அடிமைப் பழக்க வழக்கந்தைக்கைக் கொண்டிருந்தது. எப்பொழுது அதை அது விட்டொழித்து சகோதரத்துவத்தைக் கைக்கொண்டதோ அன்றே முன்னேற்றமடைய ஆரம்பித்தது. இப்பொழுது இந்தியா மார்க்கட்டையே வாங்கி விட்டார்கள் நாளுக்கு நாள் முன்னேறுகின்றனர். அந்நிய நாட்டாரோடு சண்டை செய்கிற நீங்கள் நமக்குள் சண்டையின்றி சகோதரத்துவத்தை சில நாட்ட வேண்டும். "திராவிடன்"


# A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.



எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "பிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். வில்லிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும் வீணிலே வில்லிண்டர் கடியாரங்களில் பணத்தை யிழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,


119, G, P. O. MADRAS.



## பாக்கெட் டிடக்டிவ்

அல்லது

### லீபாக்ராஸ் கோப்



என்னும் நூதன அமெரிக்கக் கருவியை அசலுக்கும் குறைந்த விலைக்குக் கொடுக்கிறோம். இக்கருவியினால் திரும்பிப் பாராமலே உங்கள் பின்னேயும் முன்னேயும் நடப்பதைத் தெரிந்து கொள்ளலாம். உமது காதலியின் செய்கைகளை அவளறியாமலே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். இக்கருவி வெகு தமாஷை உண்டு பண்ணும். ஒவ்வொருவருக்கும் அவசியம். நான்கு லீலாவினோத பிரெஞ்சு போட்டோக்கள் இனாமாக அனுப்பப்படும். ஒரு கருவியின் குறைந்த விலை ரூ. 1-- 8—0.

இன்டோ பாரின் கம்பெனி,

கே. 27 பீட், ஜி. டி. மதராஸ்.



ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்தவைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர் !!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

நீங்கள் என்று மழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால் பழனி சி. எம். சாமி

மகா வீரிய **தங்க பஸ்பம்** சாப்பிடுங்கள்

தாதுபுஷ்டியில் மன்மதனுக்கோப்பாவீர்கள். பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், சபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனுக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

48 நாள் பஸ்பம் ரூபா 20—0—0. 24 நாள் பஸ்பம் ரூபா 10—0—0.

### குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேக வெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ.15.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, சபச்சட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி, 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 16.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

மலாய் நாட்டிலுள்ளவர் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழநி, S. I.

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மனிதனே அவனுடைய செயல்கள் இகழ்ச்சிக்கு இடமானவைகளே" என்று எடுத்துக் காட்டுகிறார். இதை எந்த அறிஞர் தான் மறுக்க முடியும்?

இராமன் தம்பியை நோக்கி "சீதை பேதைப் பெண்பால். நீ அறிவுடைய ஆண்மகன். ஆதலின் நீ அவளை அவளுடைய பேச்சுக்காகச் சினந்து தனியேவிட்டு வந்தது தவறு" என்கிறான். இவ்விடத்திலும் நமது மொழிபெயர்ப்பாளர் ஐயங்கார் குறிப்பு கவனிக்கத்தக்கது. அவர் பக்கம் 155ல், "இந்த உபதேசத்தை கைகேசி விஷயத்தில் தான் ஏன் காட்டக்கூடாது? இலக்குவனுடைய நிலையில் இராமன் இருந்தால் என்ன செய்திருப்பானோ தெரியவில்லை." என்று குறித்திருக்கிறார். இது மிகவும் பொருத்தமானதே. இராமன் தனக்கொரு வழக்கும் பிறர்க்கொரு வழக்கும் பேசும் இழிசெயலினனென்று முன்னரும் விளக்கினோம்.

இராமன் இலக்குவனை நோக்கி, "நீ சீதையிடத்தில் என்னிடம் வருவதாகச் சொல்லிவிட்டு, அங்கே எங்கேயாவது மறைந்திருந்து அவளைக் காப்பாற்றலாகாதா?" என்று வினவுகிறான். மொழிபெயர்ப்பாளர் ஐயங்கார் இவ்விடத்தில் (பக்கம் 155) "இராமனிடத்திற்குப் போகிறேனென்று சீதையிடத்தில் சொல்லிவிட்டு அப்படிச் செய்யாமலிருப்பது பொய்யல்லவென்றும் சீதையை ஏமாற்றுவதாகாதென்றும் இராமன் நினைப்பது போல் தோன்றுகிறது" எனக் குறித்திருக்கிறார். இராமன் ஏமாற்றுக்காரனென்பதும் பொய்யனென்பதும் பொய் சொல்லப் பிறரைத் தூண்டுபவன் என்பதும் சுமந்திரனிடத்தில் அயோத்தியை விட்டுப் புறப்படும்போது பேசியது முதலிய பலஇடங்களில் விவரமாக எடுதது்க் காட்டினோம் அதற்கேற்ப ஈண்டும் இராமன் தன் தம்பியை தன் மனைவியிடமே பொய் புகன்று ஏமாற்றியிருக்குமாறு கூறுகிறான். இவ்வறிவீனனாகிய இராமனுடைய அற்பச் சித்தையிலே இலக்குவன் பொய் புகன்று மறைந்திருப்பதைச் சீதை கண்டுவிட்டால் அவள் அவனைப் பற்றி என்ன நினைப்பாள், என்ன செய்திருப்பாளென்ற எண்ணமே தோன்றவில்லை

இராமன் சருக்கம் 27ல் மாரீசனை எவ்வளவோ சிரமப்பட்டுக் கொன்றேன் என்கிறான்; சருக்கம் 59 ல் விளையாட்டாக அம்பெய்துகொன்றேனென்கிறான். இராமனுடையபொய்த் தன்மை இங்கும் கவனிக்கற்பாலது. இதை நமது ஐயங்காரும் சருக்கம் 59, பக்கம் 156ல் "57 அத்தியாயத்தில் எவ்வளவோ சிரமப்பட்டு அவனைக் கொன்றேனென்று இராமன் சொன்னதைக் கவனிக்கவும்" எனக் குறித்திருக்கிறார்.

இராமன் சீதையை நினைந்து நினைந்து அழுது கண்ணீர் விட்டுக் கதறுகிறான். அவன் பட்டபாட்டையும் அழும் அழுகையையும் விவரிப்பதற்கு வால்மீகிக்கு ஐம்பத்தேழு முதல் அறுபத்தாறு முடிய உள்ள பத்து அதிகாரங்களிலும் முடியவில்லை. இராமன் சீதையைக்காணவில்லையென்றால் தன் உயிரையும் விட்டுவிடுவதாகத் துணிகிறான். இலக்குவன் பலமுறை தேற்றியும் அவன் கவலை தீர்ந்தபாடில்லை; ஓயாமல் அழுது புலம்பினான். இராமன் மரங்களையும் மலைகளையும் உயிருள்ளனபோல வினவுகிறான். பல தடவை மூர்ச்சையடைகிறான். பெரு மூச்சு விட்டுக் கதறுகிறான். தான் முற்பிறப்பில் செய்த பாவத்தின் பலனே இங்ஙனம் விளைந்ததென்று ஓலமிட்டான் இராமன். இராமனே இவ்வாறு அற்பனாக ஓலமிட அதை வால்மீகி பெழுத சிலர் இன்னும் அவனைத் தெய்வம் என்கின்றனரே! இவ்வாறு ஓலமிட்டு அறிவிழந்து திண்டாடுவதுதான் தெய்வத்தின் தன்மையோ? இவ்வாறு முற்பிறப்பின் வினையை நினைந்து அழுவதுதான் தெய்வத்தின் தன்மையோ? அறிஞரே! சிந்தியுங்கள். சிந்தித்து இராமனைத் தமிழ் மக்களின் பகைவனாகிய ஓர் அற்ப மனிதனென்று தெளியுங்கள். உங்கள் உற்றார் உறவினர்களுக்கெல்லாம் இவ்வுண்மையை எடுத்துச் சொல்லிப் பரப்புங்கள்.

இராமன் சீதையிடத்தில் மோகம் மிக்கவன், அவளும் இராமனிடம் காம இன்பம் அனுபவிக்கவே அவனோடு காட்டுக்கு வந்தாளென்று நம் முன் கட்டுரைகளில் பல இடங்களில் விளக்கி வந்த உண்மைகள் இங்கே மிகவும் வலியுறுகின்றன. இராமன் கொக்கோக நூலின்படி லீலைகள் புரிவதில் தான் நிபுணனென்றும், அயோத்தியில் தன்பெற்றோரிடையே அவைகளை மனம் போனவாறு புரிய இடமில்லாமல் இருந்தானென்றும், காட்டிற்கு வந்தபின் கூச்சமில்லாமல் எவருடைய நிர்ப்பந்தமுமில்லாமல் மனம் போனபடியெல்லாம் காம லீலைகள் செய்து வந்ததாகவும் கூறுகிறான். இது மிகவும் உண்மையே! அயோத்தியில் இவன் தனி மாளிகையில்தானே சீதையுடன் வாழ்ந்தான்? பின் ஏன் மனம் போனவாறு நடக்க முடியவில்லை? என்றால் இவன்தான் தசரதனுடைய மனத்தை மகிழச் செய்வதிலே அவனுடனேயே இருக்க வேண்டியவனாக இருந்திருப்பானே? அதனால் இவன் கூறுவது உண்மைதான், இல்லையானால் தசரதன் தான் நீமுன் கேகயனுக்குச் செய்து கொடுத்த வாக்கையும் மாற்றத் துணிந்து இராமனை முடிசூட்டித் தன் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள முயல்வானா?

இராமன் சீதையைநினைந்து புலம்பும்போது அரக்கர் அவளுடைய கழுத்தைக் கடித்து இரத்தத்தைக் குடித்திருப்பர் என எண்ணுவதோடு அவளுடைய உருண்டு பருத்து அழகாயிருக்கும் கொங்கைகளையும் அழுத்துத் தின்பார்களே என்று கதறுகிறான்! இதனால் இவன் சிந்தையின் இழிதகைமையைச் சிந்தியுங்கள்! இவ்வாறு காமப்பித்துக் கொண்ட இராமன் சூரியனையும் காற்றையும் மலையையும் வினவி அவைகளை அதட்டி நொறுக்கி விடுவேன் என்கிறான்! ஆற்றை வற்ற வைப்பேன் என்கிறான். உலகத்தையே அழிப்பேனென்கிறான்! ஒருவன் செய்த தீமைக்காகப் பலரையும் அழிப்பேனென்பது அறிவற்ற செயலென்று இலக்குவன் எடுத்துக்காட்ட ஒருவாறு அமைகிறான். இராமன் "மாயங்கள் வல்ல அரக்கரோடு பகை தேடிக் கொண்டேன்" என்று மிக வருந்துகிறான். இனி இலக்குவன் செயலை ஆராய்வோம்.

இலக்குவன் உண்மையில் சீதையைக் கைப்பற்றுமாறுதான் எண்ணியிருந்தானென்பதும் அதனாலேயே அவன் சீதை முன் அவள்ஐயுறுமாறு நடந்து கொண்டானென்பதும் முன் கட்டுரையில் ஆராயப்பெற்றது. அதற்கேற்பவே அவனுடைய பின் செயல்களும் உள்ளன. இலக்குவன் உண்மையில் தப்பான எண்ணம் இல்லாதவனானால் இராமனையடைந்தவுடன் தன் செயலையும் சீதையின் கொடிய பேச்சையும் கூறியிருப்பான் அவனுக்கு இராமனுடைய தன்மைதெரியும். தான என்ன சொன்னாலும் அவன் நம்பானென்று கள்ள விழி விழித்துக் கொண்டு நின்றான். பின்னரும் குடிசை குலம், கூரையும் கூறவில்லை. அவன் சீதைஅங்கேஇருப்பாளென்றும் தன் இழி செயலைக் கூறுவாளென்றும் எண்ணி அஞ்சிக் குடிசைவாசலிலேயேநிற்கிறான். இராமன் உள்ளேசென்று சீதையைக் காணாமல் அலறிக் கொண்டு வெளியே வந்து வினவியபோதுதான் அவன் கொஞ்சம் துணிவுடன் நிகழ்ந்ததைக் கூறுகிறான். இதை வலியுறுத்துமாறே இலக்குவனுடைய பின்னைய பேச்சும் இருக்கிறது. அதாவது "சீதைகாடுகளில் அலைவதில் விருப்பமுடையவள். அதனால்எங்காவது காட்டில் வேடிக்கையாக அலைந்து கொண்டிருப்பாள். அல்லது குளத்திலோ ஆற்றிலோ நீராய் போயிருப்பாள். அல்லது நாம் அவளைத் தேடிப்பிடிக்கட்டுமென்று எங்காவதுஒளிந்து கொண்டிருப்பாள்" என்று கூறுகிறான். இலக்குவனுக்கு சீதை அப்போதிருந்த நிலை நன்றாகத்தெரியும். அவன் இராமன் அரக்கரால் கொல்லப்படும் நிலைமையில் இருந்து கதறினான் என உண்மையில் எண்ணிப் படாதபாடு பட்டு இலக்குவனை அனுப்ப முயலுகிறாள். அவள் தன்னைக் கைப்பற்ற நினைந்திருக்கிறானென்று உண்மையில் நம்பி தீயில் விழுவேன். எப்படியும் உயிரைப் போக்கிக் கொள்வேனென்று பல வாறு அழுது விடுகிறாள். இந்நிலையினளாகிய சீதைக்கு அப்போது காட்டில் உலாவப்போகவும் குளத்திலோ ஆற்றிலோ நீர்விளையாடப்போகவும் ஒளிந்து விளையாடவும் மனம் போயிருக்குமோ இதனை நன்கு அறிந்திருந்த இலக்குவன் இவ்வாறு பேசியது அவனுடைய வஞ்சக மனத்தையே மேலும் புலப்படுத்தும் இராமன் இதை மித மிஞ்சிய கவலையால் அறியானாயினன். மேலும் இராமனுக்கு இலக்குவனை வஞ்சகனெனத் தெரிந்தாலும் வேறு துணையின்மை பற்றி அடக்க மூடைமையே அவ்வேளையில் அறிவுடைமை என்பதும் தெரியும்

பின் இலக்குவன் ஆற்றங்கரையில் போய்ச் சீதையைத் தேடவும் துணிகிறான். சீதைக்கும் இலக்குவனுக்கும் நிகழ்ந்த மாறுபாட்டால் அவனை வேறு பிரிக்கும் வரையும் மறைந்திருப்போம் தனித்து இராமனிடம் தோன்றிச் செய்திச் சொல்லவென்று சீதை மறைந்திருந்தாலும் இருக்கலாமென எண்ணி ஒருவேளை இராமன் இலக்குவனை நோக்கி அவளைத்தேடத்தனித்து அனுப்பியிருந்தாலும்இருக்கலாம்எவ்வாற்றானும்சீதையைக் காணமுடியாமற் போகவே இராமன் அறிவழிந்து அலறுகிறான். தம்பி பலவாறு சொல்லியும் கேட்கவில்லை. இலக்குவன் கடைசியாக இராமன் அழுவதையும் அவனிடம் மகா மோகத்தோடிருப்பதையும், உணர்ச்சியற்றவனைப் போலவே இருப்பதையும் கண்டு "சீதையை எவன் தூக்கிப் போனால் என்ன? அல்லது அவள் செத்தாலென்ன? வீரராகிய நீர் கவலையடையாதேயும்" என்று கூறுகிறான். இதனால் அவனுடைய மனநிலை எவ்வளவு தீயதென்று உணரலாம். தனக்கு இசையாத சீதை இருந்தென்ன போயென்ன என்று இவ்வாறு கூறினான் போலும்! இனி கம்பர் போக்கைக் காண்பாம்.

தன்னைச் சீதை வைததை இலக்குவன் குடிசையுட் சென்று மீண்ட இராமனிடம் கூறியதாக வால்மீகி கூற அவன் இராமனைக்கண்டவுடனே கூறியதாகக் கம்பர் கூறுகிறார். "நீ போகவில்லை யென்றால் நெருப்பில் விழுவே"னென சீதை கூறிக் கானகத்தில் ஓடினதாக இலக்குவன் கூற்றால் கம்பர் கூறுகிறார் இது புதுக்கதையே.

இராமன் பட்டபாடுகளையெல்லாம் வால்மீகி பத்து அதிகாரங்களின் மேற்படக்கூற கம்பர் அதனை இரண்டொரு கவிகளிலேயே கூறினார். இராமன் புலம்பியபோது கூறிய இழிமதிச் சொற்களையெல்லாம் கம்பர் மறைத்தார். ஏனெனின் இராமனைத் தெய்வத்தன்மையிற் குறைத்ததாம் என எண்ணிப் போலும்! வில் முதலியவைகளெல்லாம் ஓரிடத்திலேயே முறிந்து கிடந்திருக்க வெகு தூரத்துக்கப்பால் அவை கிடந்ததாகக் கம்பர் கூறினார். இராமன் அறிவிழிந்தவனாய் உலகத்தை அழிப்பேனென்று கூறிய செய்திகளையும் இலக்குவன் அவனுக்கு நல்லறிவு புகட்டியதையும் இவ்விடத்தில் கூறாது மறைத்ததோடு கம்பர் இலக்குவனுடைய செயல்களையும் மாற்றிக் கூறினார். இனி மேற் செல்லுதும்.

## சுயமரியாதைத் திருமணங்கள்

அருப்புக்கோட்டைக் கடுத்துள்ள சவ்வாசுபுரத்தில் 10-7-29 புதன் கிழமை ஷை யூர் சிங்கம ரெட்டியார் மகன் திருவளர்செல்வன் ரெங்கசாமி ரெட்டியாருக்கும் ரெங்கசாமி ரெட்டியார் மகள் திருவளர் செல்வி சங்கரம்மாளுக்கும், ஷை சிங்கம ரெட்டியார் மகன் திருவளர் செல்வன் ராமசாமி ரெட்டியாருக்கும் சுப்பா ரெட்டியார் மகள் திருவளர் செல்வி பாலம்மாளுக்கும், ஷை யூர் கிருஷ்ண ரெட்டியார் மகன் திருவளர் செல்வன் ரெங்கசாமி ரெட்டியாருக்கும் திருவிருந்தாள்புரம் ரெங்கசாமி ரெட்டியார் மகள் திருவளர்செல்வி நானம்மாளுக்கும் சவ்வாசுபுரம்குமாரசாமி ரெட்டியார் மகன் திருவளர் செல்வன் நாராயண ரெட்டியாருக்கும் சிதம்பரபுரம் காசிரெட்டியார் மகள் சிங்கம்மாளுக்கும் பார்ப்பனீய மொழிந்த சுத்த சுயமரியாதை திருமண வைபவங்கள் நிகழ்வுற்றன.

முந்திய இரு திருமணங்கள் ஷை யூர் ஸ்ரீமான் கண்ட்ராக்ட் நாராயண ரெட்டியார் அவர்கள் நன் முயற்சியாலும் பிந்திய இரு திருமணங்கள் முத்து ராமலிங்கபுரம் போர்டு பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீவான் ஜான் ரெட்டியாரவர்கள் நன்முயற்சியாலும் இம்முறையில் நடைபெறத்தக்க எற்பாடுகள் செய்யப் பெற்றன. இந்நான்கு மணங்களும் முத்துராமலிங்கபுரம் ரெட்டி வாலிப சுயமரியாதைச்சங்கத்தாரால் வெகு மங்களகரமாக நடத்தி வைக்கப்பெற்றன.

இவ்வூரில் நாளது தேதியில் நடைபெற்ற ஐந்து திருமணங்களில் ஒரே ஒரு மணந்தான் பார்ப்பன புரோகிதத்தின் மூலம் நடைபெற்றது இதிலிருந்து பொது ஜனங்களின் உள்ளத்தில் சுயமரியாதைக்கொள்கை எவ்வளவு தூரம் வேருன்றியிருக்கின்றதென்பது பகுத்துணர்வுள்ள எவருக்கும் விளக்காமற் போகாது என்று தி. அ. வெங்கடசாமி எழுதுகிறார்.

*　*　*

கோபிதாலுக்கா கரிய கவுண்டன் பாளையம் திரு. கொண்டப்ப செட்டியார் மகன் திரு. கந்தசாமி செட்டியாருக்கு 8-7-29ந் தேதி பார்ப்பனீயம் ஒழிந்த சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றதாக ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

*　*　*

மேலூர் தாலுகா கற்பூரம் பட்டியில் காணம் திரு. சூரியநாராயண பிள்ளை மகன் திரு. ரத்தினம் பிள்ளைக்கும், திரு. மு. துரைசாமி பிள்ளை மகள் திருசிறை செல்வி ரத்தினம்மாளுக்கும் 8-7-29ந் தேதியில் பார்ப்பனீயம் ஒழிந்த சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது என்று ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

---

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ரியாதைச் சங்கத்தின் தத்துவங்களென்றுணர்ந்து அவைகளை ஆராய்ந்து எல்லாருக்கும் சொல்லி அநீதியை ஜனசமூகத்தினின்றும் இருந்து போக்குவதற்கு அவர்களால் வேண்டிய முயற்சிகளைச் செய்யும்படியாக உங்களை யெல்லாம் கேட்டுக் கொள்ளவே வந்திருக்கிறது.

"குடி அரசு"க்குப் பெரியவர்களின் ஆசீர்வாதமில்லாமலில்லை. "குடி அரசை" ஆசீர்வதித்து சமூகத்திற்குத் தொண்டு செய்யும்படியாக முதன் முதல் அனுப்பினது படிப்பிலும் உண்மையிலும் பெரியவரான ஸ்ரீ ஞானியாராவர். அவருடைய உண்மை சங்கற்பமும் "குடி அரசின்" சத்தியக் கொள்கையுமே உங்கள் முன் ஜனப்பிரகாசத்துடன் அதுரிப்பதற்குக் காரணமுமாகும்.

(தொடரும்)


### ஸ்ரீகிருஷ்ணனந்த கோதம பரிமள ஸ்டோர்

**துணம் குன்றாது! மணம் மாறாது!**

எங்களிடம் குளிர்ந்த சந்தனாதித் தைலம், வாசனைமிகுந்த அரைக்கீரை விதைத் தைலம், மயிர் வளரும் கோபிகா கூந்தல் தைலம், பற்பொடி, உயர்ந்த ஊதுவத்தி தினுசுகள், புனுகு, ஜவ்வாது, அரகஜா, பன்னீர் இன்னும் அநேக வாசனை சாமான்கள் கிடைக்கும். இனமாக கேட்டால் அனுப்பப்படும்.

எங்களிடம் 20 குதிரை ஒட்டமுள்ள (*Second Hand*) ஆரன்ஸ் பீ குருடாயில் இஞ்சின் செட்டுடன் விற்பனைக்குத் தயாரில் இருக்கிறது. வேண்டிய விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம்:—

மானேஜர்

ஸ்ரீகிருஷ்ணனந்த

கௌதம பரிமள ஸ்டோர்,

வலங்கைமான்

(*Via*) கும்பகோணம்.

---

ஒரே மணி நேரத்தில்
ஆச்சரிய குணமுண்டு.

### மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0

ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,

(4-பி) தபால்பெட்டி 119, மதராஸ்.



## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டில்

### உங்கள் உயிரை இன்ஷியூர் செய்யுங்கள்

எல்லா இந்தியக் கம்பெனிகளிலும், அயல்நாட்டுக் கம்பெனிகள் பெரும்பான்மையானவற்றைப்பார்க்கிலும் இந்தக் கம்பெனிக்கு அதிக மூலதனம் இருக்கிறது.

நீங்கள் போடுகிற பணத்துக்கு அதிக பாதுகாப்பு உண்டு.

தயவுசெய்து தங்கள் விலாசம் தெரிவித்தால் எமது பிரதிநிதி நேரில் வந்து தங்களைக் கண்டு பேசுவார்.

அந்தஸ்தும், செல்வாக்குமுள்ளவர்களிடமிருந்து ஏஜெண்டு வேலைக்கு மனுக்கள் தேவை.

**கிளை ஆபீஸ்,** 4 பர்ஸ்ட் லேன் பீச், சென்னை.

| | | | |
|---|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற | ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான | ,, | ... ரூ. | 71,21,055. |

(566)



ஆச்சரியமான குணம்! உயர்ந்த முறை!! அசல் மகா சந்தனாதி இதுதான்!!!

## மஹா சந்தனாதித் தைலம்

ஆனந்த விகடன் ஆசிரியர்,

எஸ். எஸ். வாஸன் அவர்களால் தயாரிக்கப்பட்டது.

அநேக மூலிகைகளாலும், கடைச் சரக்கு கஸ்தூரி, கோரோஜனம், குங்குமப்பூ சட்டம், புனுகு முதலிய விலை உயர்ந்த சரக்குகளால் கை முறை செய்முறை தவறாமல் முறைப்படி செய்தது.

எவரேனும் அசல் மஹா சந்தனாதி தைலம் அல்லவென்று நிரூபித்தால்

ரூபாய் 100 இனாம்.

இதனால் உஷ்ணரோகம், வெட்டைச் சூடு, பிரமியம், நீரழிவு, நீர்சுருக்கு, க்ஷயம், ஈளை, காசம், மூச்சு, கண் எரிவு, கண் புகைச்சல், மண்டைக் குடைச்சல், கீல்வாதம், பக்கவாதம், வரட்சி, பித்தமயக்கம், சோகை, காமாலை, பிரமேகம், கிரந்தி, கற்றாளை நாற்றம், அஸ்திசுரம், அஸ்தி வெட்டை, மயிர் உதிர்தல், விஷபாகம், குஷ்டம், கண்டமாலை, பிளவை இவைகளை ஆச்சரியப்படும்படி வெகு சீக்கிரத்தில் தீர்த்து விடுகிறது. நல்ல இரத்தம் ஊறி, சரீர ஆரோக்கியத்தையும், வசீகரத்தையும் உண்டாக்குகிறது நரை திரை அற்று நீண்ட காலம் ஜீவித்திருக்கச் செய்கிறது. 1 புட்டி ரூபாய் 5—0—0 தான் தபால் சார்ஜ் வேறு.

வாஸன் புஸ்தகசாலை,

244, தங்கசாலை வீதி, மதராஸ்.


முக்கிய குறிப்பு:—இந்த தைலத்தை எமது சொந்த பிரயோகத்திற்காகவே நாம் இதுவரை செய்து வந்தோம். சில நண்பர்களுக்குக் கொடுத்ததின் பேரில் அவர்கள் இதன் குணங்கண்டு ஆச்சரியப்பட்டு இத்தகைய உயர்ந்த தைலத்தைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தால் ஜனங்களுக்கு நன்மை செய்ததாகும் என்று வற்புறுத்தியதன் பேரில் இவ்விளம்பரம் செய்யலாயிற்று. நம்பினோர் நலமடைவர்.

(599-எ)　　எஸ். எஸ். வாஸன்

அதி நூதனம் ! மிக ஆச்சரியம் !!

மாதம் 100 ரூபா முதல் 300 ரூபா வரை சம்பாதிக்கக்கூடிய

## சிறிய சைஸ் தையல் இயந்திரம்



•• இது சாதாரண பெரிய தையல் மெஷின்களைப் போலவே சிறிய சைஸில் உள்ளது. இதை மேஜையின் பேரிலோ நாற்காலியின் பேரிலோ வைத்து முடுக்கி எந்தவிதமான தையல் வேலையும் செய்யலாம். தையற்காரர்களிடம் நீங்கள் போகவேண்டிய அவசியமேயில்லை. தையற்காரர்களும் 100, 200 போட்டு பெரிய மெஷின்கள் வாங்க வேண்டியதில்லை. சட்டைகள், கோட்டுகள் முதலியன எதுவும் இலகுவில் தைக்கலாம். இந்த மெஷினில் ஒரு குழந்தையும் வேலை செய்யலாம். இதைச் சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் போட்டு ஜாக்கிரதையாகப் பாக்கிங் செய்து அனுப்பப்படும். 5 வருஷம் காரண்டியுள்ளது.

விலை ரூபா 4-12-0. தபால் செலவு வேறு.

உடனே எழுதுங்கள்.

Agents:—
PARIS EMPORIUM George Town, Madras.

## சுயமரியாதை மாகாணச் சங்கம்

காரியதரிசி,

சுயமரியாதை மாகாணச் சங்கம்,
"திராவிடன்" பதிப்பகம்,
14, மவுண்ட் ரோடு சென்னை.

ஐயா,

என்னைத் தங்கள் சங்கத்தின் அங்கத்தினராய்ச் சேர்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளுகின்றேன். இத்துடன் ஓர் ஆண்டு கட்டணம் 0—2—0 அனுப்பியிருக்கிறேன்.

பெயர்..............................................

விலாசம்..............................................

..............................................

(இதில் கையொப்பமிட்டு வெட்டி அனுப்பவும்)

(F)

## குடி அரசு புத்தகாலயம்

வேதப்புரட்டை வெளியாக்கும்,

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |

விலாசம்:—

**மானேஜர், குடிஅரசு புத்தகாலயம்,**
14, மவுண்ரோட், மதராஸ்.

(எப்)

## மாதர்களுக்கு வரப்பிரசாதம் !

கர்ப்பத்துக்குப் பின்னர் இளம்பெண்கள் பலவீனமேற்பட்டு உடல் தளர்ந்து சரியான உழைப்புக்குச் சக்தியின்றி இல்வாழ்க்கையில் ஈடுபட யோக்கியமில்லாமல் போவதை அநேக குடும்பங்களில் பார்த்திருக்கிறோம். பலவீனம் காரணமாக பல வியாதிகளும் ஏற்படுகின்றன. இதைத் தடுத்து அந்த இளமாதர்களுக்குத் தேகபுஷ்டியுண்டாக்க அந்தந்தக் குடும்பத்தார் முயற்சித்தாலும், சரியான ஔஷதங்களைத் தேடாததால் ஏமாறுகின்றனர். அதன்பொருட்டே நாம் பிரத்தியேகமாக நூற்றுக்கு மேலான சத்துவகைகள் சேர்த்து பெண்களுக்குத் துணையாக

### "வதூ வீர்" லேகியம்

என்பதைத் தயாரித்திருக்கிறோம். ஒரு மண்டலம் சாப்பிட ...

... ஒரு டின் விலை ரூ. 3—0—0 தான். ...

ஒரே டின் சாப்பிட்டால் நீங்கள் ஸ்திரீகளின் பலவீனம் மறைந்து தேகபுஷ்டியும் மினுமினுப்பும் உற்சாகமும் அவர்கள் அடைவதைக் காணலாம். உடனே எழுதுங்கள். தபால் செலவு வேறு.

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, மதராஸ்.

(30)

உங்கள் ஒவ்வொருவருக்கும், தினசரி உபயோகப்படுவதாயும், இன்றியமையாத தாயுமுள்ள 459 சாமான்கள் கொண்ட

## எங்கள் "இன்டோ - பாரின் கேஸ்"




விலை வெகு சரசம் ரூ. 3-8-0 தான்
தபால் செலவு 0-10-0 தனி.


சாமான்கள் விபரம்:—1 உயர்ந்த பூட்டு சாவி, 1 நூதன கைக்குட்டை, 1 இங்கி புட்டி, 1 ப்ளாட்டிங் பாட், 1 வீட் குண்டூசி, 100 லெட்டர் பேபர், 50 உயர்ந்த கவர்கள், 6 அழகிய பென் ஹோல்டர்கள், 6 மேலான பென்சில்கள், 48 நிப்புகள், 144 இங்கி மாத்திரைகள், 100 சாதா கார்டுகள். இத்தகைய செட் ஒருவரும் இக்குறைந்த விலைக்குக் கொடுத்ததில்லை. உடனே எழுதுங்கள்.

INDO-FOREIGN CO.,
Mint St., Sowcarpet, Madras.

(30)

முந்துங்கள் ! முந்துங்கள்!!

## விலை ரூபா 2—12—0 தான் !



130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி சாமான்கள் விவரம்.

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷை ஷர்ட்டு பொத்தான்கள் செட் 12; ஷை சல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காமிரேஷன் நூதனசாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
தபால்பெட்டி 119, மதராஸ்.

(3)

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

## சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief For Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்துப் பார்ப்பதவசியம்.


48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடியடப்பி 1க்கு ரூ. 1—4. தபாற்கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8. அனுப்பவேண்டும்.

புரொப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(12) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.



## எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை

ரோல்டு கோல்டு "கோல்டன்" புது மாடல் கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த வேஷப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்தரவாதமானது.

ரூபா 4—15—0 வி. பி. வேறு.

ஜீனன் வாட்சு கம்பெனி,
(3) மிண்ட் பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



பழனி

## ஆர். எம். நாராயணசாமி பிள்ளை

### அவர்களின் அமிர்த சஞ்சீவி மாத்திரை

சகல வியாதிகளுக்கும் தேவ அவுஷதமென உலக மதித்தது.

### தீரும் வியாதிகள்

குஷ்டம் 18க்கும், மேகம், 20க்கும் 7 வித் காசம்க்ஷயம், ஈளை, இருமல்கட்டும், குன்மம், வயிற்று வலி 8க்கும் இவ்வித கொடியரோகங்கட்குத்தக்க அனுபானத்துடன் அமிர்த சஞ்சீவி மாத்திரை ஒரு மண்டலம் விலை ரூ. 5-0-0. ½ மண்டலம் ரூ. 3-0-0. ஆர்டர் செய்வோர் வியாதி விபரம் தெளிவாய் எழுதவேண்டும்.

### அமிர்த சஞ்சீவி மாத்திரை

சுரம் 64, வாதம் 80, பித்தம் 48, வாய்வு 300, ஜன்னி தோஷம், இரிவு, வலிப்பு, சயித்தியம் 108, ஸ்திரீகள் மாதாந்திர ஒழுக்கமில்லாத கெர்ப்பநோய் சம்பந்தமான வயிற்றுவலி சகலத்திற்கும், சகல பாம்புக்கடி, பொரி விஷம், கடிவிஷம் 800 முதலிய தீராதரோகமெல்லாம் நமது அமிர்த சஞ்சீவி மாத்திரை தீர்க்க வல்லமை உடைய தென்பதை யாவரும் எளிதில் வாங்கி உண்மை தெரியுமாறு சொற்ப விலைக்குக் கொடுக்கப்படுகிறது.

டை மாத்திரை சுகபேதிக்கும் சாப்பிடலாம்
புட்டி 1 க்கு ரூ. 2-0-0. சிறிய புட்டி ரூ. 1-0-0.
தபால் செலவு வேறு.

வைத்தியபதி R. M. நாராயணசாமி பிள்ளை,
(27) அமிர்த சஞ்சீவி டிட்போ, பழனி, S.I.Ry.



## நான் யார் தெரியுமா?

ஒரு வருஷத்திற்குள் 8000 பிள்ளைகளைப் பெற்றவன், நான்!



என்னைப்பற்றி எந்த ஊரிலே வேண்டுமானாலும் கேளுங்கள். எங்கப்பன் மாதா மாதம் வந்து எங்களைக் குதூஹலப்படுத்தி விட்டுப் போகிறானென்று பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். தினசரி முப்பது அல்லது நாற்பது புதிய பிள்ளைகளைப் பெற்று வருகிறேன். இன்னும் சலிக்காமல் இருக்கிறேன். குறைந்த பட்சம் 30,000 பிள்ளைகளையாவது பெற வேண்டுமென்பது நோக்கம். ஆனால், அப்பனைப் பார்க்கவேண்டுமானால் காசு கொடுத்துத்தான் பார்க்கவேண்டும். வருஷா வருஷம் 1 ரூபாய் கொடுத்தால் என்னை வருஷத்திற்குப் பன்னிரண்டு முறை பார்க்கலாம். ஒரு தடவை மாதிரியாகப் பார்க்கவேண்டுமானால் அரையணா செலவு செய்து ஒரு கார்டு எழுதுங்கள். மறுநாளே உங்கள் இருப்பிடம் தேடி வந்து குதித்திடுவேன். என் பெயர் படத்தில் பாருங்கள். என் இருப்பிடம்,

(3) 244, தங்கசாலை வீதி, சென்னை.



## மகா மன்மத சிந்தாமணி லேகியம்:

அபாரமான தாது புஷ்டியும், நீடித்த போக சக்தியும், இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும், பரமானந்த சுறுசுறுப்பும், தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2. லேகியம் டின் 1 க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.
(3)



## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்சில்கள், பதவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள்கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது.

ரூபா 1—8—0
உடனே எழுதுங்கள்.

வாலன் புஸ்தகசாலை,
(3) 244, தங்கசாலை வீதி, மதராஸ்.



## சிற்றின்ப வேற்றி

இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர் அனுபவிக்க வேண்டிய சம்சார சுகங்கள், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் ஆகிய அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. 475 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 2—4—0.

சரீர மர்ம சாஸ்திரம் 1—0—0
மூத்தத்தின் மர்மம் 1—8—0
மதனுகமம் 1—0—0

தபால் கூலி வேறு—விலை ஜாப்தா இனாம்.

விலாசம்:—

லக்ஷ்மண ப்ரசாத் கம்பெனி,
(25) (டிபாட் 19) புதுச்சேரி


திரு. ஜெ. எல். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.